கனடாவின் மூத்த தமிழ் இதழ்
19 வது வருடத்தில்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்
காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm
மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338
416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

Dr. Iru Vijayanathan
DENTAL SURGEON
DENTAL OFFICE
3150 Eglinton Ave. E., Unit 5
Scarborough, ON M1J 2H2
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Scarborough, ON M1X 0A6
Markaham & Steeles
Tel: 416.609.2022

நதி 19 பாலம் 21 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் NOVEMBER 01, 2009

# உலகம் முழுவதும் பரவும் H1N1

மிக வேகமாக உலகம் முழுவதும் பரவி 414,000 பேருக்கு மேலாக தொற்றை ஏற்படுத்தி, 5802 பேரின் உயிரைக் குடித்த H1N1 வைரசுக்கு எதிராக தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஏற்படும் இந்த வைரசு தொற்று மனிதர்களுக்கு எப்படி ஏற்பட்டது என்று தெரியவில்லை.

இயற்கையாக இந்த வைரசுக்கு எதிரான நோய்




அமெரிக்காவில் மட்டும் 160,129 பேருக்கு இந்த தொற்று ஏற்பட்டு 1,170 பேர் இறந்துள்ளனர். கனடாவில் 91 பேர் இறந்ததாக தகவல் கூறுகின்றது.

கனடாவில் இந்த நோய் அதிகமாக பாதிப்புகளை ஏற்படுத்தும் இடங்களில் இந்த தடுப்பு மருந்து உடனடியாக ஏற்றப்பட்டு வருகின்றது. இந்த இடங்களில் அந்த தடுப்பு மருந்தை எடுப்பதற்காக மக்கள் காத்திருக்கின்றார்கள். சுமார் மூன்று மணி நேரம் வரை இதற்காக காத்திருக்க வேண்டியுள்ளது. வைத்தியசாலை யில் வேலை செய்பவர்கள், ஐந்து வயதுக்கு குறைவான குழந்தைகள், கர்ப்பிணிகள், 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் உடனடியாக இந்த தடுப்பு மருந்தை எடுக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். மற்றவர்களை சில நாட்கள் பொறுத்து இருக்குமாறு சுகாதாரத் துறை கேட்டுள்ளது.

இந்த நோய்க்கு பன்றிக் காச்சல் என்றும் ஒரு பெயர் உள்ளது. பன்றிகளுக்கு இந்த நோய் வழமையாக ஏற்படும். ஆனால் பன்றிகளில் தடுப்பு உடலில் இல்லை. சுவாசத் தொகுதியான மூக்கு, சுவாசக் குழல், சுவாசப்பையில் பாதிப்புகளை ஏற்படுத்தி மரணத்துக்கும் வழிவகுக்கும் ஒரு அபாயகரமான நோய் இது.

இந்த வைரசு குளிர்காலத்தில் எவ்வாறு Influenza வைரசு எவ்வாறு பரவுகின்றதோ, அது போல தும்மும் போதும், இருமும் போதும் மற்றவர்களுக்கு பரவுகின்றது. அது மட்டுமல்ல கதவுக்குமிழ்கள், கைபிடிகள், உடுப்புக்கள் என்று பல இடங்களிலும் இந்த வைரசு சில நிமிடங்கள் உயிரோடு இருந்து தொற்றிக் கொள்ளும்.

இருமல், காச்சல், களைப்பு, உடல் நோ, தொண்டை நோ, தலையிடி, வாந்தி, வயிற்றுப்போக்கு என்பன இதன் அறிகுறி. வருத்தம் அதிகமானால் மூச்சுவிட சிரமம், நெஞ்சு நோ, தோலின் நிறம் நீலமாக அல்லது சாம்பலாக மாறும். சளியுடன் இரத்தம் வரும், இத்தோடு தலைச்சுற்றும் தொடர்ந்து வாந்தியும், கடுமையான காய்ச்சல் 3 தினங்களுக்கு மேல் ஏற்படும்.

மேலும் ... 5ஆம் பக்கம்

## இலங்கையை விட்டு கப்பலில் தப்பியோடிய தமிழர்

இலங்கையில் இருந்து மலேசியா ஊடாக படகில் சென்றுகொண்டிருந்த போது இந்தோனிசிய கரையோர பாதுகாப்பு பிரிவினரால் தடுத்து நிறுத்தி இந்தோனேசியாவில் மெரிக் துறைமுகத்தில் 258 பேர் கப்பலிலேயே ஒக்ரோபர் 11ஆம் திகதியிலிருந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 32 சிறுவர்களும் 27 பெண்களும், 199 ஆண்களும் அடங்குவர். இதில் நான்கு பேர் 65 வயதைத் தாண்டியவர்களாவர். தாம் உலகத்தில் எந்த மூலையிலும் உள்ள ஏதாவதொரு நாட்டிேனும் நிம்மதியாகவும் பாதுகாப்பாகவும் வாழவே விரும்புவதாக இவர்கள் தெரிவித்துள்ளார்கள். அத்தோடு அந்நாடு ஐநாவின் அகதிகள் தொடர்பான பிரகடனத்தில் கைச்சாத்திட்ட நாடாக இருக்கவேண்டும் என்று கேட்கிறார்கள்.

இலங்கையில் இருந்து 'ஓசன் லேடி' என்ற கப்பலில் 76 பேர் கனடாவுக்கு வந்துள்ளார்கள். இவர்களை கனடியப் பாதுகாப்பு துறையைச் சேர்ந்த கப்பல் ஒன்று ஒக்ரோபர் 17ஆம் திகதி இடைமறித்து விக்ரோறியா துறைமுகத்திற்கு கொண்டு வந்தது. தற்போது இவர்கள் வன்கூவரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களின் நலனை கவனிக்க கனடியத் தமிழர் பேரவை முன்வந்துள்ளது.

இலங்கை அகதிகள் 78 பேருடன் 'ஓசியானிக் வைக்கிங்' என்ற அவுஸ்திரேலியக் கப்பல் இந்தோனேசியாவின் 'டன்யூவ் பின்னாங்' கடற்கரையில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளது. இவர்கள் இரண்டு கிழமைக்கு முன்னர் இந்தோனேசியக் கடற்பகுதியில் வைத்து அவுஸ்திரேலியாவின் 'ஓசியானிக் வைக்கிங்' என்ற சுங்கப்பிரிவைச் சேர்ந்த கப்பலினால் மீட்கப்பட்டவர்களாவர். இந்த 78 இலங்கை அகதிகளின் தலைவிதி அவுஸ்திரேலிய அரசின் கைகளிலேயே தங்கியுள்ளது என இந்தோனேசியா தெரிவித்துள்ளது.

துரித பணமாற்றுச் சேவை
• 51 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 18 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்

3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

VASANTHAM HOME SERVICES
வசந்தம் வீடு சேவைகள்

• Cleaning: Carpet, Duct, Sofa, Car, Window, Home & Office
• Painting & Home Renovation
• Moving to any town
• Airport Services
வீடு, ஜன்னல், சோபா, காரியாலயம் சுத்தம் செய்தல். வர்ணம் பூசுதல். விமானநிலைய சேவை. வீட்டு பொருட்கள் நகர்த்தல்.
Call: 647.296.9374/ 416.836.6791

Sales & LEASING
MARKVILLE TOYOTA


›KUMAR JEGASOTHY‹
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கெள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி <
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

SATHYA SAIRAM DRIVING SCHOOL

• உங்களுக்கு பாஷை ஒரு பிரச்சினையா?
• பரீட்சை கேள்விகள் விளங்காததனால் வாகன எழுத்து பரீட்சையில் அல்லது வீதிப்பரீட்சையில் சித்தியடைய முடியவில்லையா? கவலை வேண்டாம்.
• உங்கள் வாகனம் சம்பந்தப்பட்ட எந்த பரீட்சையிலும் சித்தி அடைய வேண்டுமா?
அழையுங்கள் - 416-831-5217



Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd.
Suite #206
Scarborough, ON
M1S 2Y3
*Independently Owned and Operated

RBC Royal Bank

Nala Brodie
Mortgage Specialist
(416) 409-4900
Nala.Brodie@Rbc.com
Markham&14th Ave
Greater Toronto Region
Switch your Mortgage to RBC
And Consolidate Your Debts for FREE!
• No Lawyers Fee • No Appraisal Fee
• No Discharge Fee
•1st Time Home Buyers •Pre-Approvals
•Debt Consolidation
•Home Equity Line of Credit
•New Immigrant & Self-Employed Programs
•Over 20 years of experience with RBC
•Fast and Efficient Service
Always with a Smile!!!
Let Me Optimize Your Mortgage Payments and other Debt Payments

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்

Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர் (Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

வீடு வாங்கவும் விற்கவும்...

ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife / Today Realty Ltd., Brokerage.
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

# கனடிய டொலர் இன்னும் உயருமா?

கனடிய டொலரின் மதிப்பு உயர்ந்து வருகின்றது. இது மகிழ்ச்சி தரும் செய்தியா? துக்கமான செய்தியா? பாங்க் ஒவ் கனடாவைப் (Bank Of Canada) பொறுத்த வரையில் இது மகிழ்ச்சி தரும் செய்தி அல்ல. டொலரின் மதிப்பைக் குறைக்க எங்களால் முடிந்த எல்லாவற்றையும் செய்வோம் என்று பாங்க் ஒவ் கனடா கவர்னர் கூறியுள்ளார்.

இந்தச் செய்திகளைப் படிக்கும் ஒருவருக்குப் பல கேள்விகள் எழலாம். ஒவ்வொன்றாகப் பார்ப்போம். முதலில் கனடா டொலரின் மதிப்புச் சந்தையில் ஏன் உயருகின்றது? அதற்கு விளக்கம் என்ன? சர்வதேசப் பணச்சந்தையில் பணம் படைத்த பலரும் பங்குச் சந்தையில் முதலீடு செய்வதைப் போன்று வெளிநாட்டுப் பணத்திலும் தங்கள் பணத்தின் ஒரு பகுதியைப் போட்டு வைத்திருப்பது வழக்கம். இவர்கள் தங்களுக்கு எங்கு லாபம் கிடைக்கும் என்று நம்புகின்றார்களோ அங்கு பணத்தை நகர்த்துவது வாடிக்கை. இது ஒரு வகை இலாபம் கிடைக்கு என எதிர்பார்க்கும் வியாபாரம்தான் (Speculation).

அமெரிக்காவில் வீட்டுப்பிரச்சினையும், மற்ற நிதிப் பிரச்சினைகளும் உச்சத்தில் இருந்த போது, இத்தகையோர் அமெரிக்காவைப் பாதுகாப்பான இடமாகக்கருதி தங்கள் பணத்தை அமெரிக்க டொலரில் வைத்தருந்தனர்.

இப்போது அவர்கள் பணத்தை அமெரிக்காவுக்கு வெளியில் பிறநாட்டு நாணயங்களில் முதலீடு செய்கின்றார்கள். காரணம் பெருகி வரும் அமெரிக்க அரசின் நிதிப் பற்றாக்குறையும் கடன்களுமே ஆகும். அவுஸ்ரேலியா வட்டி வீதங்களைக்காட்டிய போது பெருந்தொகை அவுஸ்ரேலியா டொலருக்குச் சென்றதாக கருதப்படுகின்றது. அவுஸ்ரேலியா கனடாவைப் போன்று பொருள் வளம் நிறைந்த நாடு. இப்போது ஏறத்தாழ எல்லா நாடுகளுமே, கனடா உள்பட பற்றாக்குறை நிதியத்தை கடைப்பிடிப்பதால்



விலைவாசிகள் ஏறும் சாத்தியம் நிறையவே உள்ளது. அத்தகைய சமயத்தில் அத்தகைய பொருட்களை உள்ளடக்கிய நாடுகளின் நாணயமதிப்பும் ஏறும். அந்த வகையில் கனடிய நாணயத்தின் மதிப்பு உயர பலரின் எதிர்பார்ப்பும் காரணமாகின்றது.

நாணய உயர்வை பாங்க் ஒவ் கனடா (Bank Of Canada) ஏன் எதிர்க்க வேண்டும்? கனடிய பொருட்களின் ஏற்றுமதி பாதிக்கப்படும். அதன் காரணமாக தொழிற்சாலைகளில் வேலைக் குறைப்பும், வேலை இழப்பும் நிகழும். இறக்குமதி மலிவாகும். வேலையில்லாதவர்கள் விலை மலிவாயிருந்தாலும் வாங்குவது எப்படி? சுருக்கமாகச் சொன்னால் இதுதான் பாங்க் ஒவ் கனடாவின் கவலை.

பாங்க் ஒவ் கனடா என்ன செய்ய முடியும்? கூடுதலாக டொலர்களை அச்சடித்து அத்தகைய நாணய உயர்வைத் தடுக்கலாம். பணச் சந்தையில் நேரடியாக இறங்கி நாணய ஏற்றத்தைத் தடுக்கத் தேவையான வற்றைச் செய்யலாம். அவுஸ்ரேலியாவைப் போன்று கனடாவும் வட்டி வீதங்களைக் கூட்டும் என்று எதிர்பார்ப்பவர்களுக்கு, வட்டி வீதங்களை சில காலத்திற்கு கூட்டாமல் ஏமாற்றத்தை தவிர்க்கலாம். இத்தகைய நடவடிக்கைகள் கனடிய நாணயத்தின் மதிப்பை பாதிக்கச் செய்யும்.

ஓ! வட்டி வீதங்கள் அப்படியே இருக்குமா? யாருக்குத் தெரியும். இன்றைக்கு இருக்கும் ஆழ் நிலையில் 2010 ஜுன் வரை பெரிய மாற்றங்கள் இருக்காது என்றே தோன்றுகின்றது. வட்டி வீதத்தை உடனடியாகக் கூட்டனால் கனடிய நாணயத்தின் மதிப்பு உயர மேலும் ஒரு காரணம் கிடைக்கின்றது.

இந்த வருட ஆரம்பத்துடன் ஒப்பிடுகையில் அமெரிக்க டொலருக்கு எதிராக கனடிய டொலர் 16 சதவீதம் உயர்ந்துள்ளது.

பாங்க் ஒவ் கனடா (Bank Of Canada) விலை வாசி ஏற்றத்தை 2 சதவீதமாக வைத்திருக்க விரும்புகின்றது. அந்தக் குறிக்கோளை அடைய விரும்பினால் கனடிய நாணயத்தின் மதிப்பு உயராமல் பார்த்துக் கொள்ள வேண்டியது பாங்க் ஒவ் கனடாவின் கடமை ஆகின்றது.



**பெரி. முத்துராமன்**

# கனடாவின் கதை

03ஆம் பக்கத்தொடர்ச்சி

கலப்பு மணங்கள் நடைபெற்றன என்றும் கூறப்படுகின்றது. சமுதாய அமைப்பில் பல் வேறு படிநிலைகள் தோன்ற ஆரம்பித்தன - காட்டு அரிசி பயரிடுவதிலும் அறுவடை செய்வதிலும் சில குழுவினர் ஈடுபட ஆரம்பித்தனர். எஞ்சிய அரிசியை சேமித்து வைத்தனர். சவக்குழிகளிலிருந்து கிடைத்த குறைவான சான்றுகளை வைத்து அக்கால மக்கள் ஒப்பீட்டளவில் உயரமாகவும் தசைப்பிடிப்பானவர்களாயும் இருந்தனர். வாதம், பல், தாடை நோய்கள், இருதய நோய்கள், சிபிலிஸ் (Syphilis) போன்றவற்றால் பீடிக்கப்பட்டிருந்தனர். ஆரம்ப வயதில் பற்கள் நல்ல நிலையிலிருந்து பின் பற்சிதைவும் சீழ் பிடித்தலும் ஏற்பட்டு பற்களை இழந்தனர் என்று அறியப்படுகின்றது.

தொடரும்...



## வாசகர்களின் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிட இருக்கின்றோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம், அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. Vlambaram, 5215 Finch Ave. E. #201, Scarborough, ON M1S 0C2
2. Fax: 416.282.8059
3. email: vlambaram@sympatico.ca

*தங்கள் பத்திரிகையில் கிரேக்க காவியங்கள் நாடகங்கள் பற்றி டாக்டர் கவிநாயகம் வி. கந்தவனம் அவர்கள் படைத்து வரும் தொடர்கட்டுரையை கண்ணுற்றேன் மகிழ்ச்சி. இந்த காவியங்களையும் நாடகங்களையும் நான் 1988 இல் தமிழாக்கஞ் செய்து 16 தொகுதிகளில் (பக்கங்கள் 3841) வெளியிட்டுள்ளேன்.*

*ஈழத்துப்பூராடனார்*
*17.10.2009*


**விற்பனையாகின்றது! லலிதா புரூடியின்**

**"ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்"**

எனும் அரிய நூல்
மனதை கட்டுப்படுத்தி நல்வழியில் செலுத்த, ஆளுமையை வளர்க்க, மனதில் நின்மதியை பெற வாசிக்க வேண்டிய அருமையான நூல்




**கிடைக்குமிடம்: விளம்பரம் பத்திரிகை காரியாலயம்**
**தொலைபேசி இலக்கம்: 416.282.8059**
**GTA Square - 5215 Finch Ave. E., #201**
**Middlefield & Finch**



**விளம்பரம்** VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.



**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



**Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, Toronto, ON M1S 0C2, Canada**
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com



**Sales Reps. Welcome**

For All your Real Estate & Investments Needs!

**Raja M. Mahendran**, P. Eng.
(Broker / Owner)



* INDEPENDENTLY OWNED AND OPERATED

**HomeLife GTA Realty Inc.** Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto - **416.321.6969**
145 Traders Blvd # 28, Mississauga -**905.712.2666**

# கனடாவின் கதை - 8

## மேற்கு ஷீல்ட் கலாசாரத்தின் இறுதிக்காலம்

இக் கலாசாரம் கிழக்கு மேற்காக கியூபெக்கின் எல்லையிலிருந்து ஆரம்பமாகி வட ஒன்ராறியோவுக் கூடாக மனிற்றோபா கிழக்கு மத்திய சஸ்கச்சுவான் வரை நேர் கோட்டில் 1600 கி.மீ வரை பரவி இருந்தது. தெற்கு புறமாக வட மிக்சிக்கன், மினசோற்றா வரைக்குச் சென்றது. இப்பகுதிக்குள் பெருவாவிகளின் வடக்குக் கிழக்கு எல்லைகளும், சென்லோறன்ஸ் காடுகள் பூங்காக்களும் இலையுதிர்காடுகளும் இலைக்கன் பற்றைகளும் அடங்கும். இப்பகுதியில் பல்வேறு வகைத் தாவரங்களும் குறைவான விலங்குகளுங் காணப்பட்டன.



படம் - 1 நீண்ட சோல்ற் புதைவிடத்தில் காணப்பட்ட சவக்காலை மேடை - இது பின்னைய மேற்கு ஷீல்ட் கலாசாரத்தைச் சார்ந்தது. வட ஒன்ராறியோவிலுள்ள றெயினி ஆற்றின் வட கரையிலுள்ள மேடை. இது கனடாவின் ஐரோப்பிய காலத்துக்கு முற்பட்ட மனிதனால் செய்யப்பட்ட மிகப் பெரிய மேடையாகும். இது தற்போது ஒரு பாதுகாக்கப் பட்ட இடமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

**- துறையூரான் -**

இப்பகுதியில் வாவிகளுக்கும் ஆறுகளுக்கும் தொடர்புள்ளதால் மக்கள் பேர்ச். (Birch) மரத் தோணிகளைப் பாவித்திருக்கலாம். எனினும் இதற்கான சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை. ஒட்டாவா ஆற்றின் மேற்பகுதி ஹியூறோன் வாவியுடனும் பின்னர் சுப்பீரியர் வாவியுடனும் கிழக்கே ஒன்ராறியோவுக்கும் மினெசொற்றா எல்லைக்குமிடையேயுள்ள நீர்த்தொகுதிக்கூடாக வினிபெக் ஆற்றுடனும் வினிபெக் வாவியுடனும் தொடர்புகளைக் கொண்டுள்ளது. மேலும் கிழக்கு மேற்காக பல வழிகளை ஹட்சன் வளை குடா பகுதிக்கும் மேற்கே சஸ் கச்சுவான் ஆற்றுக்கும், தெற்கே றெட் ஆற்றுக்கும் இக்கலாசாரம் தொடர்புகளை கொண்டிருந்தது. இப்பகுதிகளில் காணப்பட்ட காடுகளில் பைசன் மாடுகள் ஏராளமாகக் காணப்பட்டன. இக் கலாசாரத்திலிருந்தே ஓஜிப்வேயும் (Ojibway) மேற்குக் கிறீயும் (Cree) தோன்றின என நம்பப்படுகின்றது.

இக் கலாசாரத்தில் பல தொழினுட்ப முன்னேற்றங்கள் காணப்பட்டன. பல்வேறு வகையான விறாண்டு கருவிகள், பல பாவனைக் கருவிகளுக்கும் ஆபரணங்கள் செய்வதற்கும் செப்புலோகம் பாவிக்கப்பட்டது. செம்மண் குமிழ்கள் கற்றகடுகள், ஆகியன காணப்பட்டன. இவற்றுடன் என்புகளிலிருந்து செய்யப்பட்ட பிளக்கும் கத்திகள் கொழுவு கருவிகள், பனிச் சப்பாத்துக்கள் தைக்கும் ஊசிகள், மணிகள், மட்பாண்டங்களை அலங்கரிக்கப் பயன் படுத்தப்பட்ட உபகரணங்கள் ஆகியன கண்டுபிடிக்கப்பட்டன.

சுப்பீரியர் வாவியின் வடகரையிலுள்ள ஹெறோன் வளைகுடா ஆய்விடத்தில் பீவர் (Beaver), கலைமான்களின் என்புகள் கண்டெடுக்கப்பட்டன. இவற்றுடன் பல்வேறு வகை மீன்களின் சிதைவுகளுங் கண்டெடுக்கப்பட்டன. மேலும் மான், கரிபோ, முயல், முள்ளம் பன்றி ஆகியவற்றின் சிதைவுகளும் சிறிதளவு காணப்பட்டன. கோடை காலங்களில் ஆற்றுப்பகுதிகளிலும் வாவிக்கரைகளிலும் மக்கள் பெருமளவில் கூடி வாழ்ந்ததற்கான சான்றுகள் காணப்படுகின்றன. குறிப்பாக ஆற்றின் முகத்துவாரங்களில் பெருமளவு மீன்கள் காணப்பட்ட பகுதிகளில் குடியேற்றங்கள் இருந்தன. கருவிகள் செய்வதற்கு வேண்டிய தரமான கற்களையும் மரங்களையும் தேடுவதற்கும், கூரைகளுக்கும், தோணிகள் செய்வதற்கும் பேர்ச் மரங்களைப் பெறுவதற்கும், உணவுக்காகவும் மருந்துக்காகவும் பல்வேறு வகையான தாவரங்களைப் பெறுவதற்குமாக மக்கள் ஆங்காங்கே கூடாரங்கள் அமைத்தனர். குளிர் கால குடியேற்றம் பற்றிப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை. எனினும் கோடையில் சேகரிக்கப்பட்ட உணவை உட்கொண்டு வாழ்ந்தனர் என எண்ணலாம்.

சவக்காலைகளைப் பெரிய மேடைகளாக அமைத்து சில கருவிகளையும், மட்பாண்டங்களையும், கரடியின் தாடை-களையும் சேர்த்து உடலை அடக்கஞ் செய்ததற்கான சான்றுகள் உள்ளன. ஒரே மேடையில் பல உடல்கள் காணப்பட்டன. கூடாரங்களுக்குத் தூரமாக மழமழப்பான ஆற்றுப்படுக்கைக் கற்களால் பதிக்கப்பட்ட இடங்கள் ஆய்விடங்களில் காணப்பட்டன. இவை வழிபாட்டுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாமென நம்பப்படுகின்றது. சில இடங்களில் கற்பாறைகள் மீது ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன. மனித என்புக் கூடுகள் பெருமளவு சிதைந்து போனதால் அவற்றிலிருந்து பரம்பரையலகு பரிசோதனைகள் செய்து தரவுகள் பெற முடியாது போயிற்று.

## சமவெளிக் கலாசாரத்தின் இறுதிக்காலம்

இக் கலாசாரம் வட சஸ்கச்சுவான் ஆற்றின் தெற்கேயுள்ள அல்பேட்டா, சஸ்கச்சுவான், தென்மனிற்றோபா, மொன்ரானாவின் பெரும் பகுதி, வட டக்கோற்றா, தென்டக்கோற்றா, அருகிலுள்ளவை, யோமிங்கின் பகுதிகள், ஒன்ராறியோ ஆகியவற்றைக் கொண்டிருந்தது. இக் கலாசாரம் பொதுவாக இரு பகுதிகளாக பெலிக்கன் வாவி காட்டுப் பகுதியென்றும் பெசன்ற் காட்டுப் பகுதியென்றும் அழைக்கப்பட்டது. இப்பகுதி பெரும்பாலும் புற்றரைகளையும், பூங்காக்களையும் கொண்ட பகுதியாய் இருந்தது. எனினும் இதற்குக் கிழக்கே இருந்த இலையுதிர் காடுகள், பெருவாவிகள், சென்லோறன்சின் எல்லைப் பகுதிகளையுங் கொண்டிருந்தது.

ஒரு குன்றின் அடிவாரத்தில் பைசன் மாடுக-ளையும், கன்றுகளையும் கொன்று ஆண்களும் பெண்களும் இறைச்சி பழுதடைய முன்னர் உலர்த்துவதில் ஈடுபட்டுள்ளனர். படத்தின் முற்பகுதியிலுள்ள தோற்பையில் சூட்டுக் கற்களினால் நீர் சூடாக்கப்பட்டு உடைக்கப்பட்ட என்புகளிலிருந்து கொழுப்புப் பெறப்படுகின்றது. இது "பெமிக்கன்" எனப்படும் உலர் இறைச்சி தயாரிப்புக்குப் பயன்படுத்தப்படுகின்றது. பின்னால் தடிகளில் தொங்கவிடப்பட்டு இறைச்சி உலர்த்தப் படுவதை அவதானிக்க. குளிர் காலத்துக்குத் தேவையான உணவுத் தயாரிப்பதில் யாவரும் ஈடுபட்டுள்ளனர்.

இக்கலாசார மக்களின் முக்கிய உணவாக ஐரோப்பியர் வருகைக்கு முன் ஏறக்குறைய 12,000 வருடங்களாக, பைசன் மாட்டிறைச்சியே இருந்ததாக கருதப்படுகின்றது. எனினும் சூழலுக்கேற்ப அங்கிருந்த மான், எல்க், செம்மறியாடு, மலை, ஆடு, பீவர் போன்ற மிருகங்களையும் மீன், கிழங்குகள், பெறிப்பழங்கள் ஆகியவற்றையும் மக்கள் உட்கொண்டனர். மேலும் பெமிக்கன் தயாரிப்பு முக்கிய வேலையாக இருந்தது. உலர்ந்த பைசன் இறைச்சியை இடித்து, என்புகளிலிருந்து பெறப்பட்ட கொழுப்பு , மசை ஆகியவற்றுடன் கலந்து, பைசனின் பெரும் சிறுநீர்ப்பையினுள் அடைத்து வைத்தனர். இந்த உணவு குளிர் காலத்திலும், வேட்டையின் போது எதுவும் கிடைக்காத போதும் பயன்படுத்தப்பட்டது. மேலும் இடத்துக்கிடம் மாறிச் செல்வதற்கு உதவியாய் இருந்த நாய்களுக்கும் இது உணவாகக் கொடுக்கப்பட்டது.

பிற கலாசாரங்களைப் போன்றே இக் கலாசார மக்கள் ஆரம்பகாலங்களில் அம்புவில் பாவனையிலிருந்து ஈட்டிகளைப் பாவிக்கும் முறைக்கு மாறினர். ஈட்டி முனைகள், கற்களாலும், மரங்களாலுஞ் செய்யப்பட்டன. கத்திகள், விறாண்டு கருவிகள் கற்களாலும் பின்னர் உலோகங்களாலுஞ் செய்யப்பட்டன. எண்ணெய் நிறைந்த ஸ்ரேஜன், சுறா, கொட் (Cod) போன்ற மீன்களையும் பிடித்து உணவாகவும் எண்ணெய்க்காகவும் பயன் படுத்தினர். பல குழுக்கள் ஒன்று சேர்ந்து வேட்டையாடுவதிலும், பெமிக்கன் தயாரிப்பிலும் ஈடுபட்டிருக்கலாமென நம்பப்படுகின்றது. வேட்டையாடிய இடங்களும், கூடாரங்கள் அமைந்திருந்த இடங்களும், புதை பொருள் ஆய்வின் போது கிடைத்த சான்றுகளிலிருந்து அடையாளங் காணப்பட்டன. மணிகள்,



படம் - 2 சமவெளிக் கலாசாரத்தின் இறுதிக்கால இலையுதிர்காலக் கூடாரக் காட்சியொன்று.

*ஆதாரம்: History of native people canada*

நெருப்புண்டாக்கும் கற்கள், கூடாரங்களுக்கு பாவித்த கல் வளையங்கள் ஆகியன இவ்விடங்களில் காணப்பட்ட சான்றுகளாகும். சுப்பீரியர் வாவியின் கரையோரங்களில் மட்டுமே செப்பிலான கருவிகள் கண்டெடுக்கப்பட்டன.

அல்பேட்டாவின் தென்பகுதியில் வாழ்ந்தவர்கள் ஓரிடத்தை புனித இடமாகப் பாவித்து வழிபாடு செய்தனர் என்றும், அதீத சக்திபடைத்த "சமன்" எனப்படுபவர் அவ் வழிபாட்டை நடத்தியிருக்கால-மெனக் கருதப்படுகின்றது.

மேலும் இக் கலாசார மக்கள் "மருந்துச் சக்கர" விழா ஒன்றிலும் ஈடுபட்டனர் என அறியப்படுகின்றது. மேலும் தெற்கு, வடக்கு, டக்கோற்றா மக்கள் சவக்குழி சம்பிரதாயத்திலும் ஈடுபட்டனர். சவ அடக்கத்துக்கு முன் மேடையில் பிணம் பார்வைக்கு வைக்கப்பட்டு பின் புதைக்கப்பட்டது எனவும் அறியப்படுகின்றது. சில இடங்களில் பிணத்தை மேடை மீது வைத்து விடப்பட்டது, புதைக்கபடவில்லை எனவும் அறியப்படுகின்றது.

பல்வேறு குழுக்களிடையே வியாபாரமும் நிலவியதாகவும் அப்பொருட்கள் காலப்போக்கில் அழிந்து போயிருக்கலாமெனவும் கருதப்படு கின்றது. குழுக்கள் காலத்துக்குக் காலம் வெவ்வேறிடங்களுக்கு மாறிச் சென்றனர் என்றும்

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

DISCOUNTS UP TO 30% ON CAR INSURANCE
Li Chen, Agent
http://www.licheninsurance.ca
Bus: 416-431-6800
Mano Selvam
Auto Insurance Representative
Bus:416-431-6800
தமிழில் உரையாடுவோம்
1200 Markham Road, Suite# 123, Scarborough, ON M1H 3C3
Intersection: Markham Road & Ellesmere Road
State Farm • Head Office, Aurora, Ontario • statefarm.ca™

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
• Detailing
• Motor Shampoo
• Interior Shampoo
• Exterior Wash
• Waxing
• Repairs
• Safety Certification
• Overall Maintenance
• Under Coating
• Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL

# உங்களுக்குத் தெரியாதது என்னவென்று உங்களுக்குத்தெரியுமா?

## உங்களுக்குத் தெரியாதவற்றை 'தெரியாது' என்று ஒப்புக் கொண்டால் வளர்ச்சிக்கு வாய்ப்பு உண்டு



சத்குரு வாசுதேவ்

'வளர வேண்டும்' என்ற ஆர்வம் உங்களுக்குள் ஆழமாக இருக்குமேயானால், அதுதான் உங்கள் இலட்சியமாக இருக்குமேயானால் எவையெல்லாம் உங்கள் அனுபத்தில் உள்ளன, எவையெல்லாம் உங்கள் அனுபவத்தில் இல்லை என்பது குறித்து முதலில் ஒரு தெளிவை மேற்கொள்ளுங்கள். உங்கள் அனுபவத்தில் இல்லாதவற்றை அவை இல்லாதவை என்று நீங்கள் சொல்ல வேண்டாம். எனக்குத் தெரியாது என்று மட்டும் சொல்லுங்கள். இந்த நிலையை நீங்கள் எட்டிவிட்டாலே வளர்ச்சி தானாகவே நிகழும். தெரியாததை 'தெரியாது' என்று ஒப்புக்கொள்வதில் தான் வளர்ச்சி ஆரம்பமாகிறது. தெரியாதவற்றை ஏதோ நிலையில் நம்பத் தொடங்கிவிட்டு எல்லாம் தெரிந்ததாக பாசாங்கு செய்யத் துவங்குகிறீர்கள். உங்களுக்குள் வளர்ச்சி நிகழ்வதற்கு ஆரம்பமே உங்கள் அனுபவத்தில் என்ன இருக்கிறது, இப்போது என்ன இருக்கிறது என்ற தெளிவுதான். இப்போதைக்கு உங்கள் உடலை ஓரளவு உணர்ந்திருக்கிறீர்கள், உங்கள் மனதை ஓரளவு உணர்ந்திருக்கிறீர்கள், உங்கள் உணர்ச்சிகளை ஓரளவு உணர்ந்திருக்கிறீர்கள். சில விநாடிகளில் உங்கள் உடலையும், மனதையும் செயல்படுத்த வைக்கிற சக்திநிலைகளை நீங்கள் உணர்ந்திருக்ககூடும். இதைத் தாண்டி எதையும் நீங்கள் உணர்ந்ததில்லை, மற்றவையெல்லாம் கற்பனைகள் மட்டும் தான். இந்த சமூகம் உங்களுக்கு எப்படிச் சொல்லித் தந்திருக்கிறதோ அதற்கேற்ப உங்கள் கற்பனைகளும் இருக்கிறது. எனவே, உங்கள் அனுபவத்தில் என்ன இருக்கிறது, உங்கள் அனுபவத்தில் என்ன இல்லை என்பதைப் பாருங்கள். உங்கள் அனுபவத்தில் இல்லாதவற்றையெல்லாம் எனக்குத் தெரியாது என்று முதலில் ஏற்றுக்கொள்ளுங்கள். இது மிகமிக முக்கியம். இல்லையென்றால் உங்கள் மொத்த வாழ்க்கையும் பாசாங்குகளிலேயே கழிந்து விடும்.

உங்களுக்குத் தெரியாதவை பற்றி எந்த முடிவுக்கும் நீங்கள் வரவேண்டிய அவசியமில்லை. 'தெரியாது' என்று ஒப்புக் கொள்கிறபோதே தேடல் தொடங்கிவிடுகிறது. கடவுளாகட்டும், உண்மையாகட்டும் அதை எங்கே தேட வேண்டும்? உங்களுக்குள்ளே தான் தேட வேண்டும். உள்ளுக்குள்ளேயே தேட ஆரம்பித்து விட்டால் உள்ளுக்குள்ளேயே நீங்கள் உணர்வீர்கள். உள்ளுக்குள்ளேயே தேடுவதற்கும், உள்ளுக்குள்ளேயே உணர்வதற்கும் ஒரு கருவி தேவைப்படுகிறது. இல்லையா? கடலின் ஆழத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமென்றால் அந்த ஆழத்தை அளப்பதற்கு உங்களுக்கு ஒரு அளவுகோல் தேவைப்படுகிறது. ஒரு அடி கோலை வைத்துக் கொண்டு உங்களால் சமுத்திரத்தை அளக்க முடியாது. அதற்கு அடித்தளமே கிடையாது என்ற முடிவுக்கு நீங்கள் வருவீர்கள். ஆனால் அது உண்மையில்லை. உங்கள் உள்நிலையை நோக்கி நீங்கள் செல்ல வேண்டுமானால் அதற்கென்று ஒரு கருவி அவசியம். உள்நோக்கிச் செல்ல உங்களிடம் என்ன கருவிகள் உள்ளன? உங்கள் ஐம்புலன்கள் மட்டும்தான் உள்ளன. வேறு எதுவும் இல்லை. உலகியல் சார்ந்த விஷயங்களைத்தான் இந்த ஐம்புலன்களும் உள்வாங்குகிறது. உலகியல் சார்ந்த விஷயங்களை இந்த குறுகிய கருவிகளைக் கொண்டு உங்களால் அளக்க இயலாது.

உங்கள் உடல் இருக்கிறது. அது உங்களுக்கு இப்போது முக்கியமானதாக இருக்கிறது. அதற்கு உணவு தருகிறீர்கள், உடை உடுத்துகிறீர்கள், அலங்கரிக்கிறீர்கள். இப்படி எத்தனையோ செய்கிறீர்கள். ஆனால் உங்களுக்குள் விலை மதிப்பில்லாத ஏதோ ஒன்று இருக்கிறது. இதுவரை நீங்கள் அதை உணர்ந்ததேயில்லை. உங்களுக்குள் இருக்கிற அந்த ஏதோ ஒன்று நாளை காலை வெளியேறிவிட்டால் உங்கள் உடல் யாருக்கும் தேவையில்லாமல் போய்விடும். உங்கள் நகராட்சி அலுவலகம் கூட அதை அதற்குப் பிறகு ஏற்காது.

வாழ்க்கை என்ற பழம் உள்ளே இருப்பதால் தான் மேலே இருக்கிற தோலுக்கு மரியாதை. பழம் போய்விட்டால் தோலை என்ன செய்கிறார்கள்? தூக்கி வீசுகிறார்கள். ஆனால் நீங்கள் பழத்தைப் பற்றியே கவலைப்படுவதில்லை. இந்த தோலோடு மட்டுமே தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். தோலையே தொடர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தால் வாழ்க்கையில் என்ன மிஞ்சும்? கசப்பு தான் மிஞ்சும். ஆனால் என்ன சிக்கல் என்றால் இந்த தோலில் ஆங்காங்கே கொஞ்சம் இனிப்பு ஒட்டியிருக்கிறது. அதுவும் அந்தப் பழத்தோடு இருக்கிற தொடர்பு காரணமாக வந்த இனிப்புதான். உங்கள் வாழ்க்கை முழுவதும் நீங்கள் அந்த இனிப்பையே தேடிக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் தீவிரமாக தேடினால் அங்குமிங்கும் கொஞ்சம் இனிப்புக் கிடைக்கும். ஆனால் தோலைக் கடந்து ஒரு பழம் இருப்பதை புரிந்கொண்டால் நீங்கள் ஆனந்தமயமாகி விடுவீர்கள். எப்போதும் நீங்கள் ஒரு இனிய நிலையிலேயே இருக்க வாய்ப்பிருக்கிறது. இந்த தோல் முழுக்க முழுக்க கசப்பாக இருந்திருக்குமேயானால் இந்நேரம் நீங்கள் ஞானோதயம் அடைந்திருப்பீர்கள். அங்குமிங்கும் இருக்கிற இனிப்புத்தான் உங்களை அலைக்கழித்து அதன் அடிப்படையான மூலத்தை அறியவிடாமல் தடுக்கிறது.


**APARTMENTS FOR RENT**



***In a NEWLY Renovated High-Rise Apartment Building***
***Clean, Utilities inclu. Free parking. Close to TTC, Tamil store in building, schools nearby***

**Pl. Call: 416.264.2818**

***Inner Engineering Program***

***Date:*** 4 - 10 November 2009
***Venue:*** Polish Association of Toronto, 2282 Lakeshore Blvd W Toronto, ON M8V 1B3
***Session info:*** Weekdays: 6:45pm to 9:45pm
Saturday: 10am to 1pm, Sunday: 8am to 5pm
***Contact:*** Phone: 416 300 3010
***email:*** toronto@ishafoundation.org
***Website:*** www.ishayoga.org

**ELECTRICAL WORKS**



***FRIDGE, WASHER, DRYER*** போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: **ஈசன்** - ***416-286-2880***

# பன்றிக் காய்ச்சலும் (H1N1) தடுப்பு ஊசியும்

வருடம் தோறும் இலையுதிர் காலம் வந்தவுடன் காய்ச்சலும் வந்துவிடும். இவ்வாறு வரும் காய்ச்சல் எவ்வகை கிருமிகளால்/வைரஸ்களால் வரும் என்பதை முன்கூட்டியே விஞ்ஞானிகள் கண்டறிந்து வருடம் தோறும் ஒவ்வொரு விதமான காய்ச்சல் தடுப்பு ஊசியை பொதுமக்களுக்கு போடுவதற்காக உற்பத்தி செய்வார்கள். இத்தடுப்பூசி குடும்பவைத்தியர் அல்லது மருத்துவ நிலையங்கள் மூலம் வயோதிபர்கள் மற்றும் பல்வேறுபட்ட மருத்துவ பிரச்சினைகள் உள்ளவர்களுக்கு போடப்படும். ஏனையோரும் விரும்பினால் இத்தடுப்பூசிகளைப் போடலாம். இத்தடுப்பூசிகள் விஞ்ஞானிகளால் எதிர்பார்க்கப்பட்ட கிருமிகள்/வைரஸ்களால் வரும் காய்ச்சலை மட்டுமே தடுக்கும். இதைத் தவிர வேறு கிருமிகளால்/ வைரஸ்களால் வரும் காய்ச்சல் இத்தடுப்பூசி போட்டவர்களுக்கு வரலாம். இத்தடுப்பூசி உண்மையாகவே காய்ச்சலை தடுக்கின்றனவா? என இருதரப்பட்ட கருத்துக்கள் மக்களிடையே உலாவுகின்றன. இத்தடுப்பூசிகள் காய்ச்சலை தடுக்கின்றனவோ இல்லையோ வயோதிபர்களுக்கும் மற்றும் பல்வேறுபட்ட மருத்துவப் பிரச்சனைகள் உள்ளவர்களுக்கும் இத்தடுப்பூசிகளை போடுவது தற்பாதுகாப்பான செயலாகும்.



இந்த வருடத்தின் இலையுதிர்காலம் வழமையைவிட வேறுபட்டது. இரண்டு வகையான தடுப்பூசிகளை அரசாங்கம் பொது மக்களுக்கு போடுவதற்கு ஊக்குவிக்கின்றது. ஒன்று வழமை போல் இவ்வருடம் வரும் என எதிர்பார்க்கப்பட்ட காய்ச்சலை தடுக்கும் தடுப்பூசி மற்றையது இவ்வருடம் திரும்பி இரண்டாவது அலையாக வரும் என எதிர்பார்க்கப்படுகின்ற பன்றிக்காய்ச்சலை (H1N1) தடுக்கக் கூடிய தடுப்பூசி.

இப்பன்றிக் காய்ச்சலை தடுக்கக் கூடிய தடுப்பூசி போடும் வேலை தற்போது ஆரம்பித்துள்ளது. இப்பன்றிக் காய்ச்சலை பற்றி தினமும் செய்தி ஊடகங்கள் செய்தி வெளியிட்டு பொது மக்களை விழிப்புணர்வுடன் வைத்திருப்பதால், இத்தடுப்பூசி போடும் வேலை ஆரம்பித்தவுடனே எல்லா இடங்களிலும் மிக நீண்ட வரிசையில் மக்கள் மூன்று மணித்தியாலங்களுக்கு மேல் காத்திருந்து இத்தடுப்பூசியை போட்டுச் செல்லுகின்றார்கள்.

இப்பன்றிக் காய்ச்சல் இளவயதினரை கூடுதலாக தாக்குவதால் கனடிய மக்கள் எல்லோரையுமே இந்த தடுப்பூசி போடுமாறு அரசாங்கம் கேட்டுள்ளது. ஆனால் முதலில் இத்தடுப்பூசி பின்வரும் பிரிவுகளை சேர்ந்தவர்களுக்கே போடப்படுகின்றது.

(1) 6 மாதம் தொடக்கம் 5 வருடம் வரை வயதுள்ள சிறுவர்கள்.
(2) கனேடிய சுதேசி (Native) இனத்தை சேர்ந்தவர்கள்.
(3) சொந்த வீடு இல்லாமல் தெருக்களில் வசிப்பவர்கள்.
(4) வைத்தியசாலை வசதியில்லாத தூர இடங்களில் வசிப்பவர்கள்.
(5) 65 வயதிற்குட்பட்ட வேறு மருத்துவ பிரச்சனைகள் உள்ளவர்கள்.
(6) வருத்தக்காரர்களை பராமரிப்போர்.
(7) 6 மாதத்திற்குட்பட்ட குழந்தைகளை கொண்ட குடும்பத்தினர்.
(8) மருத்துவர், தாதிமார் மற்றும் முதல் உதவி சிகிச்சை செய்பவர்கள்.
(9) கர்பிணி பெண்கள் (இவர்களுக்குரிய விசேடமாக தயாரிக்கப்பட்ட தடுப்பூசிகள் நவம்பர் மாதத்தில் தான் கிடைக்கக் கூடியதாக இருக்கும்)

இத்தடுப்பூசி போட ஆரம்பிக்கப்பட்ட முதல் நாளிலேயே (ஒக்ரோபர் 26, 09) 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் மனிற்றோபா மாநிலத்தில் இத்தடுப்பூசியை போட்டுள்ளார் கள். சஸ்கச்சுவான் மாகாணம் ஒக்ரோபர் 28, 09 திகதிக்கிடையில் 120 ஆயிரம் மக்களுக்கு இத்தடுப்பூசியை போட்டு விடலாம் எனவும் நவம்பர் மாத நடுப்பகுதியில் சஸ்கச்சுவான் மாகாணத்திலுள்ள முழு சனத்தொகைக்கும் (விரும்பியவர்க்கு) இத்தடுப்பூசி போட்டு முடித்து விடலாம் எனவும் எதிர்பார்க்கிறது.

அல்பேட்டா மாகாணத்தில் இத்தடுப்பூசி போட ஆரம்பித்த முதல்நாளில் (ஒக்ரோபர் 26,09) மட்டுமே 51 ஆயிரம் பேருக்கு இத்தடுப்பூசி வழங்கப்பட்டது. குவிபெக் மாகாணத்தில் ஒக்ரோபர் 26, 09 திகதி காலதாமதத்துடன்



ஆரம்பித்த தடுப்பூசி போடும் வேலை தாதிமார், முதலுதவி செய்பவர்கள், பலவேறுபட்ட மருத்துவ பிரச்சினைகள் உள்ளவர்கள் போன்றவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து நடைபெற்று வருகின்றது.

ஒன்ராரியோ மாகாணத்திலும் மேற்குறிப்பிட்டவர்களில் முதல் எட்டு பிரிவினர்களுக்கும் தடுப்பூசி போடும் வேலையை ஒக்ரோபர் 26, 09 திகதி ஆரம்பித்தது. ஆனால் ஒக்ரோபர் 29, 09 இல் இருந்து விரும்பிய எல்லா பொது மக்களுக்கும் தடுப்பூசி போடும் வேலை ஆரம்பிக்கப்படவுள்ளது. விரும்பிய எல்லா மக்களுக்கும் தடுப்பூசி போடும் வேலை அண்மையில் நடைபெற்ற இரண்டு சுகதேகியான சிறுவர்கள் பன்றிக்காய்ச்சலால் தாக்கப்பட்டு மரணமானதை முன்னிட்டு ஒக்ரோபர் 29, 09 இற்கு முன போடப்பட்டுள்ளது. எல்லோருக்கும் தடுப்பூசி போடும் வேலை முதலில் நொவம்பர் 02, 09 இல்தான் ஆரம்பிப்பதாக இருந்தது. Etobicoke இல் வசிக்கும் மருத்துவ தாதி ஒருவரின் 13 வயது மகன் Evan பன்றிக் காய்ச்சல் வந்து 48 மணித்தியாலத்திற்குள் (ஒக்ரோபர் 26, 09) இறந்தார். Cornwall இல் வசித்த 11 வயது சிறுமியும் ஒக்ரோபர் 24, 09 பன்றிக் காய்ச்சல் வந்து மரணமடைந்துள்ளார்.

இதுவரை அமெரிக்காவில் 1,170 பேரும், கனடாவில் 91 பேர் பன்றிக்காய்ச்சலுக்கு பலியாகியுள்ளதால உறுதிப்படுத்தப்பட்டுளது. ஒன்ராரியோ மாகாணத்தில் மட்டும் 6 சிறுவர்கள் உட்பட 28 பேர் இப்பன்றிக் காய்ச்சலுக்கு பலியாகியுள்ளனர்.

வருடம் தோறும் அமெரிக்காவில் 36 ஆயிரம் பேரும் கனடாவில் கிட்டத்தட்ட மூவாயிரம் பேரும் இலையுதிர் காலத்தில் தொடங்கும்

| | சாதாரண காய்ச்சல் | பன்றிக்காய்ச்சல் |
|---|---|---|
| காய்ச்சல் | காய்ச்சல் தொடர்ந்து இருப்பது குறைவு | 100° F மேற்பட்ட தொடர்ந்து இருக்கும். சிலவேளை 4 நாட்களுக்கு தொடர்ந்து இருக்கும். |
| நோவு | உடம்பு நோவு சில நேரங்களில் இருக்கும் | பெரும்பாலும் உடல் நோ இருக்கும். |
| தும்மல் | தடிமன் காய்ச்சலில் இது சாதாரணம் | தும்மல் இருப்பது மிகவும் குறைவு |
| உடனடிக் காய்ச்சல் | தடிமன் காய்ச்சல் வர ஒரு சில நாட்கள் எடுக்கும் | 3 - 6 மணித்தியாலத்தில் காய்ச்சல் 100° F வந்துவிடும் |
| தலையிடி | காய்ச்சலுடன் தலையிடி வருவது குறைவு | தலையிடி சாதாரணம் |
| தொண்டை நோவு | தொண்டை நோவு சாதாரணம் | தொண்டை நோவு அசாதாரணம் |
| இருமல் | இருமலுடன் சளி இருப்பது சாதாரணம் | இருமலுடன் சளி இருக்காது (வறட்டு இருமல்) |
| களைப்பு | களைப்பு குறைவு நெஞ்சுநோ அசாதாரணம் | களைப்பு அதிகம் நெஞ்சுநோ சாதாரணம் |

| | | |
|---|---|---|
| 1. | Metro Hall | 55 John Street |
| 2. | East York Civic Centre | 850 Coxwell Avenue |
| 3. | North York Civic Centre | 5100 Younge Street |
| 4. | North Toronto Memorial Community Centre | 200 Eglinton Av. West |
| 5. | Etobicoke Civic Centre | 399 West Mall |
| 6. | Melody Public School | 24 Starthburn Bivd |
| 7. | Masaryk - Cowen Community Recreation Centre | 200 Cowan Avenue |
| 8. | Scarborough Civic Centre | 150 Borough Drive |
| 9. | North Kipling Community Centre | 2 Rownfree Road |
| 10. | Timothy Eaton Business and Technical Institute | 1251 Bridle Towne Circle |

காய்ச்சலால் இறக்கின்றார்கள். இது இவ்வாறு இருக்க இம்முறை மட்டும் அமெரிக்காவில் ஆயிரம் பேரையும் கனடாவில் 86 பேரையும் பலி கொண்ட இந்த பன்றிக் காய்ச்சலுக்கு ஏன் இந்த பெரு எடுப்பில் பிரச்சாரமும் தடுப்பு மருந்து போடும் வேலைகளும் நடைபெறு கின்றது என எண்ணத் தோன்றுகின்றதா?




வருடம் தோறும் பல ஆயிரக்கணக்கானோர் இலையுதிர் காலத்தில் தொடங்கும் காய்ச்சலால் இறந்தாலும் அதில் பலர் பலவித நோய்களால் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ளவர் களும் வயது முதிர்ந்தவர்களும் ஆவர். ஆனால் பன்றிக் காய்ச்சலோ இளம் வயதினரை தாக்குவதாலும், காய்ச்சல் வந்து மிகவும் குறைந்த நேரத்தில் (நாட்களில்) அது தாக்கியவர்களில் சிலரை பலி கொண்டு விடுவதாலும் தான் இந்த முன்னெச்சரிக்கை யும் தடுப்பு ஊசியும் ஆகும். சாதாரண காய்ச்சலுக்கும் பன்றிக் காய்ச்சலுக்கும் இடையே பெரிய வித்தியாசம் இல்லா விட்டாலும் இவற்றுக்கிடையே சில வித்தியாசங்கள் இருப்பதாக கூறப்படுகின்றது.

**திறந்திருக்கும் நேரம்:**
**திங்கள் தொடக்கம் வெள்ளி வரை**
1.00 p.m to 7.00 p.m
**சனி -** 10.00a.m to 4.00 p.m
**ஞாயிற்றுக்கிழமையில் திறக்கப்படமாட்டாது**

இவற்றை விட சில குடும்ப வைத்தியர்களும் பன்றிக் காய்ச்சல் தடுப்பூசியை தங்களது மருத்துவ நிலையத்தில் போடுகின்றார்கள்.

மேலதிக விபரங்களுக்கும், பன்றிக்காய்ச்சல் பற்றிய தகவல்களும் www.fightflu.ca என்ற அரச இணையத்தளத்திற்கு செல்லவும்.

சிவ ஞானநாயகன்
vlambaram@sympatico.ca



JBTowing
1335112 Ontario Inc
Fast & Reliable
Reasonable rates
☎ Call RaJ: 647.271.5319
பழைய (Scrap) கார்களை விலைக்கு வாங்குவோம்



# 2010 உலகக் கோப்பை கால்பந்து: ஆர்ஜென்டீனா அணி தகுதி

## விளையாட்டுத் தகவல்கள் 270

உலகக்கோப்பை கால்பந்து போட்டிகளுக்கான தகுதிச் போட்டியில் உருகுவே அணியை 1-0 என்ற கோல்கணக்கில் வீழ்த்தி அர்ஜென்டீனா வெற்றி பெற்றது. இதன் மூலம் 2010ஆம் ஆண்டு நடைபெறும் உலகக்கோப்பை கால்பந்து போட்டிக்கு அர்ஜென்டீனா தகுதி பெற்றுள்ளது.

தென்ஆப்ரிக்காவில் வரும் 2010ஆம் ஆண்டு நடைபெற உள்ள உலகக்கோப்பை கால்பந்து தொடரில் பங்கேற்கும் அணிகளை தேர்வு செய்வதற்கான போட்டிகள் உலகின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வருகிறன. தென் அமெரிக்க கண்டத்துக்கான தகுதிச்சுற்று ஆட்டம் ஒன்றில் 2 முறை சாம்பியனான ஆர்ஜென்டினா-உருகுவே அணிகள் மோதின. இதில் நிச்சயம் வெற்றி பெற்றால் மட்டுமே உலக கோப்பைக்கு தகுதி பெற முடியும் என்ற நெருக்கடியுடன் களமிறங்கிய அர்ஜென்டீனா 1-0 என்ற கோல்கணக்கில் உருகுவே அணியை வீழ்த்தியது.

### அயர்லாந்தை சந்திக்கிறது பிரான்ஸ்

உலகக் கோப்பை கால்பந்து தகுதிச் சுற்றுப் போட்டியில் கான்கா.:.ப் பிளே ஆ.:.ப் சுற்றில் பிரான்ஸ் அணி அயர்லாந்தையும், ரஷ்ய அணி ஸ்லோவேனியா அணியையும், கிரீஸ் அணி உக்ரைன் அணியையும் சந்திக்கின்றன. இதில் பிரான்சிற்கு சற்று கடினமான போட்டி காத்திருக்கிறது. ஏனெனில் இவர்கள் அயர்லாந்தில் சென்று விளையாட வேண்டும். மற்ற அணிகளான ரஷ்யா, போர்ச்சுக்கல், கிரீஸ் ஆகிய அணிகள் தங்கள் நாட்டிலேயே விளையாடுகின்றன. இந்த போட்டிகள் நவம்பர் மாதம் 14ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை நடைபெறுகிறது.

2010ஆம் ஆண்டு தென் ஆப்பிரிக்காவில் நடைபெறும் உலகக் கோப்பை கால்பந்து போட்டிகளுக்கான 32 அணிகள் விவரம் டிசம்பர் மாதம் 4ஆம் தேதி உலகக் கால்பந்து கூட்டமைப்பால் அறிவிக்கப்படும். ஜூன் 11ஆம் திகதி முதல் உலகக் கோப்பை கால்பந்து திருவிழா தொடங்குகிறது. உயர் தரவரிசையில் உள்ள அணிகள் ஒன்றையொன்று எதிர்த்து விளையாடாதவாறு செய்ய .:.பீபா தரவரிசை நிலைகளை அறிவிப்பதில் தாமதம் செய்தன என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

அயர்லாந்து கால்பந்து அணிப் பயிற்சியாளர் கியோவானி தெரிவிக்கையில், 'நட்சத்திர வீரர்கள் உள்ள அணி, உதாரணமாக் கிறிஸ்டியானோ ரொனால்டோ விளையாடும் போர்ச்சுக்கல் அணி, தியரி ஹென்றி உள்ள பிரான்ஸ் போன்ற அணிகள் வெளியேறிவிடாதவாறு .:.பீபா பார்த்துக் கொண்டுள்ளது' என்று விமர்சனம் செய்தார். பிரான்ஸ், போர்ச்சுக்கல் ஆகிய அணிகள் கஷ்டப்பட்டு முன்னேறிய வேளையில் அயர்லாந்து அணி தகுதிச் சுற்றுப்போட்டிகளில் இன்னமும் ஒரு தோல்வியை கூட சந்திக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### உலகின் பணக்கார கால்பந்து வீரரானார் ரொனால்டோ

டேவிட் பெக்காமிற்கு அடுத்த படியாக போர்ச்சுக்கல் கால்பந்து நட்சத்திரம் கிறிஸ்டியானோ ரொனால்டோ நிமிடம் ஒன்றிற்கு 16,000 பவுண்டுகள் பணம் ஈட்டும் உலகின் பணக்கார கால்பந்து வீரரானார். அமெரிக்க வீரர் டைகர் வுட்ஸிற்கு பிறகு விளயாட்டு உலகில் பெரும் பணக்காரராக விளங்கவுள்ளார் கிறிஸ்டியானோ ரொனால்டோ.

மத்திய கிழக்கு நாடுகளில் ஸ்பானிய லீக் அணியான ரியால் மேட்ரிட் பணம் கொழிக்கும் சில கால்பந்து போட்டிகளை விளையாடவுள்ளது. இதில் கிறிஸ்டியானோ ரொனால்டோதான் பெரிய கவர்ச்சியாக முன்னிறுத்தப்படுகிறார்.

உஸ்பெகிஸ்தான், சவுதி அரேபியா, மற்றும் ஐக்கிய அரபு எமிரகம் உள்ளிட்ட நாடுகளில் உள்ள மிகப்பெரிய எண்ணெய் முதலைகள் நட்பு ரீதியான கண்காட்சிப் போட்டிகளுக்கு போட்டி ஒன்றுக்கு ரியால் மேட்ரிட் கிளப்பிற்கு 30 லட்சம் பவுண்டுகள் வரை கொடுக்க முன் வந்துள்ளனர். இந்த 30லட்சம் பவுண்டுகள் தொகையில் ரொனால்டோவிற்கு பாதித் தொகை அளிக்கப்படவுள்ளது. இந்த வகையில் கால்பந்து மைதானத்தில் கிறிஸ்டியானோ ரொனால்டோ இருக்கும் ஒவ்வொரு நிமிடமும் அவருக்கு 16,000 பவுண்டுகள் பணம் கிடைக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

### 20 உலகக் கோப்பை கால்பந்து பிரேசிலை வீழ்த்தி கானா சாம்பியன்

கெய்ரோவில் நடைபெற்ற இருபது வயதுக்குட்பட்டோர் உலகக் கோப்பை கால்பந்து போட்டித் தொடர் இறுதிப் போட்டியில் பிரேசில் அணியை கானா அணி பெனால்டி ஷூட் அவுட் முறையில் 4 - 3 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி அண்டர்- 20 உலகக் கோப்பை கால்பந்து உலகக் கோப்பையை வென்ற முதல் ஆப்பிரிக்க நாடு என்ற சாதனையை நிகழ்த்தியது. ஆட்டத்தின் முழு நேரத்தில் இரு அணிகளும் கோல் எதுவும் போடாததால் ஆட்டம் பெனால்டி ஷூட் அவுட் முறைக்கு சென்றது. பிரேசிலின் சிறந்த வீரராக கருதப்படும் மெய்கான் இதே போட்டித் தொடரில் ஒரு மேட்ச் வின்னராக இருந்தவர், பெனால்டி ஷூட் அவுட்டில் பந்தை கோல் கீப்பிங் போஸ்டிற்கு மேல் அடித்து துரதிர்ஷ்டவசமாக கோட்டை விட்டார். ஆட்டத்தின் 37-வது நிமிடத்தில் கானா வீரர் டேனியல் அடோடோ வெளியேற்றப்பட்டதால் 10 வீரர்களுக்கு குறுக்கப்பட்ட கானா அணி அதன் பிறகு அபாரமான தடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி ஆக்ரோஷமான பிரேசில் வீரர்களின் கோல் முயற்சிகளை தடுத்தனர்.

கூடுதல் நேரத்தில் இரு அணிகளுமே கோல்களை அடிக்கும் நெருக்கத்திற்கு வந்தன. ஆனால் கானா கோல் கீப்பர் ர.:.பேல், பிரேசிலின் அக்யேய் ஆகியோர் அபாரமான சில தடுப்புகளை நிகழ்த்தி கோல்களிலிருந்து தப்பித்தனர். ஐரோப்பா, தென் அமெரிக்க நாடுகள் அல்லாது ஒரு ஆப்பிரிக்க நாடு அண்டர் - 20 உலகக் கோப்பையை வென்றிருப்பதால் ஆப்பிரிக்க நாட்டு கால்பந்து ரசிகர்கள் உற்சாகத்தில் உள்ளனர்.

இங்கிலாந்து கால்பந்து வீரர்களுக்கு பயிற்சியாளர் எச்சரிக்கை

இங்கிலாந்து கால்பந்து வீரர்கள் விதிகளை ஒழுங்காகக் கடைபிடிக்கவேண்டும் இல்லையேல் தென் ஆப்பிரிக்காவில் நடைபெறும் உலகக் கோப்பை கால்பந்தில் பங்குபெறுவதை அவர்கள் மறந்து விடவேண்டியதுதான் என்று பயிற்சியாளர் கபெல்லோ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வீரர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கடுமையான நடத்தை விதிகளை அவர்கள் கடைபிடிக்கவேண்டும், மீறுபவர்கள் உலகக் கோப்பை கால்பந்து இங்கிலாந்து அணியில் இடம்பெற முடியாது என்று பயிற்சியாளர் கப்பெல்லோ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உக்ரைனுடன் சமீபமாக நடைபெற்ற உலகக் கோப்பை கால்பந்து தகுதிச் சுற்று போட்டியின் போது நடந்த இரவு உணவு விருந்தில் ஸ்ட்ரைக்கர் எமில் ஹெஸ்கீ, செல்பேசியை பயன்படுத்தியதால் வெகுண்டெழுந்த கப்பெல்லோ தன் சாப்பாட்டுத் தட்டை சுவரில் அடித்து கோபத்தை காட்டினார்.

லண்டனில் நடைபெற்ற உலகளாவிய விளையாட்டுத்துறை உச்சி மாநாட்டில் அவர் பேசிய போது, "இது மரியாதை சம்பந்தப்பட்ட விஷயம், உதாரணமாக இரண்டு வீரர்கள் வருகைக்காக 20 வீரர்கள் காத்திருக்க வேண்டுமா? ஏன் வீரர்கள் விதிகளை மதிப்பதில்லை என்பது எனக்கு புரியவில்லை. பயிற்சியாளரையும், வீரர்களுடன் இருக்கும் மற்ற பணியாளர்களையும் மதிக்கப் பழகவேண்டும். எனது முடிவுகளை வீரர்களுக்கு விளக்கத் தயாராக உள்ளேன், ஆனால் எந்த வீரரும் எனது முடிவின் மீதே தர்க்கம் ஏற்படுத்த முடியாது. அணியில் யார் விளையாடப்போகிறார்கள் என்ற முடிவு முற்றிலும் என்னுடையதே." இவ்வாறு கூறினார் கப்பெல்லோ.

### பீபா தலைமை பதவிக்கு பிளாட்டர் தொடர்ந்து போட்டியிட முடிவு

சம்மேளனத்தின் தலைமை பதவிக்கு தொடர்ந்து நான்காவது முறையாகவும் போட்டியிட தற்போதைய தலைவர் ஜெப் பிளாட்டர் திட்டமிட்டுள்ளார். 73 வயதான பிளாட்டர் பிரேஸிலின் ஜோ ஹெவலேன்ஸுக்கு பின்னர் 1998 ஆம் ஆண்டு தொடக்கம் பீபா தலைவராக செயல்பட்டு வருகிறார். கடைசியாக அவர் கடந்த 2007 ஆம் ஆண்டு மூன்றாவது முறையாகவும் தலைமை பதவிக்கு போட்டியிட்டு வெற்றியீட்டினார். பிளாட்டரின் பதவிக்காலம் 2011 ஆம் ஆண்டு முடிவடையவுள்ளது. இந்நிலையில் அவர் நான்காவது முறையாகவும் பீபா தலைமை பதவிக்கு போட்டியிடவுள்ளதாக "கஸட்டா டெல்லோ ஸ்போர்ட்" என்ற பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார். எனது வேலைகள் இன்னும் முடிவடையவில்லை. எனவே, நான் பீபா தலைமை பதவிக்கு மீண்டு ஒருமுறை போட்டியிடுவேன் என்று பிளாட்டர் தெரிவித்தார். சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த ஜெப் பிளாட்டரின் தலைமையின் கீழ் பீபா பல முக்கிய முடிவுகளை எடுத்துள்ளது. அதில் குறிப்பாக உயரமான இடங்களில் கால்பந்து போட்டிகளை நடத்துவதற்கு தடை, கோல்டன் கோல் முறை மற்றும் உலகக் கிண்ணத்தை வெல்லும் அணிக்கு அடுத்த உலகக் கிண்ணத்திற்கு நேரடி தகுதிபெறும் வாய்ப்பை இல்லாமல் செய்தது ஆகிய முடிவுகள் முக்கியம் பெறுகின்றன.

### பலமான அவுஸ்திரேலியாவுடன் தடுமாறும் இந்திய அணி மோதுகிறது

மேலதிகமாக விளம்பரப்பபடுத்தப்பட்டு வரும் இந்திய-அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான 7 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடர் குஜராத் மாநிலம் வதோதராவில் பகல் நேர ஆட்டத்துடன் துவங்குகிறது. இருதரப்பு ஒரு நாள் தொடர்களில் இந்தியா சமீப காலமாக பல தொடர்களை கைப்பற்றி வந்தாலும், இருபதுக்கு 20 உலகக் கோப்பை தொடரில் வெளியேற்றம், சாம்பியன் கோப்பையில் வெளியேற்றம் ஆகியவற்றால் இந்திய அணி சற்றே சந்தேகத்திற்குரிய அணியாக தோற்றமளிக்கிறது. மாறாக தொடர்ச்சியான கிரிக்கெட் போட்டிகளால் கடந்த 12 மாதங்களாக களைப்படைந்துள்ள அவுஸ்திரேலிய அணி, சாம்பியன் கோப்பையை வென்ற மனோ திடத்தில் இங்கு வந்திறங்கியுள்ளது. இந்திய அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்கும் உள்ள மிகப்பெரிய வித்தியாசமாக பலர் பல நுணுக்கங்களை சுட்டிக் காட்டினாலும், அடிப்படையில் ஒரு மிகப்பெரிய வித்தியாசம் உள்ளது. அவுஸ்திரேலிய அணி எப்போதும் வெற்றியை கருத்தில் கொண்டே தங்கள் கிரிக்கெட் ஆட்டத்தை ஆக்ரோஷமாக விளையாடக் கூடியவர்கள். ஆனால் இந்திய அணியில் சமீப காலங்களாக தோல்வி அடைவது என்பது ஒரு பிரச்சனையாக இல்லாமல், மிகவும் சாதாரணமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

சாம்பியன் கோப்பையில் அணி தோல்வியை தழுவியது பற்றி அணியில் உள்ள இளம் வீரர்கள் வருந்துவதில்லை, அவர்களுக்கு தோல்வி கவலையளிப்பதாயில்லை என்று மூத்த வீரர் ஒருவர் தன்னிடம் கூறி வருந்தியதாய் இந்திய கிரிக்கெட் வாரியத்தின் நிர்வாக அதிகாரி ரத்னாகர் ஷெட்டி சமீபத்தில் தெரிவித்திருந்தது நாம் கூர்ந்து கவனிக்கத்தக்கது. சேவாக் வந்து விட்டார், யுவ்ராஜ் வந்து விட்டார் எனவே வெற்றி நமதே என்று ரசிகர்கள் எதிர்பார்ப்பது வெற்றியை அடைய ஒரு அணி என்னவாக இருக்கவேண்டும் என்ற நுணுக்கங்களை அறியாத ஒரு ரசிக மனோ நிலைதான்.

### திராவிட் ரசிகர்களுக்கு...

திராவிட் இலங்கையில் நடைபெற்ற முத்தரப்பு ஒரு நாள் தொடரில் ஓரளவிற்கு சுமாராகவே ஆடினார், சாம்பியன் கோப்பையில் அவரை மட்டும் தனியாக பிரித்து நாம் விமர்சனம் செய்ய முடியாது போன்ற காரணங்கள் இருந்தாலும், நாம் உண்மையில் திராவிட்டை அணியில் வைத்திருப்பதன் மூலம் 2011 உலகக் கோப்பைக்கான ஒரு திறமை மிகுந்த அணியை உருவாக்க முடியுமா என்ற கேள்வியை நேர்மையாக கேட்டுப்பார்ப்பது நல்லது.

### அவுஸ்திரேலியாவிடம் போராடித் தோற்றது இந்தியா

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 4 ரன்கள் வித்தியாசத்தில் போராடித் தோல்வியுற்றது. இந்திய-அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான 7 போட்டிகள் கொண்ட ஹீரோ ஹோண்டா ஒருநாள் கிரிக்கெட் தொடர் வதோதராவில் துவங்கியது. இப்போட்டியில் பூவா-தலையா வென்ற பாண்டிங் பேட்டிங்கைத் தேர்வு செய்தார். துவக்க வீரர் பெய்ன், ரிக்கி பாண்டிங், ஒய்ட், மைக்கேல் ஹஸ்ஸி ஆகியோரது சிறப்பான பங்களிப்பால் அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 292 ரன்கள் எடுத்தது. வெற்றி பெற 293 ரன்கள் தேவை என்ற இமாலய இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி



எஸ். கணேஷ்

தொடர்ச்சி 19ஆம் பக்கம்

S.A.P HELPING HANDS உதவும் கரங்கள்
மக்கள் சேவை சதாசிவ சேவை

மூத்தோருக்கான சேவைகள்
- இருப்பிட வசதிகள் ஒழுங்கு செய்தல்
- சமூக நல பணிமனைக்கு அழைத்துச் செல்தல்
- கோவில் / தேவாலயம் அழைத்துச் செல்தல்
- வைத்தியரிடம் அழைத்துச்செல்தல்
- கடைகளுக்கு அழைத்துச் செல்தல்
- எல்லா வகையான படிவங்களும் நிரப்புதல்
- கோடைகால சுற்றுலா

இலவச ஆலோசனைகளும், ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்

முதல் சேவைகள்
> All Mortgage / Refinance
> Personal Business Loan
> All kind of Insurances
> Line of Credits
> Bankruptcy
> Accident Claims

சதாசிவா - 416.454.2810
ASATHN@hotmail.com

# திடீர் விலை அதிகரிப்பு ஆளுனரின் கரிசனை

ஒக்ரோபர் மாதத்தில் சந்தித்த மத்திய வங்கியின் ஆளுனரும், அவருடைய குழுவினரும், கனடிய மத்திய வங்கியின் வட்டிவீதத்தில் எதுவித மாற்றத்தை ஏற்படுத்தாமல் 0.25% வீதம் என்ற அளவிலேயே விட்டுள்ளனர்.

இது ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டது. திரு. மார்க் கானி அறிவித்ததின் பிரகாரம் வட்டிவீதம் இளவேனிற்காலத்தில் அதிகரிக்கக்கூடிய சந்தர்ப்பம் மிகக்குறைவாகவே உள்ளது (?). பொருளாதார இறக்கம் ஓரளவு முடிவிற்கு வருவது போலத் தோன்றுகின்றது. கனடிய டொலரின், குறுகிய கால வளர்ச்சி கனடிய பொருளாதார வளர்ச்சிக்கும் குந்தகம் ஏற்படுத்தலாம் என திரு. கார்னி எச்சரிக்கை விட்டுள்ளார். டொலரின் வளர்ச்சியை தடுப்பதற்கு மத்தியவங்கி ஆவன செய்ய வேண்டி ஏற்படலாம் என்றும் கூறியுள்ளார். இந்த எச்சரிக்கையை தொடர்ந்து கனடிய டொலரின் பெறுமதியில் இறக்கம் ஏற்பட்டு வருகின்றது.

எதிர்பாராத வீட்டின் விலை அதிகரிப்பு, வாங்குபவர்களின் நிலையிலிருந்து விற்பவர்களின் கையிற்கு மாறியுள்ளது. இதற்கு குறைந்தளவு அடமானக்கடனின் வட்டிவீதமும் குறைந்தளவு வீடுகள் சந்தையில் இருப்பதும் காரணமாகலாம். தொடர்ந்தும் இதேமாதிரியான வட்டிவீதம் இருக்கும் என்று எப்போதும் எதிர்பார்க்க முடியாது என்றும் ஆளுனர் வீடு வாங்குபவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

குறிப்பிட்ட காலத்திற்குள் வீட்டின் வியாபாரம் எதிர்பாராதளவு அதிகரிப்பு ஏற்பட்டு வருவது பொருளாதார நிபுணர்களிற்கும் ஒருவகை திகைப்பை ஏற்படுத்தி உள்ளதுடன், இந்நிலைமை எவ்வளவு காலம் தொடரலாம் என்ற கேள்வியையும் ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு உதாரணமாக, ரொறொன்ரோவின் வெவ்வேறு பகுதியில் நீண்டகாலம் அடுக்குமாடிக் கட்டிடத்தொகுதி அமைப்பதில் அனுபவமும் ஆற்றலுமிக்க Tridel நிறுவனம் கடந்த சனி, ஞாயிறு நாட்களில் (ஒக்ரோபர் 24, 25, 2009 இல்) புதிய கட்டிடத்தொகுதியை சந்தைப்படுத்தியது. இப்புதிய கட்டிடத்தொகுதி Front Street & Bathurst பகுதியில் வர உள்ளது மொத்த மனைகளின் எண்ணிக்கைகள் 308 ஆகும். அத்துடன் 13 அடுக்குகள் கொண்டது. ஒரு அறை கொண்ட ஒரு மனையின் விலை $250,000 அளவில் இருந்து ஆரம்பிக்கின்றது.

250 இற்கு மேற்பட்ட மனைகள் 24 ஆம் திகதியன்றே விற்றுமுடிந்து விட்டது. ஒரு சதுர அடியின் சராசரி விலை $450 இற்கும் மேலாக இருந்தபோதும், இந்த வேகத்தில் விற்று முடிந்தளவிற்கு பல காரணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. 'Tridel' நிறுவனத்தின் நம்பிக்கையான பெயர், புதிய சந்ததி ரொறொன்ரோவின் மத்திய பகுதியில் வாழ விரும்புவது, Tridel நிறுவனத்தின் அனுபவம் மற்றைய அடுக்குமாடிக் கட்டிட நிறுவனங்களை விட மிக வித்தியாசமாகவும் நம்பகத்தன்மையும் உடையது, எதிர்கால விலை அதிகரிப்பு போன்றவையாகும்.

இவ்வாறே வெவ்வேறு அடுக்குமாடி கட்டிட நிறுவனங்களும் தமது புதிய புதிய கட்டிடத்தொகுதியை சந்தைக்கு கொண்டுவந்துள்ளன. இருந்தும் TRIDEL இன் மனைகளுக்கு தனியான மதிப்பும் ஒரு காரணமாகலாம்.

இன்றைய வீட்டுச்சந்தையில் நடப்பதனைத் தொடர்ந்து ஆளுனர் மக்களிற்கு தனது கரிசனையைத் தெரிவித்துள்ளார். அதாவது வட்டிவீதம் அதிகரிக்கும், அத்துடன் வீடு, மனை வாங்குபவர்கள் இன்றைய நிலையை மட்டும் கருத்தில் கொள்ளாமல் எதிர்காலத்தையும் மனதில் கொள்ளவும். ஆஸ்திகளை வாங்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

மக்கள் வாழும் வீடுகளின் விலை (Resale), பொருளாதார இறுக்கத்திற்கு (Recession) கடந்த ஆண்டு (2008) விலையையும், விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையையும் தாண்டியுள்ளது என்பதனை கருத்தில் கொள்வது நல்லது. இதற்கு முந்தைய பொருளாதார இறுக்கத்தில் (1989) ஏற்பட்ட விலை இறக்கத்திலிருந்து மீள கிட்டத்தட்ட 7 வருடங்கள் எடுத்தது.

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

**தொடர் - 307**


**HomeLife GTA Realty Inc., Brokerage***

Independently owned & operated

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"



Raja M. Mahendran, P. Eng. (Broker / Owner)

1711 McCowan Rd. #206, Toronto Tel.: 416.321.6969

145 Traders Blvd # 29, Mississauga Tel.: 905.712.2666

## FOR SALE

- 5215 Finch Ave E. - MIDDLEFIELD & FINCH
- Total Area: 321 Sq. Ft.
- Price $159,500
- Under ground Parking
- Retail store, Medical office, Air travel...
- Close to all amenities





## CONDO. for Sale

- 480 Mclevin Ave - Sheppard / Neilson
- 2 Bedrooms - 2 Washrooms
- Open Balcony - Asking $159,900
- Close to schools and other amenities
- Ceramic Tile In Kitchen And Bathrooms.
- Gatehouse & State Of The Art Facilities.
- Close to all Amenities - Fridge, Stove, B/I-Dishwasher, Washer And Dryer, All Electrical Light Fixtures, All Window Coverings.

## Commercial/Retail Lease

- Markham/Steeles
- 3331 Markham Rd
- Great Location! Brand New Plaza Located At The High-Traffic
- Golden Opportunity To Start Your Own Business.
- Asking price $1,799 Gross Lease



## Townhouse For Sale

- Morningside / Sheppard • 3-Storey
- 3 bedrooms • 3 washrooms
- Fridge, Stove, Washer, Dryer, Central Air, All Elf's And Window Coverings. Walking Distance To Ttc, Park, Shops, Easy Access To 401, Ttc & Go Station. • Price $319,900

## Party Rental Business for Sale

- Brimley/Progress
- Lots Of Rental Items Meant For Variety Of Functions/Occasions.
- Complete Training To Be Provided.
- Gross Rent $2800/Month Plus Utilities.
- Asking Price $99,000 Plus Stock

## Commercial/Retail for sale

- 9909 Highway 48 Rd. • Markham/Major Mac
- Total Area: 1,233 Sq Ft • Price $429,900
- Sought After Location In A High Visibility Strip Plaza. • Many Suitable Uses Including Restaurant/Retail & Services.

## Commercial/Retail for Lease

- 5215 Finch Ave E, Middlefield & Finch
- Rent $950 Gross Lease
- Lowest Rent To Afford Any Bussiness, Great Opportunity!
- Underground And Surface Parking

## Condo. for sale

- Finch / Middlefield
- 2 bedrooms • 1 washroom
- Fridge, Stove, Built-In-Dishwasher, Washer, All Existing Electric Light Fixtures And Window Coverings.
- Upgraded Appliances.
- Price $174,900



**Nantha Aiyadurai**

Cell: 613 850 9931

COLDWELL BANKER COBURN REALTY

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்




Relocation Service

OTTAWA>>><<<GTA



நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

# இன்பியல் நாடகங்கள்

சென்ற இதழ் தொடர்ச்சி

## (2) புதிய இன்பியல் நாடகங்கள்

புதிய இன்பியல் என்ற தொடர் பழைய இன்பியல் நாடகங்கள் பின்பற்றிய உரிப்பொருள், கருப்பொருள் போன்றவற்றிலிருந்து வேறுபடுவன என்பதனைத் தெற்றென விளக்குகின்றது. இது காலமாற்றத்தால் ஏற்பட்டதொன்று. அலெக்சாந்தரின் மரணம் கி.மு. 323ல் நடந்தது. அதனைத் தொடர்ந்து அவரது தளபதி தொலமி (Ptolemy) யால் ஏற்படுத்தப்பட்ட கிரேக்க பரம்பரை எகிப்தில் அலெக்சாந்திரியாவில் ஆட்சி செலுத்திவந்தது. அதனால் அதன்ஸ் நகரத்திலும் பார்க்க அலெக்சாந்திரியா புகழ்பெறலாயிற்று. இக்காலத்தில் கலைஞர்களும் புலவர்களும் சுதந்திரத்துடன் தமது ஆக்கங்களைப் படைக்கலாயினர். புதிய இன்பியல் அரசியல் தொடர்பற்ற பாதையிற் செல்லலாயிற்று. அதீனிய அல்லது கிரேக்க நாட்டவருக்கல்லாது கிரேக்கக் கலாச்சாரம் பரவிய பிறநாட்டவருக்கும் உகந்த வகையில் இன்பியல் நாடகங்கள் எழுதப்பட்டன. அதனால் அவை புதிய இன்பியல் நாடகங்கள் என்ற பெயரைப் பெற்றன.

கிரேக்கக் கலாச்சாரப் பரம்பற் பாலத்தில் (Hellenistic Age) தோன்றிய நகைச்சுவை எழுத்தாளரில் மினான்டர் (Menander) என்பவர் பெயர்பெற்றவர். இவர் கி.மு.342-41 அளவிற் பிறந்தவர். எழுதிய இன்பியல் நாடகங்கள் 108க்கும் அதிகமானவை. இதுவரை முழுமையாகவும் குறையாகவும் கிடைக்கப் பெற்றவை பின்வருமாறு:



*1. The Orge* | *2. Dyskolos*
*3. The Samian Woman* | *4. The Shield*
*5. The Sicyconian* | *6. The Misoumenos*
*7. The Arbitrators* | *8. The Shorn Girl*

மினான்டரின் முதல் நாடகம் வ்ரந முசபந கி.மு. 321ல் மேடையேற்றப்பட்டது. நாடகங்களிற் பின்பற்றப்பட்டுவந்த முன்னுரையைத் தவிர ஏனைய விளக்கங்கள், வாதங்கள் போன்ற அங்கங்கள் இவரது நாடகங்களில் இல்லை. பாட்டுக்குழுவின் முக்கியத்துவத்தையும் வெகுவாகக் குறைத்து விட்டார். காட்சிப் பிரிவுகளுக்கிடையில் இசைவழங்குவதே பாட்டுக்குழுவின் பிரதான பணியாயிற்று. முன்னுரையை கதையை அல்லது கதையின் முக்கியமான சிக்கலை விளக்குவதற்குத் தனிமொழியாகப் பயன்படுத்தினார். இத்தகைய பெருமகன் கி.மு. 293வரை வாழ்ந்தவராகக் கருதப்படுகின்றது.

புதிய துன்பியல் நாடகக்கலையில் வல்ல வேறு பலரும் உள்ளனர். அவர்களில் பிலிமன் (Philemon), திபிலஸ் (Diphilus), அப்பொலோடோரஸ் (Apollodorus) போன்றவர் குறிப்பிடத்தக்கவர்.

## பார்வையாளர்

இன்றைய நாடக வல்லாளரைப்போலவே அன்றைய அதீனிய நாடகத் தயாரிப்பாளரின் தலையாய நோக்கமும் பார்வையாளரை மகிழ்விப்பதுதான். தையோனிசஸ் அரங்க நாடக விழாவை மக்கள் எதிர்பார்த்த வண்ணம் இருந்தனர். பார்வையாளர் அரங்க ஆசனங்களுக்கு அதிகமாகத் திரண்டதால் சீட்டுமுறை கொண்டுவரப்பட்டது. இருக்கைகள் முழுவதுமாக விற்கப்பட்டன.

பார்வையாளர் ஆண், பெண், சிறுவர், அடிமைகள் என்று பலதரப்பட்டவராக இருந்தனர். வறிய பார்வையாளர் தொகையும் அதிகரித்ததால் இவர்களுக்கென்று சலுகைச் சீட்டுகளும் விற்கப்பட்டன. இதனை முன்னெடுத்து கி.மு.450 அளவில் நடைமுறைப்படுத்துவதில் வெற்றி கண்டவர் அதீனிய அரசியல்வாதி பெரிக்கிளிஸ் (Pericles) என்ற பெருமகன்.

ஏறத்தாழ 10 மணித்தியாலம்வரை நாடகங்களை இருந்து பார்க்க வேண்டியிருந்ததால் உணவுப் பொதிகளையும் பிற தின்பண்டங்களையும் பார்வையாளர் கொண்டு வருவர். விரும்பாத காட்சிகளை அல்லது நடிகரைக் கூக்காட்டித் துரத்தவுஞ் செய்வர். கல்லுகளும் எறிவர். வெறுப்பூட்டும் வேளைகளில் சிலர் தூங்கவும் துணிவர். நல்ல காட்சிகளுக்கும் அழகான வசனங்களுக்கும் உயர்வான கருத்துக்களுக்கும் நடிகரின் சிறந்த நடிப்புகளுக்கும் கைதட்டித் தமது மகிழ்ச்சியைத் தெரிவிப்பர். துக்கக் காட்சிகளுக்குப் பார்வையாளர் ஓவென்று அழுத சம்பவங்களுக்கான குறிப்புகளும் கிடைத்துள்ளன.

மொத்தத்தில் அதீனியப் பார்வையாளர் உற்சாகம் மிகுந்தவர், நல்ல இரசிகர். அவர்கள் ஒருவகையில் கொடுத்து வைத்தவர்கள். ஏனென்றால் அதன்ஸ் நாடக விழாவைப் போல் கி.மு. 5ஆம் நூற்றாண்டில் வேறெங்கும் இருந்ததில்லை. அக்கால அதன்ஸ் நகரத்திலேதான் உலகத்திலேயே சிறந்த நாடக ஆசிரியர் என்று இன்றும் போற்றப்படுகின்ற மேதாவிகள் பலர் தங்கள் புத்திகளையும் வித்தைகளை பொலியச் செய்தார்கள்.



கவிஞர் வி. கந்தவனம்

என் மூலம் வீடு வாங்குவது / விற்பதன் மூலம் BMW ஒன்றை வெற்றிகொள்ளலாம்



Interest Rate going up soon
best time to buy Real Estate

ESSO Gas Station with property at HWY exit to Quebec

Scarborough Bankrupt Sale
30,000sq.ft Banquette Hall
in 4.5 acre Land with zoning

Buy low, Sell high - 40 years Low Interest
வங்கியின் பணத்தில் முதலீடு - 5 வருடத்தில் Cash out
5 year plan 3.9% interest Power of Sale
Properties with Tenant's Pay the cost
What's your Risk?

வீடும் வியாபாரமும் Business Zoning
Future long term Investment

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு வேலைவாய்ப்பு
அழையுங்கள் - Sitham (Sam) Shanmugam (Sales Rep)
416.230.7820 / 905.696.7310
HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666

150 - 200 Acres land for sale in Peteboroug. Farm Land value.

# திடீர் விலை அதிகரிப்பு

07ஆம் பக்கத்தொடர்ச்சி

இம்முறை மிகக்குறுகிய காலத்தில் திரும்பியதற்கு, உலகளாவிய நாடுகளின் ஒருமித்த பொருளாதார கொள்கைகளே காரணமாகலாம். இந்த நிலைமை அடுத்த வருடமும் தொடரலாம் என்றே எதிர்பார்க்க எதிர்பார்க்கலாம்.

மேலும் பங்குச்சந்தையில் முதலிடும் பலர் ஆஸ்தியில் முதலிடுவதால் ஆஸ்தியின் விலை வளர்ச்சி 2010 இலும் தொடரலாம். அரசாங்கத்தின் பொருளாதார சலுகைகளும் வியாபார அதிகரிப்பிற்கு காரணமாகலாம்.



தோன்றுகின்றது. பொதுவான இன்றைய சூழலில் வட்டிவீதம் அதிகரிக்காத சந்தர்ப்பத்தில் ஆதன வியாபாரம் ஆரோக்கியமானதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே 2010 ஆம் ஆண்டும் ஆதன வியாபாரத்தில் ஆரோக்கியமான ஆண்டாக இருக்கும் என

இச்சந்தர்ப்பதில் கனடிய நிதி நிறுவனங்கள் வட்டி வீதத்தில் சிறிதளவு அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த அதிகரிப்பு வியாபாரத்தில் உடனடி பாதிப்பை ஏற்படுத்தும் என்று கூறமுடியாது.

# வாழ்க்கை சுவர்க்கமாவது இனிய இல்லமொன்றில்...

# Elaguppllai (Mike) Srinathan B.Sc

## Sales Representative

**Dir: 416-276-1225 Off: 905-470-9800**

**Email: esrinathan@trebnet.com**




**Mccowan/401**



**$204,900**
Condo Apt. Bed rooms 2, Washroom 1 Ttc At Door, Close To Scarborough Town Centre, Clean, Bright, East Corner. Facilites Include An Indoor Pool

**Brimley & Denison**



**$318,900**
Link 2 Story, Bed rooms 3+1 , Washrooms 3 Basement Partly Finished With Bed-room And 3 Pc Washroom, Bright And Spacious House

**Brimley & Eglinton**



**$319,900**
Detached Bungalow, Bed rooms 3+1, Washroom 1 Lots Of Windows.Walk-Out Basement With Sep Side En-trance Gleaming Hardwood

**Morningside/Sheppard**



**$339,900**
Town house, 3 story, Bed rooms 3, Washrooms 3 Apx 1850 Sq.Ft, Under 4 Years Old, Large Size 3 Bed Room Open Concept Floor

**Markham/Denison**



**$369,900**
Semi Detached 2 Story Bed-rooms 3, Washrooms 3, Double Driveway. Close To Ttc/Yrt. Basement Floor Has Been Carpeted

**Finch/Morningside**



**379,500**
Detached 2 Story, Bedrooms 3, Wasroom 3 Immaculate Detached Home With 9 Ft. Ceiling, Close To Ttc

**N Of Steeles/E Of Mccowan**



**$389,900**
Link 2 Story, Bed rooms 3+1 Washromss 4 Excellent Loca-tion, Approx 1750 Sq.Ft, Huge 3-Bedrooms, New Hardwood Floors, Double Driveway,

**Mccowan/Denisonn AveAve**



**399,0900**
Link 2 Story, Bed rooms 4 Washrooms 3.Short Cut To Steels,Schools,Park..... New Furnace & Hot Water

**Reeves Way/9th Line**



**$409,800**
Detached 2 Story, Bed rooms 3, Washrooms 3 New Blooming Community With Shopping, Park, Tran-sits, School, Go Station

**Markham Rd/ Buroak**



**$415,000**
Detached 2 story, Bed rooms 3 Washrooms 3, Gleaming Solid Oak Hard-wood Flrs,Stairs And 2nd Flr Hall

**Staines/Finch**



**$419,000**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 3, 4 Bedroom With Double Car Garage House Close To Ttc, School And Shopping

**9th Line /14th Ave**



**$432,000**
Detached 2 Story, Bed rooms 3, Washrooms 3 Upgraded Kitchen Cabinet & Back Splash, Newly Painted-Minute To 407

**Markham/16th Ave**



**$435,000**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 3, Appx. 2000 Sq.Ft.* Indoor Access To Garage, Fully Fenced, Close To Public School/Shops.

**Staines/Steeles**



**$436,900**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3, 5 Year New, Modern Large Kitchen, Double Garage, Close To School, Fenced

**9th Line & Hoover Park Dr.**



**$ 459,900**
Detached 2 Story, Bedrooms 3, Washroom 3 2 Years New , Very Well Maintained Like Brand New, Hardwood Floor-ing Throughout Main Floor

**9th Line & Rouge Bank**



**$469,900**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 3, Large 4 Bedroom In High-De-mand Legacy Area!

**Bur Oak & Hwy 48**



**$470,000**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 4, To Go. Elementary School Across Street. Close To Shop-ping, Seperate Dining Room

**Woodbine & Major Mac**



**$688,000**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 4, Luxurious 4 Yrs, Mins To Hwy, Library & Shopping Malls, Steps To Public Transit. Walk To Park,

**Elm Grove & Queen W.**



**$799,000**
Store / Office Solid Brick Building With 3 Bedroom Apartment Totally Renovated

**Westney/ RosslandMacken-**



**$279,000**
Detached 2 Story Bed rooms 3, Washrooms 2Detached Home With A Finished Base-ment, Spectacular Ajax Home

**Bramalea / Larkspur**



**$379,900**
Detached 2 story. Bed rooms 4, Washrooms 3, No Maintenance, Custom Shelving In Wicc

**Mccowan/16th**



**$749,990**
Detached 2 story. Bed rooms 4+1, Washrooms 4, High Demand Markham Neighbourhood, Access To 3-Car Garage &

**Sales of Business**




**$479,000 For Sale**
Sale Of Business Without Property Gas Stations. Esso Gas Station With Con-venience Store

RE/MAX
**Realtron Realty Inc. Brokerage**
**Independently Owned and Operated**
**7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7**

**'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'**

# எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

## தோல் - Skin

இதனைச் சருமம் எனவும் அழைப்பர். இது நமது உடம்பில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. இதன் பாகங்கள் பின்வருமாறு.

மேற்தோல் (புறத்தோல்) - Epidermis
உட்தோல் (அடித்தோல்) - Subcutaneous
தோல் மடிப்புக்கள் - Skin Fold
தோல் பட்டை (அகத்தோல்) - Dermis
இயற்கை நிறப் பொருட்கூறு - Pigment
மச்சம் - Birth Mark
நகம் - Nail
மயிர் மயிர்க்கால் - Hair Hair root
வியர்வைச் சுரப்பி - Sweat Gland
நெய்ச் சுரப்பி - Sebaceous Gland
அழகுப் பொட்டு - Beauty Spot
குருதிக் குழாய் - Blood Vessel
நரம்பு நுனி - Nerve Termination

**தோலில் பற்றிக் கொள்ளும் வியாதிகள்.**

தோல் தடிப்புப் படை - Eczema
சொறி சிரங்கு - Theitch
தோல் புற்று - Skin Cncer
படுக்கைப் புண் - Flea Bite
படர் தாமரை - Ring Worm
தடித்தல் - Rash
கொப்புளம் உண்டாக்கும் தழும்பு - Blisters
பாலுண்ணி - Warts
ஒவ்வாமைக்கு உரிய பொருட்களின் தொடுகையினால் வரும் தோல் அழற்சி - Allergic Contac Dermatitis
இறுக்கிய ஆடையால் தோலில் வரும் சினப்பு - Nappy Rash
முகப்பருக்கள் - Pimples
மேற்தோல் கெட்டியாகி கரகரப்பாகி விடும் நோய் - Ichthyosis
அரையாப்பு (இடுப்பிலும், உடம்பிலும் மென்மைப் பகுதியில் அள்ளிப் போடும் நோய்) - Shingles
தோலில் கீறல் ஏற்படல் - Excoriation
நகச் சுத்து - Paronychia
காஞ் சொறி - Urticaria
அக்கி (உடல் மீது மென்சிவப்பு நிறம் படரும் நோய்) - Erysipelas
பேன் - Louse
நமட்டும் சொறி ( யானைச் சொறி) - Psoriasis
காஞ்சொறி - Nettle Rash
தென்னாக்கடி - Flea Bite
கடிக்கிறது - Itches
தோல் வெடித்தல் - Skin Cracks
நகம் வெடித்தல் - Break
மறு (மச்சம்) - Beauty Spot
பொடுகு (சொடுகு) - Dandruff
மயிர் உதிர்தல் - Loss Of Hair
புண் (அவியல்) - Ulcer

வரட்டுத் தோல் - Dry Skin என்பவற்றைக் குறிப்பிடலாம்.



Normal Skin

தோலின் மேற்தோல் அதாவது புறத்தோல் அடர்த்தியான திசுக்களினால் உருவானது. இதனை எபிடர்மிஸ் (Epidermis) என்றும் அடிப்பகுதி அதாவது உட்தோல் டெர்மிஸ் (Dermis) என்றும் கூறப்படுகின்றது. இவை இரண்டிற்கும் கீழ் கொழுப்பு (Fat) காணப்படுகின்றது. அடியில் உள்ள Basal Layer இல் திசுக்கள் உற்பத்தி செய்யப்பட்டு மேல் அடுக்கிற்கு அனுப்பப்படுகின்றது. மேல் செல்லும் திசுக்கள் மெல்ல இறந்த நகம் உற்பத்தியாவதற்குரிய கெராடின் (Keratin) என்ற புரதத்துடன் கலந்து மெலனின் (Melanin) என்ற அணுக்களை உருவாக்கின்றன. இதுதான் நமது தேகத்திற்கு நிறத்தைக் கொடுக்கின்றது. புறத்தோல் அதாவது மேல் தோல் கீழ்பகுதி அகத்தோல் அதாவது தோல் படை அடித்தோல் காணப்படுகின்றன. அகத்தோலில் இருந்து கொழுப்புச் சுரப்பிகள், இரத்த நாளங்கள், உரோமக்கால்கள், வியர்வைச் சுரப்பிகள் காணப்படுகின்றன. நமது உடலில் ஏற்படும் மணத்திற்கு அப்போசிரையின் என்ற வியர்வைச் சுரப்பி முக்கியமாக அமைகின்றது. நமது உடம்பில் வியர்வையை வெளியேற்றி உட்வெப்பத்தை ஒழுங்கு நிலைக்கு கொண்டுவருகின்றது. தோலிலுள்ள இரத்தக் குழாய்கள் உடல் வெப்பத்தை ஒரே நேராக இருப்பதற்கு உதவியாக இருக்கின்றது. மூளைக்குச் செய்திகளைக் கொண்டு செல்லும் நரம்புகளும் தோல் பகுதிகளில் உண்டு.

நமது ஆள் அடையாளத்தை நிரூபிக்கக் கூடிய ரேகைகளானது விரல், உள்ளங்கைகளின் தோல் மேல் காணப்படுகின்றன. தலை மயிர், நகம் என்பன தோல் பகுதிகளில் இருந்து உருவாகி வளர்ந்து வருகின்றன. இவை தோலின் இறந்த திசுக்கள் எனவும் கூறலாம். இவை உடம்பில் ஏற்படும் சில வியாதிகளைக் கண்டறிய வைத்தியர்களுக்கும், எமக்கும் உதவியாக இருக்கின்றது. எனவே இத்தன்மை பொருந்திய தோலில் ஏற்படும் சில வியாதிகளைப் பற்றி முன்கூட்டியே அறிந்து கொள்வதில் எம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

தோலில் ஏற்படும் வியாதி உடம்பில் ஏற்படும் வியாதி போல் கெடுதலையோ, அன்றி ஆபத்தையோ விளைவிக்கக் கூடியதல்ல. சிலருக்குத் தோலில் வெண் புள்ளிகள் தோன்றுவதைக் காணக்கூடியதாகவுள்ளது. இதனை (Vitilego) என்று கூறப்படுகின்றது. தோலுக்கு மெலனின் (Melanin) என்ற சாயம் நிறத்தைக் கொடுக்கின்றது. வெண் படை, வெண் குஷ்டம் போன்ற பல நோய்கள் ஏற்படும். இவற்றை நன்கு பகுத்தறிய வேண்டும். வெண்புள்ளிக்கு வெண்குஷ்டம் என்ற பெயரால் அழைக்கப்படுவதினால் இதனைக் குஷ்டம் என்றே கூறலாம். இது தோல் நோய்க்கும் இதற்கும் தொடர்பு இல்லை. இதனைச் சாயம் நீக்கிய துணிக்கு ஒப்பிடலாம். அதாவது தோலில் உள்ள சாயம் (Melanin) Pigments இயங்கிவிட்டால் நமது தோல் வெழுத்து விடும். இதற்குக் காரணம் Melanin உற்பத்திக் குறைந்து விடுவதேயாகும். இந்நோய் சிறியோர், பெரியோர் எவருக்கும் வர இடமுண்டு. நோய் உற்றவரைத் தொடுவதினால் ஏற்படாது. ஆனால் இந்நோய் ஏற்பட்டால் மனநிலை பாதிக்கும் தன்மையுண்டு. உயிருக்கோ உடம்பிற்கோ தீங்கு ஏற்படாது. இதன் காரணத்தை அறிந்து அவற்றை மேற்கொண்டால் மனநிலைப் பாதிப்பை அகற்றி விடமுடியும். எதற்கும் இதற்குரிய வைத்தியர்களின் ஆலோசனைகள் மிக நன்மை பயக்கும்.

ரப்பர், பிளாஸ்டிக் பொருட்கள் தொடர்ந்து நமது தோலில் உராய்வதினாலும், ஒவ்வாத இரசாளப் பொருட்களினாலும், இயற்கைக் குங்குமத்தாலும் தோல் மாற்றம் ஏற்பட இடமுண்டு. எனவே தோல் பகுதியில் உராய்வு ஏற்படா வண்ணம் பாதுகாத்துக் கொள்வது எம்மைப் பொறுத்ததாகும்.

உடம்பில் பொஸ்பரஸ், சல்பையிட், இரும்புச்சத்து ஆகிய கனிப்பொருட்களும் அதிக இரும்புச் சத்து குறைந்தாலும் சருமத்தில் மாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு. மேலும் நாம் அணியும் உடுப்புக்களை இறுக்கமாக அணிவதினாலும் தோலில் மாற்றம் ஏற்படவழியுண்டு. எனவே இதில் முக்கிய கவனம் எடுக்கவேண்டும்.

சிலருக்கு தீக்காயத்தினால் தோலில் மாற்றம் ஏற்பட்டு சுகம் கிடைத்த பின்னும் தோலில் "தீக்காய மறு" காணப்படும். நோயை எடுத்துக் கொண்டால் நீரிழிவு உடல் நோய், தொற்றுக் கிருமி தாக்கும்போது பல ஈறுகளில் சீழ் பிடித்தல், தொண்டைப் புண், பால் வினை நோய், மற்றும் நோய் எதிர்ப்பு சக்திகுறைந்தாலும் தோலில் மாற்றம் காணப்படும். இந்நோய் வந்தால் உதடு, உள்ளங்கை, உள்ளங்கால், விரல் நுனி, ஆண், பெண் பிறப்புறுப்புக்கள், தலைப்பகுதிகளிலில் வர இடமுண்டு. இந்நிலையில் தலைமுடி வளராமலும், கை கால்களைத் தடவிப் பார்க்கும் போது மேடு, பள்ளம் இல்லாமலும் சுட்டாறிய காயம் போல் வெளுக்காமலும் இருந்தால் சுகமாக வந்து விடும். இந்நிலை காணாவிடில் சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும். எனவே இந்நிலை ஏற்படாதிருக்க தினசரி கீரைவகையில் பொன்னாங்காணி, முருங்கையிலை, வல்லாரை போன்றவற்றை உணவில் சேர்த்துப் பாவித்து வரவேண்டும். செம்பு பாத்திரத்தில் நீர் ஆகாரங்களை பாவிப்பது நன்மை பயக்கும் எனவும் கூறப்படுகின்றது.

பெரும்பாலும் மேற்கூறப்பட்ட வியாதி உடையோர் மற்றும் பழவர்க்கங்களை பாவித்தாலும் உயிர்சத்து "C" வர்க்கத்தை தவிர்ப்பது நல்லது. உ+ம் திராட்சை, தோடை, எலுமிச்சை, நெல்லி தவிர்ப்பது உத்தமம். ஆடைகளில் பருத்தி நூல் ஆடை நன்று. காலத்திற்கு ஏற்ப மற்றும் உடுப்புக்களை மேல் அணியலாம். பிளாஸ்ரிக், இரசாயனப் பொருட்கள் தவிர்க்கப்பட வேண்டும்.

சிலருக்கு உயிர்சத்து " B " குறைவதினால் நமது தோல் பகுதியில் "பெரி பெரி" என்ற வியாதி ஏற்படும். எனவே இச்சத்தை தவறவிடாமல் பாவிக்க வேண்டும் எனக் கூறப்படுகின்றது. அடுத்து சிலருக்குச் செதில் படை (Sorlasis) நோய் வருவதுண்டு. ஆண்களை விடப் பெண்களுக்கு அதிகம் வரலாம். தோல் பகுதியில் படைபடையாகவும் வெள்ளையாக செதில்கள் உதிர்ந்து கொண்டிருக்கும். இதன் அறிகுறிகளை ஓரளவு அறிந்து கொள்வது நல்லது. சருமத்தின் மேல் பகுதியில் சிறிது வட்ட வடிவாக தோன்றிய பின் உடம்பு முழுவதும் பரவும் தன்மையுடையது. முதலில் நிறம் சிவப்பாகவும், தடித்தும், தகடுபோல் மினுமினுப்புடனும் காணப்படும். அதில் நவச்சல் ஏற்பட்டு சொறியும் போது மிருதுவாக தெரிவதுடன் சிலவேளை இரத்தம் அல்லது திரவம் கசிவதைக் காணலாம். நாள் அடைவில் வெள்ளைக் கண்டலாக மாற்றம் அடைவதுடன் சொறிந்தால் செதில் செதிலாக கொட்டும்.

பெரும்பாலும் இந்நோய் முழங்கால் முழங்கை, தலைப்பகுதி, முதுகின் பின்புறம், கைகால் வெளிப்பகுதி, அக்குள் என்பவற்றில் காணப்படும். இந்நோய் வருவதற்கு பரம்பரையும் ஒரு காரணமாகவும் இருக்கும். சில மருந்துகள் ஒத்துவராததினாலும் பால் வினை நோய் முற்றிய நிலையிலும், வெப்பநிலை அதிகரிப்பு, வெட்டுக்காயம், நுரையீரல் தாக்கம், ஒவ்வாமை, உயிர்சத்து A குறைவினாலும் தொண்டையில் ஏற்படும். தொற்று நோய் மற்றும் கவலை அதிர்ச்சி, மன உளைச்சல் போன்றவையாலும் ஏற்படலாம் எனவும் கூறப்படுகின்றது. எனவே மனநிம்மதியும் அமைதியும் முக்கியமாக கடைப்பிடித்தல் வேண்டும். அத்துடன் தவறாது நீராட வேண்டும். நீராடும் போது தற்பாதுகாப்புக்காக பச்சைப்பயறு, சீயற்காய், மஞ்சள் இவற்றைத் தனித்தனியே தூள் செய்து கலந்து நீரிட்டு குழைத்து மேலில் பூசிவருதல் நன்றாகும். (10 நிமிடம் தாமதித்து நீராடல்). சவர்க்காரம் பாவிப்பது நல்லதல்ல. விரும்பின் கோம்பா (Comba) சவர்க்காரம் நன்மை பயக்கும். உயிர்சத்து நிறைந்த தாவர உணவு, கீரை வகை மிக நன்றாகும். கருவாடு, மாடு, மான், மரை, இறால், நண்டு பாவிப்பதை ஓரளவு தவிர்த்தல் வேண்டும். அன்னாசி, பயற்றங்காய் உகந்தது அல்ல. மற்றும் மரக்கறி சூப், சலாட் வகை பாவித்தல் விரும்பத்தக்கது.

தண்ணீர், பழரசம் வேண்டியளவு பாவிக்கலாம். கீரைவகை நன்று. சலம், மலம் ஒழுங்காக கழிக்கப்பட வேண்டும். வேப்பெண்ணை, வேப்பிலைச்சாறும் உரிய இடங்களில் பூசிவருவது நன்று. இவற்றைக் கையாண்டாலும் தங்கள் வைத்தியர்களிடம் சென்று பரீட்சித்து உள்பாவனைக்குரிய மருந்துகளைப் பெற்று சுகத்தை அடைவதுடன் தங்கள் வைத்தியர்களிடம் தொடர்பு கொள்வதினால் முக்கிய காரணத்தைக் கண்டு கொள்வதற்கு வழிவகுக்கும். மனநிம்மதியும் ஏற்படும்.

தொடரும்...

வைத்திய கலாநிதி
கே.ரி. கோபால்
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 416.939.2013



**Driving School**



- ஓட்டுனர் பயிற்சியில் நட்பான அணுகுமுறை
- நவீனத்துவமான பயிற்சி முறையுடன் நம்பிக்கையான வெற்றி
- **G1, G2** தேர்வுப் பயிற்சிகள், போக்குவரத்து வசதிகள், தெளிவான விளக்க வகுப்புகள்,
- வீதித் தேர்வுக்கான வாகன ஒழுங்குகள், வசதிக்கேற்ற தேர்வு நாட்கள்
- நீண்டகால அனுபவத்தின் தனித்துவமான பயிற்சி - General Driving School

Ministry of Transportation Approved Instructor - பேரின்பநாதன் வேந்தன் - 416-731-2829
Email: venthanctr@yahoo.com

# வீடு ஒன்றின் சொந்த உரிமை பறி போகாமல் பாதுகாக்கும் "உரிமை காப்புறுதி"

## TITLE INSURANCE

## கனடிய தகவல் தொடர் 112

வீடு அல்லது வியாபார நிறுவனத்தின் சட்டரீதியாக பதிவு செய்யப்பட்ட உரிமையாளர்களாக தாங்கள் இருக்கலாம். அந்த உரிமையில் கூட சில நேரங்களில் துரதிர்ஸ்டவசமாக ஆபத்துக்கள் ஏற்படலாம்.

இத்தகைய ஆபத்துக்கள் ஏற்படலாம் என்னும் எதிர் நோக்கில் பாதுகாப்பு வழங்குவதற்காக உருவாக்கப்பட்டதே "உரிமைக் காப்புறுதி" (Title Insurance) ஆகும்.

வீடு மற்றும் வியாபார நிறுவனங்கள் சட்டரீதியாக கைமாற்றம் செய்து கொள்ளும்போது ஒரே தரமாக செலுத்தும் கட்டணத்துடன் வக்கீலின் உதவியுடன் கைச்சாத்திடும் ஒப்பந்தமே இக்காப்புறுதி திட்டம் ஆகும்.

ஆனால் ஒன்று இந்த ஒப்பந்தம் சகல வீடு, வியாபார நிறுவன உரிமையாளரும் பெற்று வைத்து இருக்க வேண்டும் என சட்டரீதியாக கோரப்படுவது (Mandatory) அல்ல. ஒரு பாதுகாப்பிற்காக செய்து வைத்துக் கொள்ளலாம்.

**இவ் "உரிமை காப்புறுதி" (Title Insurance) ஒப்பந்தம் ஒன்றினை பெற்று வைத்திருக்கும் வீட்டு உரிமையாளர் ஒருவருக்கு எப்படியான பாதுகாப்பு இக்காப்புறுதியினால் கிடைக்கின்றது?**

எப்படியான சிக்கல் நிறைந்த நிலைமையில் வீடு போன்ற அதிஉயர் சொத்துக்களின் உரிமையாளரை இக் காப்புறுதி பாதுகாக்கின்றது என்பதனை பின்வருமாறு தெளிவு பண்ணலாம்.

(1) சொந்தமாக ஆதனம் ஒன்றை வாங்கி தங்கள் பெயரில் சட்டபூர்வமாக பதிந்து வைத்திருக்கும் நிலையில் சில வருடங்களுக்கு பின்பு, இந்த குறிப்பிட்ட ஆதனத்தில் சட்டரீதியாக இன்னொருவர் உரிமை கோருகின்றார்.

அவர் பெயரில் உரிமை பத்திரம் பதிவில் இருக்கின்றது என்ற செய்திகள், கடிதங்கள், ஆவணங்கள் அதிர்ச்சிகரமான நிலையில் தங்களை நோக்கி சில நேரங்களில் வரலாம். இந்த நிலையில் முழுமையாக தங்களை பாதுகாப்பது இக்காப்புறுதி ஒப்பந்தத்தின் கடமையாகும். (Unknown Title Defects)

(2) தங்களுக்கு முன்னர் உரிமையாளராக இருந்தவர் சில நேரங்களில் ஏதாவது

(a) மின்சார செலவு கட்டணம் (Electricity)
(b) எரிபொருள் சக்தி கட்டணம் (Utilities)
(c) நீர் கட்டணம் (Water Bill)
(d) சோலை வரி (Property Tax)
(f) கொண்டோமினிய கூட்டுத்தாபன கட்டணம் (Condominium Fees) - மாதாந்த பராமரிப்பு கட்டுப்பணம்
(g) அடமானக் கட்டணம் (Mortgage Payment)

என ஏதாவது ஒன்றினை செலுத்த தவறிவிட்டால் அதன் சுமை தற்போது வீட்டின் உரிமையாளராக இருக்கும் தங்களின் தலையில் வந்து விழும் போது அப்படியான ஒரு நிலை ஏற்பட்டால் பயப்பட தேவையில்லை. இக்காப்புறுதி ஒப்பந்தம் இத்தகைய பிரச்சனைகளை பார்த்துக் கொள்ளும். (Existing Liens against the Property)

(3) அயல் வீட்டு எல்லை குறிப்பிட்ட வீட்டின் எல்லையினை சட்டரீதியாக அல்லது சட்டரீதியற்ற முறையில் ஆக்கிரமிக்க பார்த்தால் இவ் ஒப்பந்தம் பாதுகாக்கும். ( Encroachment Issues)

(4) காணியின் எல்லை வரைபடங்களில் உள்ள முரண்பாடுகள், அல்லது காணியின் பதிவுகளில் ஏற்படும் தவறுகளுக்கும் இக்காப்புறுதி பாதுகாப்பு வழங்குகின்றது. (Errors in Surveys and Public records)

(5) மோசடியான பத்திரங்களை உபயோகித்து வீட்டின் உரிமை சட்டரீதியாக தங்களுக்கு எழுதப்பட்ட பின்பு காலப்போக்கில் இம்மோசடி காரணமாக வீட்டின் உரிமையாளராக இருக்கும் தங்களுக்கு ஏற்படும் தலையிடிகள், பிரச்சனைகளுக்கும் இக்காப்புறுதி பாதுகாப்பு வழங்குகின்றது. (Title Fraud)

(6) தங்களின் வீட்டு உரிமையில் ஏற்படும் ஆபத்துக்களில் இருந்து மீள்வதற்காக தாங்கள் மேற்கொள்ளும் சகல வக்கீல் செலவுகள், வழக்கு செலவுகளையும் இவ் ஒப்பந்தத்திலிருந்து மீள் பெறலாம்.

"வீடு" ஒன்றுக்கு உரிமை காப்புறுதி கைச்சாத்திட்டு பெறும் போது பின்வரும் விடயங்கள் காப்புறுதி பத்திரத்தில் தெளிவாக உள்ளதா? என்பதனை புரிந்து கொள்ள வேண்டும் என்பதனை கனடாவில் வெளி வரும் பிரபல்யமான காப்புறுதி தொடர்பான சஞ்சிகையில் வெளியாகியிருந்தது.

(a) வீடு வாங்கும் போது எவ்வளவு பெறுமதிக்கு விலை கொடுத்து வாங்கியிருந்தீர்களோ அந்த விலைக்கு காப்புறுதி செய்யப்பட்டுள்ளதா?
(Your home is Insures for its full value or the amount you paid for it?)

(b) புதிதாக வீடு வாங்கியவராக இருந்தால் வீட்டு உரிமை பத்திரம் சட்டரீதியாக கையளிக்கப்பட்ட திகதியிலிருந்து (Closing Date) வலிமையுடையதாக உள்ளதா?
(Your policy's effective date is the same your home's closing date, if you are a new home buyer)

(c) தாங்கள் வாங்கிய வீடு என்ற ஒரு சொத்து அல்லது ஏனைய மேலதிக வீடுகள் யாவும் சரியாக இவ் உரிமைக் காப்புறுதி ஒப்பந்தத்தில் பதியப்பட்டுள்ளதா? என்பது பரீசிலனை செய்து கொள்ள வேண்டும்.
(You carefully review your policy to ensure that it correctly describes all of the property you are purchasing)

(d) எந்த வகையான ஆபத்துக்களுக்கு பாதுகாப்பு இவ் ஒப்பந்தத்தில் உள்ளது? எவற்றுக்கு இல்லை? என்பதனை புரிந்து கொள்ள வேண்டும்.
(You understand what title - related losses your policy will cover and what it excludes)

(தற்போது இவ் "உரிமை காப்புறுதியினை" ஒன்ராறியோ மாகாணத்தில் ஆறு காப்புறுதி கம்பனிகள் மட்டும் சந்தைப்படுத்துகின்றன. இதில் இரு கம்பனிகள் அமெரிக்கக் கம்பனியின் கிளை நிறுவனங்கள் ஆகும். அண்மைக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இக்காப்புறுதியில் 2006ஆம் ஆண்டில் மட்டும் ஒன்ராறியோ மாகாணத்தில் 200 மில்லியன் டொலர் தொகைக்கு காப்புறுதி கட்டணங்கள் மொத்தமாக கொடுக்கப்பட்டுள்ளது என புள்ளி விபர அறிக்கை தெரிவிக்கின்றன).

ஆனால் இறுதியாக இங்கு குறிப்பிட வேண்டிய முக்கியமான விடயம்!

வீடு, நிலம் மற்றும் வியாபார நிறுவனத்தின் உரிமை என்பது சட்ட ரீதியாக கை மாற்றம் செய்து பதிவு செய்து கொள்ளும் போது அதில் எதுவிதமான சிக்கல்கள், பிரச்சனையும் இல்லாது சரியான முறையில் பரீசிலனை செய்து மாற்றங்களை செய்து கொடுப்பது தாங்கள் நியமிக்கும் சட்ட வல்லுனரின் மிகப் பெரிய கடமையாகும்.

பொதுவாக வாடிக்கையாளரை நோக்கிய அதி உயர் கடமை உணர்வுடன் செயல்படும் வக்கீலின் இந்த தொழில் செயல்பாட்டில் தவறுகள் எதுவும் நடந்துகொள்ள மாட்டாது என கருதிக் கொள்ளலாம்.

ஆனால் இங்கு சட்டரீதியாக செய்து தர வேண்டிய மாற்றங்கள், பதிவுகளில் வக்கீலின் செயற்பாட்டில் தவறுகள் ஏற்பட்டால், இத்தவறுகளை சரியாக நிரூபிக்கும் போது வக்கீலின் தொழில் பொறுப்பு காப்புறுதியில் (Professional Liability Insurance) இருந்து சட்ட ரீதியாக வழக்கு தொடர்ந்து இப்பாதிப்புக்களுக்கு நிவாரணம் பெறலாம் என்பது அறிந்து கொள்ள வேண்டிய இன்னொரு விடயமாகும்.

இப்படியான ஆபத்துக்கள் தங்கள் பணிகளில் எதிர் கொள்ள வேண்டி வரலாம் என்ற காரணத்தினால் கனடாவில் இயங்கும் சகல சட்டவல்லுனரும், தங்களின் தொழில் தவறுகளினால் வாடிக்கையாளர் ஒருவருக்கு ஏற்படலாம் என எதிர்பார்க்கும் ஆபத்துகளுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக இத்தொழில் பொறுப்பு காப்புறுதி (Professions Liability Insurance) செய்து வைத்திருப்பது வழமையாகும். ஆனால் இங்கு தவறு ஒன்று நிரூபிக்கப்பட்டு சட்டவல்லுனரின் தொழில்பொறுப்பு காப்புறுதியுடன் நின்று போராடுவதனை விட இவ் உரிமை காப்புறுதி ஒப்பந்தம் செய்து வைத்து இருந்தால் இந்த நிறுவனத்திற்கு ஒரு முறைப்பாடு எழுத்தில் வழங்கி விட்டால் போதும். நியாயம் இருந்தால் தீர்ப்பு தேடி வரும்!. ஏனெனில் சட்டவல்லுனரின் தொழில் பொறுப்பு காப்புறுதியில் வழக்கு தொடர்ந்து போராடி பாதிப்புகளுக்கு நிவாரணம் எடுப்பது என்பது குறைந்த காலத்தினுள் முடிவடையும் விடயமல்ல.

முடிவாக, "உரிமைக் காப்புறுதி" எதிர்காலத்தில் ஒரு பாதுகாப்பு அரணாக இருக்கலாம் என்பதேயாகும்.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

## யோகா பயிற்சி வகுப்புக்கள்



அனுபவமிக்க யோகா சிகிச்சை நிபுணரும் (Yoga Therapy Consultant) யோகா ஆசிரியையினால் (Yoga Teacher) நோய்களுக்கான யோகா சிகிச்சையும் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. அத்துடன் தனிப்பட்ட யோகா வகுப்புக்களும் உண்டு. மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: 647.348.3423

## REAL ESTATE வகுப்புகள்

ரொறொன்ரோவில் இலவச ஆதனவியல் (***Real Estate***) வகுப்பு ஆரம்பிக்க இருக்கின்றது.

தொடர்புகளுக்கு: ***Vane - 416.321.6969***



# மாரடைப்பு தவிர்ந்த வேறு இருதய நோய்கள்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

## பகுதி - 03

### *Yoga Therapy For Heart*

பிறவியிலே பல கோளாறுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளன. இருதயத்தில் துவாரம் ஏற்படுவது, வால்வு சுருக்கம் என்பன. பிறவியிலே நல்ல இரத்தம், கெட்ட இரத்தம் கலந்து பிறக்கும் குழந்தைகளின்



உதடு, வாய், கைகள் நீலமாக இருக்கும். இதைத்தான் Blue Baby என்பர். நெருங்கிய சொந்தத்தில் திருமணம் செய்தால் கர்ப்பமாக இருக்கும் போது சில குறிப்பிட்ட நோய்களினால் தாக்கப்பட்டாலோ, தேவையற்ற சில மருந்துகளை உட்கொண்டாலோ குழந்தைகளின் இருதயத்தில் துவாரங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. அடுத்து வைரஸ்களினால் இருதயத்தில் இரத்தக் கசிவு, இருதயம் பெரிதாவது போன்ற பாதிப்புக்கள் ஏற்படலாம். இருதயத்தில் கட்டி கசநோய் போன்றவையும் ஏற்படுவதுண்டு.

நீங்கள் 40 வயதைத் தாண்டி இருந்தால் முழு உடல் பரிசோதனை செய்து கொள்ளுங்கள். பரம்பரை பரம்பரையாக இந்த நோய்கள் தொடர்ந்தால் ஒரு யோகாசன நிபுணரை நாடி சரியான யோகாசன பிரணாயாமப் பயிற்சினைப் பழகி நோயின் தீவிரத் தன்மையைக் குறைத்து அதை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும்.

மாரடைப்பு என்பதைப் பொறுத்தவரை அதைத் தவிர்ப்பதே நல்லது. அதை வந்த பின் பார்ப்போம் என்றுதான் 90 வீதத்தினரும் எண்ணுகின்றனர். நெஞ்சுவலி என்பது பலவகைப்படும். எல்லா நெஞ்சு வலிகளும் மாரடைப்பு காரணமாக வருவது என்று சொல்ல முடியாது. மார்பிலிருந்து வரும் வலியால் ஏற்படுவதுதான் மாரடைப்பு என்பது அல்ல. மார்பைச் சுற்றியுள்ள நுரையீரல் (Lungs) நுரையீரலுக்குச் செல்லும் இரத்தக் குழாய், மார்பையும், வயிற்றையும் பிரிக்கும் தசைப்பகுதி, சிறுகுடலின் மேற்பகுதி கல்லீரல், பித்தப்பை, முதுகெலும்பு என்று சில பகுதிகளினால் ஏற்படும் வலிகள் கூட மாரடைப்பிற்கு காரணமாக அமையும்.

திடீரென்று யாருக்கும் மாரடைப்பு வராது. உள்ளேயே சில வலிகள் தொடர்ந்து கொண்டே இருக்கும். அதை மருத்துவரால்தான் சொல்ல முடியும். மார்பில் குத்துவது போன்ற வலி, அழுத்தம் ஏற்படுவது, இறுக்கமான ஒரு தன்மை, ஒருவித எரிச்சல் போன்றவை முக்கிய அறிகுறிகள். பொதுவாக மார்பின் நடுவில் இருந்துதான் மார்புவலி ஆரம்பிக்கும். அதன் பின்புதான் தோற்பட்டை, இடது கை, பின் உட்பகுதி, கழுத்து, தாடை, பற்கள் ஆகியவற்றில் வலிகள் இருக்கும். உணர்ச்சி வசப்படுவது, அதிக ஆற்றலை பயன்படுத்தி வேலை செய்வது, அதிக உணவு உட்கொள்ளுதல், மனஅழுத்தம் என்பனவற்றால் இந்த வலிகள் அதிகரிக்கும். இதைத் தவிர மாரடைப்புக்கு மூச்சுத்திணறல், இடது கையில் தொடர்ந்து குடைச்சல், தொடர்ந்து அஜீரணம், காரணமின்றி வியர்த்துப் போவது, நடுக்கம், மயக்கம் என்பனவும் அறிகுறிகளாகும்.

### திடீரென இரவில் பெருமூச்சு வாங்குவது ஏன்?

இது இடது இருதயம் திடீரென்று பழுதுபடும் போது நிகழும் நிலை என்பதை உணரவேண்டும். அனேகமாக இது இரவில் நிகழ்வதன் காரணங்கள்.

(1) உயரத்தில் இருந்து தலைப்பகுதி தலையணையை விட்டுச் சிறிது தாழ்ந்திருக்கலாம்.

(2) மூளையில் அமைந்த சுவாச இயக்க மையம் உறக்கத்தில் சற்றே உறங்கியிருக்கும் இதயத்தைக் தூண்டும் மையத்தின் சுறுசுறுப்பின்மை.

(3) பயங்கரமான கனவின் மூலம் உண்டான அதிர்ச்சி.

(4) இரவில் நேரம் கழித்து கண் விழித்து அதிகமாக உண்ணுதல்.

(5) பகலில் நடமாடிக்கொண்டிருந்த போது உடலில் தங்கிப் போன நீர் இரவில் இரத்தத்தில் மிகுதியாகக் கலந்து சுவாசப் பைகளில் சற்று அமுக்கத்தை ஏற்படுத்துதல்.

### மாரடைப்பு வந்தவர்கள் தாம்பத்திய உறவில் ஈடுபடலாமா?

மாரடைப்பு நோய்க்கு உட்பட்டவர்கள் நோயிலிருந்து முழுமையாக குணமடைய வேண்டும். தெளிவான மனநிலை, தேக ஆரோக்கியம் என்பனவற்றை கருத்தில் கொண்டு வைத்தியர்களின் ஆலோசனை களைப் பெற்று அதன்பின் வழக்கமான தாம்பத்திய உறவில் ஈடுபடலாம். இந்தநோய் வந்தவர்கள் கொழுப்புச் சத்து, அதிகமாகவுள்ள உணவுகளைத் தவிர்க்கவேண்டும். எண்ணெய் வகைகள், பொரித்த உணவுகள், முட்டையின் மஞ்சள்கரு, ஐஸ்கிரீம், இறைச்சி வகைகள் போன்றவற்றை முடிந்தவரை தவிர்க்க வேண்டும். நார்ச்சத்து நிறைந்த உணவுகளைத் தேவையான அளவு உண்ணலாம்.

### குணப்படுத்த முடியாத இதய நோய்கள் ஏதாவது உள்ளனவா?

இன்றைய நிலையில் எல்லாவித இருதய நோய்களையும் குணப்படுத்த இயலும். விஞ்ஞானத்தின் மகத்தான வளர்ச்சியும் அதன் கண்டுபிடிப்புக்களும் இருதய நோய்களை முழுமையாக குணப்படுத்தும் வழிகளை கொண்டுள்ளன. அத்துடன் மருந்தில்லா மருத்துவமான யோகாசன சிகச்சை முறைகள் வாழ்நாளில் மனிதனைத் தீண்டாத வழிகளைக் காட்டுகின்றது. இதயத்தை இதமாக்கும் சில ஆசன பிரணாயாமப் பயிற்சிகளையும் பற்றி அடுத்த இதழில் பார்ப்போம்.



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4



YOGA - MEDITATION CLASSLESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.



நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு
தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்

தொடர்புகளுக்கு: *Scarborough - Markham* - செல்வ சோதி - *416.289.2033*

# அவதானம் தேவை

## ஓடும் நீர் உறைவதில்லை 90

வாழ்க்கை என்பது சிறந்த நிதானத்துடன் நகர்த்தப்பட வேண்டியது. நமது வாழ்வின் முதல் இருபது வருடங்கள் பிறரது ஒத்துழைப்புகள், வழிகாட்டல்கள் மூலம் நகர்த்தப்படுகின்றன. குறிப்பாகப் பெற்றோர், ஆசிரியர், சகமாணவர், நண்பர் எனப் பலருடைய ஒத்துழைப்புக்கள் நமக்குக் கிடைக்கின்றன. இவர்களது தரத்தைப் பொறுத்து நமது வாழ்வின் தரமும் நிர்ணயிக்கப்படுகின்றது. முதல் இருபது வருட காலங்களில் ஒருசில வருடங்களைப் பலர் தன்னிச்சையாக நகர்த்த முனைகிறோம். ஏதோ ஒருவகையான உந்துதல் எம்மால் எதுவும் முடியும் என்ற நிலைக்கு நம்மைத்தள்ளு கின்றது. இக்காலப்பகுதியில் நாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் பெரும் பாலானவை உடனடியான பெறுபேறுகளாக அமைய வேண்டும் என்பதில் அதிக எதிர்பார்ப்பைக் கொண்டிருக்கும். அதாவது எதிர்கால விளைவுகள் பற்றிய அல்லது நீண்டகால தாக்கங்கள் பற்றிய முன்னுணர்வு இருப்பதில்லை. இவ்வாறான நடவடிக்கைகளில் விடலைப் பருவத்தினரே (Teenagers) அதிகமாக ஈடுபடுவர். இது இவர்களுக்கான வாழ்வியல் படிப்பினையாக அமைவதும் இயல்பானதே.

ஒரு மனிதனது முன்னோக்கிய வாழ்வியல் நகர்வானது இருபது வயதின் பின்னர் ஆரம்பிக்கின்றது. முன்னோக்கிய வாழ்வியல் நகர்வு எனும்போது இதுவரை காலமும் பிறரது நெறிப்படுத்தல், வழிகாட்டல் மூலம் நகர்த்தப்பட்ட நமது வாழ்க்கை இப்போது நம்மிடம் முற்றுமுழுதாக ஒப்படைக்கப்பட்டு விடுகிறது. இதனால் எமது வாழ்க்கையின் நிலையை நாமே முற்றுமுழுதாக பொறுப்பேற்க வேண்டியவர்கள் ஆகின்றோம்.

முதல் இருபது வருடங்களில் நமது வாழ்க்கையில் பெரிய அளவுக்கு தடைகளும் இடையூறுகளும் இடம் பெறாமல் இருப்பதற்கு நேரடியான, மறைமுகமான ஒத்துழைப்புக்கள் எமக்குக்கிடைக்கின்றன. இந்தக் காலப் பகுதியில் எமது மனோபாவ வளர்ச்சி களில் இவர்களது பங்களிப்புக்கள் அதிக முக்கியத்து வம் பெறுகின்றன. துரதிஷ்ட வசமாகப் பலர் ஒருவரது வாழ்க்கையின் வெற்றியைத் தீர்மானிக்கும் அடிப்படை மனோபாவங்களை குழந்தைகளிடம் விதைப்பதற்குப் பதிலாக அதை மறைத்து விடுகிறார்கள். இவர்கள் மறைப்பது குழந்தையின் மனமகிழ்ச்சிக்காக எனக் கருதுவதால் தான். குழந்தைகளின் வளர்ச்சியின் ஆரம்ப காலம் தொட்டே உறுதியான மனோபாவங்களை, வித்திடுவது அக்குழந்தை யுடன் தொடர்பு கொள்கின்ற அனைவருக்குமான தவிர்க்கமுடியாத பொறுப்பாகும். ஆனால் நடைமுறையில் நாம் இவ்விடயத்தில் அவதானிப்பைச் செலுத்துவதில்லை.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு; வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

நன்றியுடன் KG Master

ஒவ்வொரு மனிதனும் குழந்தையில் இருந்தே ஆரம்பிக்கின்றான் என்று கூறினால் நமக்கு ஒரு அசட்டுச் சிரிப்புத்தான் வரும். ஏதோ ஒரு புதிய தத்துவத்தைக் கண்டுபிடித்தமாதிரி கூறுகிறாரே என்று சிரிப்பும் வரும். "தாயில்லாமல் நான் இல்லை தானே எவரும் பிறந்ததில்லை" என்பதும் நமக்குச் சிரிப்பைத் தரக்கூடும். ஆனால் இந்த உண்மையைப் புரிந்து வாழ்பவர்கள் எத்தனைபேர் நம்மிடை யில் இருக்கிறார்கள்? இந்தக் கூற்றில் உள்ள அர்த்தம் என்ன? இங்கே தாய் என்பதன் பொருள் என்ன? அதன் பங்களிப்பு என்ன? இவையெல்லாம் ஆழமான ஆய்வுக்கு உட்படுத்தப்படும்போது அதன் பொருள் வெளிப்படும் என்பதல்ல. நமது நாளாந்த வாழ்வியல் நகர்வின் அடித்தளமாக அமைந்திருப்பதே இந்த 'தாய்' என்பது தான்.

**KG Master-kgmaster@rogers.com**

இப்போது குழந்தையில் இருந்து தான் ஒரு மனிதன் தனது வாழ்க்கையை ஆரம்பிக்கிறான் எனக் கூறுவதன் பொருள் என்ன என்பதைச் சிறிது ஆராய்வோம். இந்த விடயத்தை வாசகர்கள் மிகத் தெளிவுபடுத்துவது அவசியம் என்பதை மறந்துவிடாதீர்கள். நமது வாழ்க்கையின் ஆரம்பம் குழந்தை. இங்கே ஆரம்பம் ஒன்றுக்கான அடிப்படையாக அமைவது எது என்பதைப் புரிந்து கொள்வோமாயின் இந்தக் குழந்தைப் பருவத்தின் முக்கிய தொழிற்பாடு என்னவாக அமைய வேண்டும் என்பது நமக்குத் தெட்டத் தெளிவாகப் புரிந்து விடும். முதலில் நாம் ஒருவிடயத்தை ஆரம்பிப்பதற்கு அடிப்படையாக அமைவது அதன் முடிவே என்பதை அறிந்து கொள்ளல் வேண்டும். ஒன்றினது முடிவே அதற்கான ஆரம்பத்திற்குக் காரணமாக அமைகின்றது. நமது ஒவ்வொரு முயற்சியும் அதற்கான ஒரு பெறுபேற்றை மையமாகக் கொண்டுள்ளது. நமது எதிர்பார்ப்புக்கு அதாவது பெறுபேறுக்கு ஏற்றதாக ஒரு விடயம் அமையுமாயின் அந்த விடயத்தை நாம் ஆரம்பிக்கிறோம். அதாவது ஒன்றின் முடிவை அடிப்படையாக வைத்தே அந்த முடிவை அடைவதற்கான முயற்சியை ஆரம்பிக்கின்றோம். ஒரு பிரயாணமாக இருந்தால் எங்கே செல்ல வேண்டும் என்பதை உறுதிப்படுத்திய பின்னரே பயணத்தை ஆரம்பிக்கிறோம். இவ்வாறே கல்வி, பொருளாதாரம், அரசியல் போன்ற ஒவ்வொன்றையும் நாம் ஆரம்பிக்கும் போது அதன் முடிவு அல்லது பெறுபேறு முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டே ஆரம்பிக்கப்படு கின்றது. எனவே ஒன்றின் முடிவை அடிப்படையாக வைத்தே அதை நாம் ஆரம்பிக்கின்றோம். முடிவைத் தெளிவாக இனங்காணாமல் எந்த முயற்சியும் ஆரம்பிக்கப்படுவதில்லை.

இப்போது குழந்தையிலிருந்தே மனிதன் தனது வாழ்க்கையை ஆரம்பிக்கின்றான் எனக் கூறும் போது வாழ்க்கையின் ஆரம்பத்திற்கு அதன் முடிவாக அமைவது மரணம் தானே. எனவே மரணத்தை அடிப்படையாக வைத்தா வாழ்க்கை ஆரம்பமாகின்றது என்ற கேள்வி ஏற்படுவது தவிர்க்கமுடியாததே. ஆனால் இறப்பை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பமானது பிறப்பு மட்டுமே. வாழ்க்கையல்ல. பிறப்பின் முடிவு இறப்பு. இறப்பே பிறப்பின் முடிவு என்பதால் இறப்பை அடிப்படையாக வைத்து பிறப்பை நாம் ஆரம்பிப்பதில்லை. ஏனெனில் நமது பிறப்பு நமது கையில் இல்லை. நமது குழந்தைகளின் பிறப்புக்கு நாம் காரணியாக இருந்தாலும் இறப்பை அடிப்படையாக வைத்து அவர்களது வாழ்க்கையை ஆரம்பிக்க எவருமே முனைவதில்லை. அப்படி எண்ணுவதும் இல்லை. எண்ணவும் முடிவதில்லை. அப்படியாயின் இங்கே புதைந்திருக்கும் உண்மை தான் என்ன?

பிறப்பவர்கள் அனைவரும் இறந்துதான் ஆகவேண்டும். இப்படித்தான் வாழ வேண்டும் என இலக்கணம் வகுத்து வாழ்ந்தவர்களும் இறந்து போனார்கள், எப்படியும் வாழலாம் என வாழ்ந்தவர்களும் இறந்து போனார்கள். இங்கே இறந்ததும் அழிந்ததும் உடம்பு மட்டும் தான். வாழ்க்கை அல்ல. இது புரிந்து கொள்ள வேண்டிய புதிர். அதாவது ஒரு மனிதனது வாழ்க்கை உருவத்துடன் ஆரம்பித்து அந்த உருவம் அழிந்ததன் பின்னரும் உணர்வுகளாக, நினைவுகளாக, மனோ பாவங்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அதாவது நமது வாழ்க்கையானது நமது பிறப்புடன் ஆரம்பித்தாலும் நமது இறப்புடன் முடிவு பெறாது வரையறையற்ற காலத்துக்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றது. எப்படி?

இப்போது மீண்டும் ஆரம்பத்திற்கு வருவோம். ஒன்றினது ஆரம்பித்தின் அடிப்படை அதன் முடிவு பற்றிய தெளிவான கணிப்பீட்டின் மூலமே உருவாகின்றது எனக் குறிப்பிட்டிருந்தேன். அதாவது முடிவை முன்கூட்டித் தீர்மானித்ததன் பின்னரே அதை ஆரம்பிப்பதா இல்லையா என முடிவு செய்கிறோம். முடிவு எமது எதிர்பார்ப்புக்கு ஏற்புடையதாக அமையு மாயின் அதை ஆரம்பிக்கிறோம். இல்லாவிடில் தவிர்த்து விடுகிறோம். பிறப்பின் முடிவு இறப்பு. ஆனால் நமது வாழ்க்கை இறப்புக்கு அப்பாலும் நீடிக்கின்றது என்றும் குறிப்பிட்டுள்ளேன். அப்படியாயின் நமது வாழ்க்கையை எதை அடிப்படையாக வைத்து நாம் ஆரம்பிக்கிறோம்?

முதலில் நமது வாழ்க்கையை நாம் ஆரம்பிக்கவில்லை என்பது புரியப்பட வேண்டியது. நமது பிறப்பும் நமது கையில் இருக்கவில்லை. நமது பிறப்பும், வாழ்க்கையும் நமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட நிலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆரம்பம் நமது கையில் இருக்குமாயிருந்தால் ஒரு குறிக்கோள் அல்லது பெறுபேற்றை (முடிவு) அடிப்படையாக வைத்து ஆரம்பித்திருப்போம். ஆனால் இவை எவையும் எமது கட்டுப்பாட்டில், கணிப்பீட்டில் ஆரம்பிப்பதில்லை. அதாவது நமது வாழ்வின் ஆரம்பம் நமது கையில் இல்லாமலேயே ஆரம்பிக்கப்படுகின்றது. இதன் அடிப்படைக் கர்த்தாக்களாக நமது பெற்றோர்கள் அமைகிறார்கள். அதாவது நமது பெற்றோர்கள் நமது வாழ்க்கையை ஆரம்பித்து வைத்திருக்கி றார்கள். இப்போது நாமும் பெற்றோர்களாகி நமது குழந்தைகளின் வாழ்க்கையை ஆரம்பித்து வைத்துள்ளோம். எதை அடிப்படையாக வைத்து ஆரம்பித்துள் ளோம். எதை அடிப்படையாக கொண்டு அவர்களது வாழ்க்கையை நாம் நகர்த்திக் கொண்டிருக்கின்றோம். குழந்தைகள் பற்றிய நமது எதிர்பார்ப்புத்தான் என்ன? நமக்குச் சாதகமான பெறுபேறு ஒன்று தெளிவானதன் பின்னர் நாம் ஒரு காரியத்தை ஆரம்பிப்பதால் குழந்தைகளின் வாழ்க்கையை நாம் ஆரம்பிக்கும் போது எதைப் பெறுபேறாக வைத்து ஆரம்பிக்கின்றோம்.

ஒவ்வொரு பெற்றோரும் தமது குழந்தையின் பிறப்பில் பெருமிதம் அடைகிறார்கள். நமது குழந்தைகளுக்கு இறப்பே இல்லாத வாழ்க்கை கிடைத்திருப்பதான பரிபூரண உணர்வுடன் அவர்களது வாழ்க்கையை நகர்த்துகிறோம். பெற்றோரின் இந்தப் பரிபூரண உணர்வு உண்மையிலும் உண்மை. ஏன் தெரியுமா? பிறப்புக்குத்தான் இறப்பு உண்டே ஒழிய வாழ்க்கைக்கு இறப்பு இல்லை என்பது தான். ஏனெனில் ஒருவரது வாழ்க்கை அவரது இறப்புக்கு அப்பாலும் வாழ்ந்து கொண்டிருக்கும்.

முடிவு உள்ள அனைத்தும் அதை அடிப்படையாக வைத்தே ஆரம்பிக்கப்படு கின்றன. நமது வாழ்கை தவிர்ந்த அனைத்துக்கும் முடிவு உண்டு. பௌதீக ரீதியான அனைத்தும் அழிவுக்குரியது நமது உடம்பும் தான். ஆனால் நம் ஒவ்வொருவரது வாழ்க்கையும் எம்மால் ஆரம்பிக்கப்படவில்லை. அதை ஆரம்பித்தவர்களும் தெளிவான ஒரு முடிவை அல்லது பெறுபேற்றை அடிப்படையாக வைத்து ஆரம்பித்தார்களா என்பதும் ஆய்வுக்குரிய விடயமே. ஆனால் ஒன்றை மட்டும் இந்த உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் வெற்றிகரமாக நிறைவேற்றமுடியும். அதாவது நமது வாழ்க்கையானது நாம் வாழும்போதும் பயன்தரக்கூடியதாகவும், நமது இறப்பின் பின்னரும் நீடிக்கக்கூடியதாகவும் அமைக்க முடியும்.

**ஆம்வாசகர்ளே!**

நமது உயிர்வாழ் காலத்துக்கு அப்பாலும் நீடிக்கக்கூடிய வாழ்க்கையாக மற்றவர்களை வாழவைக்கும் வாழ்க்கையாகட்டும் நமது வாழ்க்கையின் ஆரம்பம் எப்படியிருந்திருப்பினும் அதை மற்றவர்களும் வாழக்கூடிய முறையில் அமைத்துக்கொள்வது தான் முடிவில்லாத பயன்தரும் வாழ்க்கை. அதுமட்டுமல்ல நமது குழந்தைகளின் வாழ்க்கையை ஆரம்பிக்கும் நாம் அவர்களது வாழ்க்கையும் மற்றவர்களது வாழ்க்கையை வளம்படுத்துவதற்கு உரிய முறையில் ஆரம்பிப்போம். இறப்பு பிறப்பு இரண்டுக்கும் இடையிலான நமது வாழ்வும், நமது குழந்தைகளின் வாழ்வும் அதிஉயர்ந்த, அதிசிறந்த மனோபாவ உள்ளீடுகளாக இவ்வுலகில் வாழும், வாழப்போகும் ஒவ்வொரு வரது வாழ்க்கையிலும் இடம்பெறட்டும். அப்போதுதான் முடிவே இல்லாத நமது வாழ்க்கை நமது இறப்பின் பின்னரும் முடிவில்லாத காலத்துக்கு வாழ்வதாக கருதப்படும்.


**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

**1-877-707-3223 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**

**மஹராஜியின் உரைகள்**



**On DVD**

இலவச DVDக்கு அழையுங்கள்

(416) 431-5000

1 877 707 3223

**On TV**

Saturdays at 11:00 am

Rogers Cable Channel - 20

Bell Express vu Channel - 219

# “சிறந்த நடிகன் என்பவன் தண்ணீர் மாதிரி”

## சந்திப்பு: நடிகர் கரண்



தமிழ் சினிமாவில் இப்போது ‘மினிமம் கேரண்டி ஹீரோ’ என்று தயாரிப்பாளர்கள் மத்தியில் பேசப்படுபவர் நடிகர் கரண். ‘கனகவேல் காக்க!’, ‘கந்தா’, ‘தம்பி வெட்டோத்தி சுந்தரம்’ என்று வரிசையாக மூன்று படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார். இதில் ‘கனகவேல் காக்க’ வரும் நவம்பரில் ரிலீஸாகப் போகிறது. அவ்வளவு பரபரப்புக்கு மத்தியில் ‘விளம்பரம்’ இதழுக்காக மனம் திறந்து பேசினார்.

“‘கனகவேல் காக்க!’ படத்தின் கதை என்ன?”

“அது ஒரு சட்டம் சார்ந்த கதை. ஆக்‌ஷன், காதல், செண்டிமெண்ட் எல்லாம் கலந்த கதை. படம் ரொம்ப நல்லா வந்திருக்கு. இப்போதைக்கு அவ்வளவுதான் சொல்ல முடியும். என்னோட பாத்திரத்தைப் பத்தி ரொம்ப விரிவா சொல்ல முடியாது. ஆனா, இந்தப் படம் எனக்கு ரொம்ப முக்கியமான ஒரு படமா இருக்கும்.”

“இதில் எழுத்தாளர் பா. ராகவன் வசனம் எழுதியிருக்கார். வசனங்கள் எல்லாம் எப்படி வந்திருக்கு?”

“ரொம்ப பவர்ஃபுல்லா வந்திருக்கு. தமிழ் சினி-மாவைப் பொறுத்தவரைக்கும் வசனம் ரொம்ப முக்கியம். ஒரு பாத்திரத்தின் மூலமா வசனங்களை உச்சரிக்க வைக்காம, அந்தப் பாத்திரமாவே மாறி எழுதியிருக்கார் பா. ராகவன். எளிய நடையில, மிகப் பெரிய விஷயங்களைச் சொல்லி அசத்தியிருக்கார். இந்தப் படத்தோட இயக்குநர் கவின் பாலாவுக்கு இது முதல் படம். இயக்குநர்கள் சரண், ஹரி கிட்ட உதவியாளரா இருந்தவர். ஆனா, இதுதான் அவரோட முதல் படம்னு சொல்ல முடியாத அளவுக்கு அவ்வளவு புரொஃபஷனலா எடுத்திருக்கார்.”

“அதெப்படி உங்களால வருஷத்துக்கு மூணு படமாவது பண்ண முடியுது?”

“‘காத்தவராயன்’, ‘தீ.நகர்’ படங்கள்ல நடிச்சப்போ ஒரு படத்துக்கும் இன்னொரு படத்துக்கும் நடுவுல கிட்டத்தட்ட பதினோரு மாசம் இடைவெளி இருந்துச்சு. அப்பத்தான் நண்பர் ஒருத்தர் சொன்னார்: ‘இவ்வளவு இடைவெளி விடாதீங்க. மக்கள் மறந்துடுவாங்க. வருஷத்துக்கு மூணு படம்னா, மூணு யூனிட்டுக்கு வேலை இருக்கும். மூணு படத்துலயும் நிறைய டெக்னிஷியன்ஸுக்கு வேலை இருக்கும்.’ அது எனக்கு சரின்னு பட்டுது. அதை அப்படியே ஃபாலோ பண்ண ஆரம்பிச்சேன். இப்போகூட வாரத்துக்கு நாலஞ்சு பேரோடயாவது நான் நடிக்கப் போற அடுத்த படத்தைப் பத்திப் பேசறேன். எனக்குக் கதை பிடிச்சிருந்துச்சுன்னா, ‘இப்போ கைவசம் இந்த இந்தப் படங்கள் இருக்கு. முடிச்சுட்டு வர்றேன்னு’ சொல்லுவேன். அவங்களும் சரின்னு சொல்லிடறாங்க.

“என்னைப் பொறுத்தவரைக்கும் தொடர்ந்து படங்கள்ல நடிக்கறது தப்பில்ல. ஆனா, ஒண்ணுக்கொன்னு வித்தியாசம் இருக்கணும். ரிபெட்டிஷன் வந்துடாம பாத்துக்கணும். ஒவ்வொரு

### நேர்காணல்: பாலு சத்யா

படத்துக்கும் வேற வேற கலர், வேற வேற லொக்கேஷன், ஒண்ணோட ஒண்ணு தொடர்பில்லாத வேற வேற கதையா இருக்கணும். ‘கருப்பசாமி குத்தைகைதாரர்’ல நானும் வடிவேலுவும் நடிச்சிருப்போம். அடுத்த படத்துல சேர்ந்து நடிக்கறப்போ, முதல் படத்துல இருந்தது மாதிரி வந்துடாம, கவனமா பாத்திரங்களைத் தேர்ந்தெடுத்தோம்.”

“‘மலையன்’ படத்துக்கு ஒரு நாளைக்கு ஒரு விளம்பரம்னு வித்தியாசமா எல்லா பேப்பர்ல வந்தது. அது வியாபார ரீதியா வெற்றி பெற்றுச்சா?”

“நகரங்கள்ல சரியாப் போகலைன்னாலும், ‘பி’

தொடர்ச்சி 18ஆம் பக்கம்



# ஆனைமலை! - முதுமலை வனவிலங்கு காப்பகம்

தமிழ்நாட்டில் பல புகழ்பெற்ற வனவிலங்கு சரணாலயங்கள் உள்ளன. ஒவ்வொன்றும் ஒரு தனிச் சிறப்பைக் கொண்டவை. இதில், தமிழ்நாடு - கேரளா - கர்நாடகம் மூன்று மாநிலங்களும் கூடும் இடத்தில் உள்ள முதுமலை சரணாலயத்தின் சிறப்பு அதன் யானைகள் கூட்டம். முதுமலை தெப்பக்காடு யானைகள் முகாம் 1910ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த வருடம் தன் நூற்றாண்டை நிறைவு செய்யும் இந்த சரணாலயம் தென்னிந்தியாவின் முதல் வனக்காப்பகம் என்ற சிறப்பையும் கொண்டது. பார்க்கப் பார்க்க ஆனந்தமும் பரவசமும் தரக்கூடிய முதுமலைக்குதான் இந்த முறை நம் பயணம்.

முதுமலை தெப்பக்காடு வனவிலங்கு காப்பகம், தொடங்கப்பட்ட போது 60 சதுர கி.மீ. பரப்பளவு கொண்டதாக இருந்தது. பின் 1956ஆம் ஆண்டு 295 கி.மீ. ஆக விரிவுபடுத்தப்பட்டது. இப்போது மேலும் விரிவுபடுத்தப்பட்டு 321 கி.மீ. பரப்பளவை கொண்டிருக்கிறது. இதன் அருகிலேயே பந்திப்பூர் புலிகள் சரணாலயம் உள்ளது. இரண்டும் ஒரே காடுதான். ஆனால், முதுமலை தமிழகப் பகுதியிலும், பந்திப்பூர் கர்நாடகப் பகுதியிலும் இருக்கிறது. எனவே, பந்திப்பூரை பற்றி கர்நாடக மாநில சுற்றுலாத் தலங்களை வலம் வரும்போது விரிவாகப் பார்ப்போம். இப்போது, முதுமலை....

முதுமலையில் வெப்பமண்டல ஈர இலையுதிர் காடுகள், வெப்பமண்டல உலர் இலையுதிர் காடுகள், தென் வெப்பமண்டல புதர் காடுகள் என மூன்று வகையான காடுகள் காணப்படுகின்றன. மழை பொழிவு அதிகமுள்ள மேற்கு பகுதியில் ஈர இலையுதிர் காடுகளும், மழை பொழிவு குறைந்த கிழக்கு பகுதியில் உலர் இலையுதிர் காடுகளும் காணப்படுகிறது. இதன் முக்கியத்துவம் கருதி இக்காப்பகத்தில் தேசிய வனப் பூங்கா 103 கி.மீ. பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது. இதை யுனெஸ்கோ, உலகப் பாரம்பரியச் சின்னங்களில் ஒன்றாக அறிவித்துள்ளது.



## தமிழ்நாடு சுற்றுலா இடங்கள்- 66








**வழிப்போக்கன்**

தெப்பக்காடு யானைகள் முகாமில் குட்டியாக ஒரு விநாயகர் கோயில், யானைகளுக்கான மருந்தகம், உணவகம், அருங்காட்சியகம் ஆகியவை இருக்கின்றன. அந்த முகாமை ஒட்டியபடி விரைந்தோடும் மோயாறில் யானைகள் தினமும் குளியலும் கும்மாளமும் போடுகின்றன. ஒரே ஒரு யானையை அருகிலிருந்து பார்ப்பதே பிரமிப்பான அனுபவமாக இருக்கும். எனும்போது, மொத்தமாக பத்து - இருபது யானைகளைப் பார்க்க நேர்ந்தால் எப்படி இருக்கும்? அதுவும், மிக நெருக்கமாக சென்று யானையை தொட்டுப் பார்த்து, ரசிக்க முடிந்தால்.

இங்கு, தந்தம் இல்லாத ஆண் யானைகளை 'மக்னா' என்று சொல்கிறார்கள். யானைகளில் அரிய வகையைச் சேர்ந்தவை இவை. நன்றாகப் பழக்கப்படுத்தப்பட்ட யானைகளை கும்கி யானை என்கிறார்கள். காட்டு யானைகள் ஊருக்குள் புகுந்து அட்டகாசம் செய்யும் போது, அந்த யானைகளை மிரட்டி மீண்டும் காட்டுக்குள் அழைத்து வர இந்த கும்கி யானைகளை பயன்படுத்துகிறார்கள். கம்பீரமான தோற்றம், மூர்க்கமாகத் தாக்கும் குணம், மாவுத்தன சொல்லுக்குப் பெட்டிப் பாம்பாய் கட்டுப்படும் பாங்கு, சக யானைகளிடம் நட்பாகப் பழகும் இயல்பு, மக்கள் அருகில் வந்தால் கோபப்படாத தன்மை என கும்கி, காட்டு யானைகளில் இருந்து மிகவும் வித்தியாசப்பட்டு இருக்கிறது. கும்கி யானையை அருகில் வைத்துக் கொண்டுதான் வனவிலங்கு மருத்துவர்கள் மற்ற யானைகளுக்கு சிகிச்சை அளிக்கிறார்கள்.

முதுமலை முகாமில் யானைகளுக்கு உணவு கொடுப்பது சுற்றுலாப் பயணிகளை வியக்க வைக்கும் ஒரு காட்சி! அரிசி சாதம், வேகவைத்த கொள்ளு, ராகிக் களி ஆகியவற்றை பட்டை போட்டு, ஒவ்வொரு யானையின் பெயரையும் எழுதி அடுக்கி வைக்கிறார்கள். சரியாக மாலை 6 மணிக்கு பாகன்கள் அவற்றைச் சேர்த்துப் பிசைந்து பெரிய உருண்டைகளாக்கி அவரவர்கள் பொறுப்பில் இருக்கும் யானைக்குத் தருகிறார்கள். வேறு பாகன் கொடுத்தால் யானைகள் வாயையே திறக்காது என்பதுதான் இதில் விஷேசம். தன்னுடைய பாகன் அல்லது அவரது உதவியாளரான காவடி இருவரில் ஒருவர் கொடுத்தால்தான் யானைகள் சாப்பிடுகின்றன. ஒரு யானைக்கு ஒரு நாளைக்குத் 250 முதல் 300 கிலோ வரை இலை தழைகள் தேவைப்படுகின்றன. யானைகள் தினமும் சுமார் 10 மணி நேரம் மட்டுமே மேய்கிறது என்பதால், குறைகிற உணவை ஈடுகட்டும் விதமாக எளிதில் ஜீரணமாகும் அரிசி, கொள், ராகி ஆகியவற்றை ஒரு நாளைக்கு இரண்டு முறை, உரிய வைட்டமின்களையும் சேர்த்து சாப்பிடக் கொடுக்கிறார்கள்.

மதம் பிடித்த ஆண் யானைகளைத் தனியே சங்கிலியால் கட்டிப் போட்டிருக்கிறார்கள். எல்லா ஆண் யானைகளுக்கும் குறிப்பிட்ட கால இடைவெளியில் மதம் பிடிக்குமாம். அதற்கான சில அறிகுறிகள் தெரியத் தொடங்கியதும் முன்கூட்டியே தனிமைப்படுத்தி கட்டிப்போட்டு விடுகிறார்கள். சில நாட்களில் மதம் பிடித்த யானை சகஜநிலைக்கு வந்ததும் மீண்டும் யானைக் கூட்டத்துக்குள் விட்டுவிடுகிறார்கள். ஆண் யானைகள் சுமார் நான்கு மாதத்துக்கு ஒரு முறை மட்டுமே பெண் யானையைத் தேடும். வேறு கூட்டத்தில் உள்ள பெண் யானையிடம் ஒரு வார காலத்துக்கு நெருக்கமாக இருந்து உறவுகொள்ளும்.

யானைக்கு மிகவும் பிடித்தமான விஷயம் குளியல் தான் என்கிறார்கள் முதுமலை யானைப் பாகன்கள். முகாம் யானைகள் காலை, மாலை இருவேளை மேயாற்றில் இவர்கள் யானைகளைக் குளிப்பாட்டுகிறார்கள். பாகன் தேய்க்கும்போது, அவர்களுக்கு வசதியாக யானைகள் உடம்பைத் திருப்பி திருப்பிக் காட்டுவதைப் பார்க்க முடிகிறது. அந்தளவுக்கு அது அவற்றுக்கு சுகமானதாக இருக்கும் போலிருக்கிறது. பாகனுக்கும் யானைக்கும் நெருங்கிய பந்தம் ஏற்படுவதே இந்தக் குளிப்பாட்டலால்தான் என்றும் சொல்கிறார்கள். காலைக் குளியல் முடிந்ததும் யானைகளுக்கு மருத்துவ முகாமில் மெடிக்கல் செக்கப் நடக்கிறது. அப்போது, கால்களில் பூச்சிகள், அட்டை போன்ற ரத்த உறிஞ்சிகள் ஏறி, பாதிப்பு ஏற்படுத்தாமல் தடுக்க எல்லா யானைப் பாதங்களுக்கும் ஒருவித மருந்து எண்ணெய் தடவுகிறார்கள்.

அடர்த்தியான முதுமலை காட்டுக்குள் யானைகள் மட்டுமல்லாமல் புலி, சிறுத்தை, காட்டெருமை, பல வகை மான்கள், கரடி, செந்நாய், பறக்கும் அணில், பெரிய இந்திய சிவப்பு அணில், காட்டு நாய், காட்டுப்பன்றி, முள்ளம்பன்றி, நரி, காட்டு முயல், முதலை, கீரி, கழுதைப்புலி, மலைப்பாம்பு, அரிய வகையான 'லங்கூர்' எனும் சிங்கமுகக் குரங்கு போன்ற பல்வேறு வகையான விலங்குகளும், அலகு நீண்ட ஹார்ன்பில் பறவைகள், மயில், பல்வேறு வகையான காட்டுக்கோழிகள், புறா, கழுகு, பருந்து, வல்லூறு போன்ற பல்வேறு வகையான பறவைகளும் வசிக்கின்றன. சுற்றுலாப் பயணிகள் நடமாட்டம் உள்ள பகுதிகளில், குறிப்பாக உணவகங்கள் அருகே 'லங்கூர்' எனும் 'சிங்கமுகக் குரங்குகள்' ஏராளமாக வருகின்றன. முதுமலை சரணாலயத்தின் பெரும்பகுதி எப்போதும் பசுமையாக இருக்கும் வெப்ப மண்டல காட்டில் அமைந்துள்ளதால் யானை, சிறுத்தை, புள்ளிமான், கோழையாடு, கரடி, காட்டுப்பன்றி போன்ற காட்டு விலங்குகளும் கொம்பிறகுப் பறவை, குயில் வகைகள், காட்டுக் கோழிகள் போன்ற உயிரினங்களும் வசிக்க பாதுகாப்பான இடமாக இருக்கிறது என்கிறார்கள்.

பாதுகாப்பாக வேனுக்குள் (van) இருந்தபடி, சரணாலயத்தை சுற்றிவந்து பார்க்க வேன்கள் உள்ளன. விலங்குகளை இயற்கைச் சூழலில் கண்டுகளிப்பதற்காக இந்த வேன்கள் செல்ல, 6 தனித்தனிக் காட்டுப்பாதைகளை உருவாக்கியிருக்கிறார்கள். வேன் மட்டுமின்றி, யானை மீது சவாரி செய்தும் காட்டை கண்டு களிக்கலாம். காட்டுப்பகுதியை கடந்து செல்லும்போது அதன் வனப்பு நம்மை லயிக்க வைக்கிறது. அப்போது, காட்டுக்குள் ஆங்காங்கே சுமார் 20 மீட்டர் விட்டம் கொண்ட சேற்றுக் குட்டைகள் இருப்பதைப் பார்க்கலாம். இந்தக் குட்டைகளில் ஒரு வித உப்பைக் கொட்டி வைத்திருக்கிறார்கள். முதுமலைக் காட்டுக்குள் மண்ணில் விலங்குகளுக்குப் போதுமான அளவு உப்புச்சத்து இல்லை என்றும், அதனால் ஒவ்வொரு மாதமும் இந்தக் குட்டைகளில் வைட்டமின் உப்பைப் போட்டுக் கலக்கி

தொடர்ச்சி 19ஆம் பக்கம்

**COTTAGE / CAMPGROUND FOR SALE**

***Excellent Family Business Brigton Campbell Ford City***

*1-2-3 Bedroom full equipped Comfortable Housekeeping Cottages. Cable TV, 3 & 4 pec. Bathrooms, Decks & Lawn Chairs, Propane B.B.Q. Bedding Provided and full supplied kitchen, Elect heat. Municipal Water Boating exclusive water front, 2 Double Door Garage*

**Sugu: 416.727.6525**

**www.hickorygrovecottages.com**

**www.troutwatercamping.com**

- Cottage/Campground Business 10 Cottages & 20 Trailer Homes
- 3 Boat, River Front in Cottage, Bungalow Houses, 2 Garage Parking, Big Party Hall.
- 12 Lots Land For Sale. Front in River & Lake - 1 Hour from Toronto
- $15,000 - $100,000

சென்ற இதழ் தொடர்ச்சி

# கமலஹாசன் 50

## கமல் - ஸ்ரீதேவி காதல்

தமிழ் திரையுலகில் ஒரு நடிகரும் ஒரு நடிகையும் ஒன்றிரண்டு படங்கள் தொடர்ச்சியாக சேர்ந்து நடித்தாலே பத்திரிகைகளில் 'காதல் கிசுகிசு'க்கள் வரத் தொடங்கிவிடும். அவற்றில் சில பிரகு உண்மையாகவும் ஆகியிருக்கின்றன. இந்நிலையில் ஒரே ஜோடி 27 படங்கள் சேர்ந்து நடித்தால் 'கிசுகிசு' எழுதுகிறவர்களுக்குச் சொல்லித்தரவா வேண்டும். கமல் - ஸ்ரீதேவி பற்றி அக்காலங்களில் 'கிசுகிசு' வராத பத்திரிகையே கிடையாது. முதலில் 'காதல்' என்றும் பிறகு 'கல்யாணம்' என்றும் செய்திகள் வந்தன. பெரும்பாலும் பத்திரிகையாளர்களின் கணிப்புகளை பொய்க்கச் செய்யாத கமல், இந்த விஷயத்தில் அவர்களை ஏமாற்றிவிட்டார். இன்று வரைக்கும் கமல் - ஸ்ரீதேவி கல்யாணம் நிகழ வில்லை. இதுபற்றி சமீபத்தில் ஒரு பத்திரிகைக்கு அளித்த நேர்காணலில் கமல், "ஸ்ரீதேவியுடன் 27 படங்கள் ஜோடியாக நடித்தது ரொம்பவும் சிறப்பான அனுபவம். அவங்களோடான உறவு



- பிலிம்நியூஸ் கிருஷ்ணன் -

அற்புதமானது. நாங்கள் இருவரும் கல்யாணம் செய்துகொள்வோம் என்று எல்லோரும் நினைத்தார்கள். (அதனாலோ என்னவோ,) ஸ்ரீதேவிக்கு என்னைக் கண்டால் பயம். இப்போதும்கூட என்னை சார் என்று தான் அழைப்பார்கள்" என்றார்.

## எம்.ஜி.ஆர். - சிவாஜிகணேசன்

தமிழ் திரையுலகில் எம்.ஜி.ஆர். - சிவாஜிகணேசன் சகாப்தத்துக்குப் பிறகு, இன்றுவரைக்கும் ரஜினிகாந்த் - கமலஹாசன் காலகட்டம்தான். எம்.ஜி.ஆர்., சிவாஜி இருவருடனும் குழந்தை நட்சத்திரமாக நடித்திருக்கும் கமல், இதில், பிற்காலங்களில் தனது நடிப்புத்திறன் காரணமாக சிவாஜிகணேசனுடன் ஒப்பிட்டுப் பேசப்பட்டார். அடுத்த சிவாஜிகணேசன் என்றுகூட சொன்னார்கள். இதுபற்றி கேட்ட போது கமல் சொன்னார்: "என்னை சிவாஜியுடன் ஒப்பிடுவதை நானே விரும்பவில்லை. சிவாஜி சாரும் விரும்பவில்லை. என்னுடைய அடிவானத்தில் எனக்குத் தெரிந்த சூரியன் சிவாஜிகணேசன் தான். நான் பார்த்தது அவரைத்தான். எனது பரி-மாண வளர்ச்சிக்கு முதல் படி சிவாஜிதான். அவர் மீது நான் மிகுந்த மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறேன். 'தேவர்மகன்' படத்துக்குப் பிறகு சிவாஜியுடன் இன்னொரு படம் செய்யவேண்டும் என்று நினைத்தேன். அது நடக்காமலேயே போய்விட்டது."

## எம்.ஜி.ஆர். பற்றி...

"நான் ஏன் பிறந்தேன்' படத்திற்கு நடனம் செய்தபோது எம்.ஜி.ஆரோடு பழகக்கூடிய வாய்ப்பு கிடைத்தது. அவர் என் உடலை மேம்படுத்த சில பயிற்சிகளை எல்லாம் கத்துக் கொடுத்தார். அதைத் தினமும் இப்போதும்கூட செய்துகிட்டு வரேன்... அக்காலங்களில் எம்.ஜி.ஆர். எனக்கு சொன்னது ரொம்ப ஆழமாக மனதில் பதிந்திருக்கிறது. ஒருமுறை ஏவிஎம் கல்யாண மண்டபத்தில் உட்கார்ந்தபோது அவரிடம் பேச வாய்ப்பு கிடைத்தது. மலையாளத்தில்தான் அவரி டம் பேசுவேன். அப்போது நான் சொன்னேன்: "நல்ல படம் வரும்போது நான் உங்களை கூப்பிடுறேன். எப்படியாவது நேரம் ஒதுக்கி படம் பார்க்கணும்" என்றேன். "நல்லா இல்லாத படமும் பண்ணுவியா. நீ அடுத்த படம் வரும்போது என்னுதானே சொல்லணும். நல்ல படம் வரும்போதுன்னு சொல்ற" என்றார். "எல்லோரும் உங்களை மாதிரி ஆகிடமுடியுமா?" என்றேன். "பின்ன என்னமாதிரி ஆகணும் உனக்கு?" என்று கேட்டார். "உங்கள மாதிரி ஆகணும்னுதான் ஆசை. ஆனா முடியுமா?" என்றேன். "என்ன மாதிரி ஆகவேண்டாம். நான் பத்து படி ஏறியிருந்தேன் என்றால், நீ முதல் படியிலிருந்து ஏறி பத்தாவது படிக்கு வரப்போகிறாயா? பதினோராவது படியிலிருந்துதானே நீ ஏறணும். என்ன மாதிரின்னா, தொப்பி வைச்சுக்க போறியா?" என்று கேட்டார். "நல்லா இருந்தா தொப்பி வைச்சுக்குவேன்" என்றதும், "நான் முடி போவதுன்னு வைச்சிருக்கேன்" என்றார் இயல்பாக. இப்படி அவர் பேசி நான் கேட்டதேயில்லை."



## பாலுமகேந்திரா

லிசாவும் சமிமும் இணைந்து பணியாற்றியுள்ள மற்றொரு படம் I can't think straight. இதில் லிசா தனது ஜோர்டானிய பெற்றோர் ஏற்பாடு செய்யும் திருமணத்தை விரும்பாமல் லண்டன் வருகின்றாா். அங்கு லயலா என்ற இந்திய பெண் எழுத்தாளரை சந்திக்கின்றார். இருவருக்கும் காதல் ஏற்படுகின்றது. இரண்டு கட்டுப்பாடுகள் கொண்ட கலாச்சாரங்களில் பெண்கள், பெண்களை காதலிப்பதை

இயந்திரமாக தனது கணவனுடன் உறவு கொள்வாள். கணவனின் திருமண நாளன்று தனது இரு குழந்தைகளையும் ஒவ்வொன்றாக கொன்று விட்டு தானும் தற்கொலைக்கு முயற்சிக்கின்றாள். இப்படம் எடுக்கப்பட்டுள்ள முறை நன்றாக உள்ளது. Arcelia Ramírez யூலியாவாக சிறப்பாக நடித்துள்ளார். இவர் இப்படத்துக்காக பல விருதுகளையும் பெற்றுள்ளார். இவர் தமிழ்ப்பட நடிகைகள் போல் ஒப்பாரி வைக்காமல் கண்ணீர் வடிக்காமல் தனது நடிப்பை வெளிப்படுத்தி யுள்ளார். கடினமான பாத்திரம். அதனை சிறப்பாக செய்துள்ளார். தனது கணவன் பறி போகின்றான் எனத் தெரிந்தும், அதன் வலியை முகத்தில் சுமந்து வலம் வருகின்றார். இயக்குனரும் பல காட்சிகளை சிறப்பாக எடுத்துள்ளார். யூலியா என்ற பாத்திரத்தை இவர் படிப்படியாக வடிவமைக்கும் வண்ணம் அருமையானது. கட்டிலில் யூலியா ஒரு பாலி யல் தொழிலாளி போல் கட்டிலின் மறுப்பக்கம் உடைகளை களைய, வாடிக்கையாளன் போல் கணவன் மறுபுறம் உடைகளை களைய கட்டில் இயந்திரமாக இவர்களை தாங்குகின்றது. மிகவும் பருமனான வீட்டு சொந்தக்காரரின் கால்களை கட்டிப்பிடித்து "என்னை வீட்டை விட்டு கலைக்காதே, எனக்கும் பிள்ளைகளுக்கும் போக வேறு இடமில்லை" எனக் கதற, "மு"(முதலாளி) வோ அது எனது பிரச்சினையல்ல என காலை உதறுகின்றான். இங்கு உடல் பருமன் மைக்கல் மூரின் முதலாளித்துவத்தை நினைவுபடுத்தியது. உடல் அளவு ஒரு குறியீடாகின்றது. பின்னணி இசை படத்தின் மற்றொரு பிரதான பாத்திரம்.

# ரொறொன்ரோ சர்வதேச திரைப்படவிழா - 2009 - 3

அனு, *The World Unseen, I can't think straight, Cairo Time, Sabah, Such is Life* ஆகிய படங்களை முன்வைத்து.







இக்கதை 1998ல் படமாக்கப்பட்டது. தமிழ்த் தேசிய போரில் பல நூற்றுக் கணக்கான பெண்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளார்கள். எமது ஆண்கள் பலரும் நிர்மால்ய பானர்ஜி போன்றுள்ளார்கள். இப்படத்தை இயக்கியிருப்பவரும் ஒரு பெண். இவரது பெயர் Satarupa Sanyal. இவர் இதுவரை நான்கு படங்களை இயக்கியுள்ளார். பல விவரணப் படங்களையும் இயக்கியுள்ளார். இவர் ஒரு கவிஞரும் கூட. வங்காளம் தந்துள்ள மற்றொரு சிறந்த பெண் இயக்குனர் இவர். இப்படத்தில் அனுவாக நடித்திருப்பவர் தேசிய விருது பெற்ற இந்திராணி (சென்) கெல்டர்.

## *The World Unseen*

தென்னாபிரிக்காவில் 1950 களில் நடைபெறும் கதை. இன வெறி உச்சக்கட்டத்தில் உள்ள அந்த கால கட்டத்தில் மிராம் தனது கணவன் ஓமருடன் வாழ்ந்து வருகின்றாள். ஓமர் ஓர் ஆணியவாதி. மிராம் கணவரின் சொல்லை மீற முடியாது. அவ்வப்போது ஆக்கிரமிப்பும் இடம் பெறும். அந்தப் பகுதியில் வாழும் மற்றொரு இந்தியர் அமீனா ஓர் உணவு விடுதியை நடாத்தி வருகின்றாா். அங்கு பல வாடிக்கை யாளரும் வந்து போகின்றனர். ஊரின் ஒதுக்குப் புறத்திற்கு ஓமர் குடும்பம் இடம் பெயருகின்றது.

ஏற்கமாட்டார்கள். காதலுக்கே எதிர்ப்பு தெரிவிக்கும் இவர்கள், இதற்கா ஆதரிக்கப் போகின்றார்கள். பல எதிர்ப்பையும் மீறி இவர்கள் இருவரும் இணைகின்றனர். வேர்ல்ட் அன் சீன் படத்தில் அமீனாவாக நடித்த சீத் இதில் லயலாவாக நடித்துள்ளார். சமூக பண்பாட்டு சக்தி பெண்ணின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை ஏற்க மறுக்கின்றது. பாலியல் தேர்வு என்பது தனி மனித விருப்பம். அதனை இப்படங்களில் இயக்குனர் வலியுறுத்துகின்றார்.

## *Such is Life*

மெக்சிக்க இயக்குனர் Arturo Ripstein இயக்கிய படம். பரீட்சார்த்த படமென இப்படம் கூறப்பட்டாலும் இப்படத்தின் கதை எமக்கு புதிதல்ல. பெரிதாக படிக்காத ஆனால் கோமியோபதி மருத்துவம் கொஞ்சம் தெரிந்த யூலியா, தனது கணவனுடன் மெக்சிக்கோ நகரத்தில் வாழ்ந்து வருகின்றாள். இவளது கணவன் வேறு ஒரு பணக்கார பெண்ணுக்காக இவளை விட்டு விட தீர்மானிக்கின்றான். கணவனின் புதிய மாமனாரே இவள் தங்கியிருக்கும் அப்பாட்மென்ட் சொந்தக்காரர். இப்பொழுது இவளுக்கு வீடும், தனது குழந்தைகளும் பறிபோகும் அபாயம். இத்தருணத்தில் கூட இரவு வந்தால்

## கெய்ரோ ரைம்

ரொரண்ரோ சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்பட்ட கனடிய படம். இப்பொழுது பல திரையரங்குகளில் காட்சியளிக்கப்படுகின்றது. சில வருடங்களின் முன்னர் வெளிவந்து அபர்ணா சென்னின் "Mr and Mrs Iyer" படத்தை போன்றது. ரோக்கியோவை மையமாகக் கொண்டு எடுக்கப்பட்ட Lost in Translation பாரிசை மையமாகக் கொண்ட Before Sunrise படங்களும் இதே தளத்தில் எடுக்கப்பட்டவையே. Mr and Mrs Iyerம் இப்படமும் வெவ்வேறு தளங்களில் படமாக்கப்பட்டுள்ளன. கெய்ரோவில் கணவனை எதிர்பார்த்து விடுமுறைக்கு செல்லும் மனைவி எதிர்பார்த்த விதமாக கணவன் அங்கு வரவில்லை. அவனுக்கு பதிலாக கணவனிடம் முன்பு வேலை பார்த்த ரெரிக் வருகின்றாா். ரெரிக் இப்பொழுது ஆண்கள் தனியே அமரும் கோப்பிக் கடை உரிமையாளர். சஞ்சிகை ஆசிரியரான யூலியட்டுக்கும், யூலியட்டுக்கு ஊரை சுற்றிக் காண்பிக்கும் ரெரிக்குக்கும் நட்பு வளருகின்றது. தங்களது உணர்வுகளை மறைத்து பழகுகின்றனர். அது அடுத்த கட்டத்திற்கு நகரும் கட்டத்தில் கணவன் வந்து விடுகின்றான் (சிவ பூசைக்குள் கரடி வந்தது போல்.) படம் பல இடங்களில் ஏனோ Mr and Mrs Iyer நினைவு படுத்தியது. இரண்டும் வெவ்வேறு தளங்களாயிருந்தும் சில ஒற்றுமைகள் இருந்தன. யூலியட் பேரூந்தில் பயணிக்க, தீவிரவாதிகளால் பேரூந்து மறிக்கப்பட்டு யூலியட் பின்னர் ரெரிக்கின் உதவியுடன் கெய்ரோ திரும்புகின்றாள். அபர்ணா சென்னின் படத்திலும் பேரூந்து பயணம் தீவிரவாதிகளால் மறிக்கப்பட்டு சோதனை இடப்படுகின்றது. கலவரத்தால் ஓர் இடத்தில் தங்க வேண்டி ஏற்படுகின்றது. அபர்ணா சென் ஒரு மத அரசியலுக்கு எதிராக கருத்து தெரிவித்திருந்தார்.

கெய்ரோ ரைமை இயக்கியவர் Ruba Nadda என்ற பெண். இவர் சிரிய-கனடியர். கியுபெக்கில் பிறந்து, ரொரண்ரோவில் வாழ்ந்து வருகின்றார். இவர் வளர்க்கப்பட்ட கலாச்சாரம் இந்த நட்பை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தவில்லை. அபர்ணா வும் அதனை நட்பாகவே முடித்திருந்தாலும், முஸ்லீம் ஆணை, தீவிரவாதிகளிடமிருந்து காப்பாற்ற வேண்டுமென்பதற்காக திருமதி ஐயர், அந்த முஸ்லீம் இளைஞனை தனது கணவன் எனக் கூறுகின்றாள். அந்த துணிச்சல் மிக்க பாத்திரம் போன்று யூலியட்டை இங்கு படைக்கவில்லை. இவரது முந்தைய படமான சபா (Sabah) ல் 40 வயது முஸ்லீம் பெண்ணுக்கும், வெள்ளை இனத்தவருக்கும் இடையில் ஏற்பட்ட காதல் மத கலாச்சாரத்தை மீறி இணைகின்றது. இப்படம் இவரது படைப்புக்களுள் குறிப்பிடத்தக்க படம்.

அபர்ணா சென்னின் அரசியல் கருத்தியல் ரூபாவிடம் இல்லையென்றாலும், ரெரிக்கின் முன்னால் காதலியின் பாத்திரம் முக்கியமானது. ரெரிக்குடன் அவள் பழகும் முறை அவளின் முற்போக்குத் தன்மையைக் காட்டுகின்றது. ரெரிக் தனது காதல் தோல்விக்காக "இதயம் நொருங்கிவிட்டது" என திருமணம் செய்யாமல் காலத்தை கடத்தும் பிற்போக்குத்தனம் அவளிடம் இல்லை. சிறு பாத்திரமானாலும் தாக்கத்தை ஏற்படுத்தும் பாத்திரம். இவ்வாறான பாத்திர படைப்புக்கள் பெண் இயக்குனர் களாலேயே சாத்தியம். யூலியட்டுக்கும், ரெரிக்குமிடையிலான அணுகு முறையில் கூட ரெரிக்கின் அணுகு முறையில் சிறு உள்ளார்த் தமிருப்பதாக படுமுறையில் ரெரிக்கின் பாத்திரமைக்கப்பட்டுள்ளது. இதேநிலை அபர்ணா சென்னின் படத்தில் இருந்தாலும், அபர்ணா ஆணின் பாத்திரத்தின்மேல் அழுத்தம் கொடுக்காமல் இயல்பாக விட்டுவிட்டார்.

கெய்ரோ இவ்வளவு அழகாக வேறு எவராலும் படமாக்க முடியாது. கெய்ரோவின் மூலை முடுக்கெல்லாம் கமரா பாய்கின்றது. பிரமிட்டுக்கு மேலேயும் எம்மை கூட்டிச் செல்கின்றார் ஒளிப்பதிவாளர். படத்தில் முக்கிய பாத்திரம் கெய்ரோ. திரைப்பட விழாவில் படம் முடிந்த பின் பலர் கெய்ரோவைப் பற்றி, அதன் அழகைப்பற்றி வியந்தனர்.

ரெரிக்காக நடித்த Alexander Siddig சிறப்பாக நடித்துள்ளார், Patricia Clarkson, யூலியட்டாக நடித்திருந்தார்.

தனிமையில் ஏற்படும் காதல்கள், உணர்ச்சி

தொடர்ச்சி 28ஆம் பக்கம்

ASTROLOGY PALMISTRY
PANDITH RAMU SWAMY

இந்தியாவிலிருந்து சிங்கப்பூர், மலேசியா, அவுஸ்ரேலியா, இங்கிலாந்து போன்ற பலநாடுகளிற்கு சென்று கனடா வந்திருக்கும் பிரபல பரம்பரை சோதிட மலையா சாஸ்திரி அவர்கள் நடந்தவை, நடப்பவை, நடக்க இருப்பவை பற்றி துல்லியமாக கூறுகிறார்.



I Will Read Your Past, Present, Future, Face Reading, Hand Reading, Husband & Wife Problems, Love Problems, Family & Education Problems, and Etc. Dustagraha, Shanthi, Dosha Nivarana, Astabandana, Devi Pooja Pariharam. I Recover People 100% From Black Magic.







துர்க்கா பரமேஸ்வரி ஜோதிடம்

- கைரேகை பலன்
- திருமணபொருத்தம்
- குறிப்பு
- முகநாடி
- பிள்ளைகளின் ஜனா ஜாதககுறிப்புக்கள்
- கண் திருஷ்டி
- அதிஸ்ட இலக்கம்
- பரிகாரங்கள்
- மனஸ்தாபங்கள்
- நீதி மன்ற விவகாரங்கள்
- மணப் பொருத்தங்கள்
- பிள்ளைகளின் படிப்பு
- மந்திரம்
- சூனியம்
- செய்வினை
- அதிஸ்ரக்கல்
- கணவன் மனைவி ஒற்றுமை
- காதல் கல்யாணம்
- தொழில் வியாபார லட்சுமி விருத்தி
- வீட்டு வாஸ்த்து
- குடும்ப பிரச்சனை
- குழந்தைபாக்கியம்

Call: 416-827-1643/647-988-1643
10:00 AM – 8:30 PM GTA SQUARE MALL
5215 Finch Ave.East Unit#106, Scarborough, On, M1S 0C2
(Middlefield & Finch) South East Corner

ஒரு முறை விஜயம் செய்யுங்கள் உண்மை புரியும்

நம்பிக்கையே கடவுள்

BUROX
Design - Print - Marketing
Tel: 416-438-3133


# நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளர்ந்த மறை மொழி தானே மந்திரம் என்பர்



இறைவனைப் பாடவந்த நாவரசர் 'மந்திரமும் தந்திரமும் மருந்துமாகி, தீரா நோய் தீர்த்தருளவல்லான்' என்றே பாடியுள்ளார். மேலும் மந்திரமும் மறை பொருளுமானான் என்றும் கூறியுள்ளார். எனவே அறிதற்கரிய ஆண்டவன், தீராத நோய் தீர்ப்பவன். அவனைப் போல மந்திரமும் மக்களுக்கு மாட்சிமை அளிக்கக் கூடியதாகும். நாதன் தாழ் வாழ்க என்று கூறியதற்கு முன்னர் நமசிவாய வாழ்க என்றே மணிவாசகர் கூறியுள்ளது சைவசமயத்தவரின் மூலமந்திரமான நமச்சிவாய என்பதன் மகிமையை உணர்த்துவதாய் உள்ளதெனலாம்.

மந்திரங்கள் எல்லா மதங்களிலும் உள்ளன. எல்லா மொழிகளிலும் உள்ளன. மந்திரம் என்றால் மனோவலிமையை கொடுக்கக் கூடியது என்பதாகும். மனம், வாக்கு, காயம் சுத்தமாக இருந்து செயற்பட்டால் நம்வாக்கே மந்திரமாக மாறி பலிக்கும். இவை மூன்றும் சுத்தமில்லாவிட்டால் நம்வாக்கே நமக்கு எதிரியாகி நம்மை அழித்துவிடும். நம்வாக்கே அணுகுண்டுதான். நம் செயலும் அதுவே தான். நமது எண்ணங்களே ஹைட்ரஜன் குண்டு. ஆகவே நமக்கு எது தேவையோ அதை வேண்டி அதற்கு தகுந்தபடி இவைகளை பிரயோகம் செய்தால் வேண்டியதை அடையலாம்.

இந்த மந்திரங்கள், தந்திரங்கள், யந்திரங்கள் எல்லாம் ஒரு சிலருக்கு மட்டுமே சொந்தமானவையல்ல. இவை எல்லா மக்களுக்கும் சொந்தமானவை. மந்திரங்களுக்குரிய வல்லமை வரம்பு கடந்தது. இவற்றை பிரயோகிப்பவர் உள சுத்தியுடன் பிரயோகம் செய்தால் அவை தமது விளைவை கட்டாயம் ஏற்படுத்தவே செய்யும். எவன் ஒருவன் தன் ஆத்மாவை வசப்படுத்துகின்றானோ அவன் ஞானியாகின்றான். மனிதன் தன்னிடமுள்ள தெய்வாம்சத்தை அறிந்து கொண்டால் அவனே தெய்வம் தான்.

இராமானுஜர் பல எதிர்ப்புகளுக்கு இடையில் 'ஓம் நமோ நாராயணா' என்ற மந்திரத்தை கோபுர உச்சியில் நின்று கொண்டு காது கேட்பவர்கள் எல்லாரும் இம்மந்திரத்தை கேட்டு உச்சரித்து பயனடையுங்கள் என்று மக்களுக்கு எடுத்து கூறினார். எனவே எதையும் முறைப்படி மனம், வாக்கு, காய சுத்தியுடன் செய்தால் வெற்றி நிச்சயம்.

ஜங் என்ற தத்துவஞானி ஒரு கருங்கல்லின் மேலே அமர்ந்து கொண்டு தனது பெயரையே மந்திரமாக உச்சரித்தேதான் தெளிவு பெற்றதாகக் கூறினார். எனவே மகாசக்தி உலகெங்கும் பரவிக் கிடக்கின்றது. நம்முள்ளேயும் கிடக்கின்றது. அது தெரிந்து செயற்பட்டால் நாம் எல்லா நன்மைகளையும் அடையலாம்.

உங்கள் உள்ளத்திலும் இறைவன் இருக்கின்றான். எனவே காவி உடுத்து, தலைமுடி, தாடி வைத்திருக்கும் கபட சந்நியாசிகள் கால்களில் விழாதீர்கள். அப்படிச் செய்வது உங்கள் உள்ளத்தில் இருக்கும் இறைவனை கொண்டு போய் இன்னொருவர் காலில் விழச் செய்ததற்கு ஒப்பாகும். எனவே உங்கள் ஆத்மாவை கேவலப்படுத்தாதீர்கள். உங்களிடம் இருப்பது சாதாரண சக்தியல்ல. மகா பலம் வாய்ந்த பேரருட்சக்தி என்பதை உணருங்கள்.

எழுத்துக்களை அல்லது சொல்லை திரும்பத்திரும்ப பல தடவை உச்சரிக்கும் போது அதற்கு உருவேறி உத்வேகம் பெறுகின்றது. ராமநாமத்தை உச்சரித்தே பலம்பெற்றான் அனுமன் என்பர். நலம் தரும் நாமம் நாராயணா என்பதும் கருத்திற் கொள்ளத் தக்கது.

எனவே சொல் ஒன்று உருவேறி, திருவேறி ஆற்றல் பெற்று காரியத்தை சித்திக்கும் போது மந்திரம் எனப்படுகின்றது. இவ்வகையானது காரியசித்தி மந்திரம் எனப்படும்.

தாம் நினைத்தவற்றை நிறைவேற்றும் ஆற்றல்கள் அதாவது சித்துக்கள் கைவரப் பெற்றவர்கள் சித்தர்கள் எனப்படுவர். பூர்வ புண்ணிய பலனும் இறையருளும் குருவருளும் இருந்தால்தான் இத்தகைய சித்துக்களை அடையமுடியும்.

காட்டிற்கு சென்று காவிதரித்து கடுந்தவமியற்றினால்தான் சித்துக்கள் கைவரப் பெறும் என்பதல்ல. இல்லறத்தில் இருந்து கொண்டே ஐம்புலன்களை ஆற்றுப்படுத்தி அறநெறிப்பட்ட வாழ்வு வாழ்ந்தாலும் ஆற்றலுடைய சொற்கள் பிரவாகிக்கும். இல்லற ஞானிகளின் வாழ்க்கை இதற்கு எடுத்துக் காட்டாகும்.

**மந்திரம் என்பது**
**மறையோர் வாக்கு.**



**நா. க. சிவராமலிங்கம்**

# என்றென்றும் மக்களின் முதல்தெரிவு




தமிழர் மத்தியில் என்றும் தரமானதாகவும் ருசியானதாகவும் சுகாதாரமுறைக்கேற்ப உணவுப்பொருட்களை வழங்குவது

**நிரு பிராண்ட் தயாரிப்புக்களே.**

# கருந்துளைகள் தோன்றல்

கருந்துளை ஒன்று எவ்விதம் தோன்றுகின்றது என்பதனைப் பார்ப்பதற்கு விண்மீன்களின் வாழ்க்கை வட்டத்தினைப் பார்த்துக் கொண்டு வருவது எமக்கு வசதியாக இருக்கும். எனவே அது பற்றிப் பார்ப்போம். மிகச் சுருக்கமாக, இப்பகுதிக்குத் தேவையான அளவிற் பார்ப்போம்.



**பேரண்டம் - 51**

விண்மீன்கள் தோன்றுதல் விண்மீன்களுக்கிடையில் பெரும் வெளியிருப்பது எமக்கெல்லாம் தெரியும். இந்த வெளியானது வெறுமையாக இருப்பதில்லை. விண்மீன்களுக்கு இடையேயான இவ்வெளியினுள் பெருமளவு தூசுக்களும் ஐதரசன் போன்ற வாயுக்களும் பெரும் பரப்பளவில் ஐதாகக் காணப்படும். இதனை வான்வெளி இடைஊடகம் என்பார்கள். இந்தத் தூசுகளும் வாயுக்களும் காலப்போக்கில் ஈர்ப்பினால் ஒன்று திரண்டு நெபுலா எனும் பெரிய, வாயுக்களையும் தூசுக்களையும் பெருமளவில் கொண்ட பகுதியாக மாறும். வான்பரப்பில் பயணப்பட்டுக் கொண்டிருக்கும் அதிர்வு அலைகள் இந்த நெபுலாவைக் கடந்து செல்கையில் நெபுலாவானது பல துண்டுகளாகக் கூறிடப்படும். கூறிடப்பட்டுத் தோன்றிய துண்டுகள் ஒவ்வொன்றும் இன்னமும் ஈர்ப்பின் காரணமாகச் சுருங்கிக் கொண்டே போகும். சுருங்கிக் கொண்டு போகையில் அங்கே இருக்கும் துணிக்கைகள் எல்லாம் ஒன்றுக்குக் கிட்டவாக இன்னொன்றென வந்து, ஒன்றுடன் ஒன்று உரசிக் கொள்ளும். அத்துடன் அந்தத் துண்டும் ஒரு பந்து வடிவிற்கு வந்துவிடும். அப்பந்தில் பெருமளவில் வாயுக்களே இருப்பதனால் அதனை வாயுப்பந்து என்போம். துணிக்கைகளின் நெருக்கத்தினால் உண்டாகும் வெப்பத்தினால் அந்தவாயுப் பந்தின் வெப்பநிலையானது உயரத் தொடங்கும் ஒருநிலையில் வாயுப்பந்தில் உயர் வெப்பம் வந்துவிடும். அத்துடன் துணிக்கைகள் மிகவும் நெருக்கமாகக் கருதப்படும் இடத்தினுள் அசைவதனால் அமுக்கமும் கூடுதலாக இருக்கும். இவையெல்லாம் ஈர்ப்பின் காரணமாக ஏற்பட்ட விளைவுகள். இந்த வாயுப்பந்தில் பெருமளவில் ஐதரசன் அணுக்களே காணப்படும்.

இப்போதுள்ள வெப்பநிலையும் உயர் அமுக்கமும் வாயுப் பந்தில் உள்ள ஐதரசன்களில் நாலு ஐதரசன் அணுக்கள் ஒன்றுடன் ஒன்றாக இணைந்து புதியதாக ஈலியம் என்ற அணுவினைத் தோற்றுவிக்கப் போதுமானதாக இருக்க, அங்கே ஈலியம் அணுக்கள் தோற்றுவிக்கப்படும். இதனை ஐதரசன் உருகல் என்பார்கள். இந்த ஐதரசன் உருகல் நிகழுகையில் பெருமளவு சக்தியும் வெளிவிடப்படும். வெளிவிடப்படும் சக்தியின் காரணமாக வாயுப் பந்து சுருங்குவது நின்றுவிடும். அத்துடன் சக்தியானது அந்த வாயுப் பந்தில் இருந்து பெருமளவில் வெளியேற அந்த வாயுப் பந்தானது ஒரு விண்மீனாக வானிலே ஒளிரத் தொடங்கும்.

இவ்விதமாக குறிப்பிட்ட ஒரு பகுதியில் காலத்திற்குக் காலம் தோன்றிய விண்மீன்கள் எல்லாம் கொத்தணி விண்மீன்கள் எனப்படும். புதியதாகத் தோன்றிய இக்கொத்தணி விண்மீன்கள் பலதரப்பட்ட பருமன்களிலும் திணிவுகளிலும் காணப்படும். எனவே விண்மீனொன்று பெருமளவு ஐதரசன்களைக் கொண்டிருந்தாலும், ஒவ்வொரு விண்மீனும் கொண்டிருக்கும் ஐதரசன் அணுக்களின் எண்ணிக்கை வேறுபட்டிருக்கும். பொதுவாகவே விண்மீன் ஒன்று நீண்ட பல காலத்திற்குப் போதுமான ஐதரசன் அணுக்களைக் கொண்டிருக்கும். எமது தாய் விண்மீனாகிய கதிரவன் தோன்ற கிட்டத்தட்ட நாலரை பில்லியன் ஆண்டு (450 கோடி ஆண்டு) ஆகிவிட்டது. இன்னமும் 500 கோடி ஆண்டிற்குத் தேவையான ஐதரசன் அணுக்கள் கதிரவனில் உள்ளன.

## விண்மீன்களின் இறப்பு

விண்மீனொன்றில் உள்ள ஐதரசன் அணுக்கள் கணிசமான அளவிற்குக் குறைந்ததும் அந்த விண்மீன் இறக்கத் தொடங்குகின்றது. விண்மீன்கள் இறக்கின்ற விதமும், இறப்பின் பின்னரான இறுதி விளைவுகளும் அதன் திணிவில் தங்கியுள்ளது. பெரும்பாலான விண்மீன்கள், இறக்கும் போது தமது திணிவில் பெரும் பகுதியை கிட்டத்தட்ட 90 வீதமான திணிவைத் தூசுக்களாகவும் வாயுக்களாகவும் அண்டவெளியினுள் தள்ளிவிடுகின்றன. இப்படியாகப் பல விண்மீன்கள் இறக்கும் போது அண்டவெளியினுள் தள்ளிவிடப்பட்ட தூசுக்களும் வாயுக்களும் ஒன்றாகச் சேர்ந்து அப்பகுதியில் வான்வெளி இடைஊடகமாக மாறிப் பின்னர் நெபுலாவாக உருவெடுத்து அடுத்த தலைமுறை விண்மீன்களைத் தோற்றுவிக்கின்றன. நமது கதிரவன் பேரண்டத்தினைப் பொறுத்தவரையில் மூன்றாம் தலைமுறை விண்மீன்களில் ஒன்றாகும்.

விண்மீன் இறக்கும்போது 90 வீதமான பகுதியே தூசுக்களாகவும் வாயுக்களாகவும் அண்டவெளியினுள் தள்ளிவிடப்படுவதாகக் கூறினேன் அல்லவா! மீதிக்கு என்ன நிகழும் என்ற கேள்வி ஒன்று உங்களுக்கு எழும். விண்மீனின் மையப்பகுதியான மீதி 10 வீதமும் அப்படியே விண்பரப்பில் ஒன்றாகத் தங்கிவிடும். ஒன்றாகவே திரண்டிருப்பதால் ஈர்ப்பானது இன்னமும் மொத்தமாக அதிற் செயற்பட்டுக் கொண்டிருக்கும். அதனால் அது இன்னமும் சுருங்கிக் கொண்டே போகும். இங்கு இன்னொரு விடயத்தினையும் தெளிவுபடுத்த வேண்டும். இந்த எஞ்சிய பகுதியானது மிகவும் சூடாகவும் சிறியதாகவும் இருக்கும். அதனுள் இருக்கும் துணிக்கைகள் சடப்பொருட்களின் நாலாவது நிலையாகிய 'பிளஸ்மா' நிலையில் இருக்கும். அதாவது அங்குள்ளவை சடப்பொருள்களின் எமக்கு மிகவும் தெரிந்த நிலைகளான திண்மமாகவோ, திரவமாகவே அல்லது வாயுவாகவே இராது. பிளஸ்மா நிலையில் அங்கே சடங்கள் இருப்பதனால் விண்மீனின் எஞ்சிய பகுதியானது இன்னமும் சுருங்குவதற்கு ஏற்றவாறு உள்ளது.

## சடப்பொருட்களின் நாலாவது நிலை 'பிளாஸ்மா

மேலும் தொடர்வதற்கு முன்னராக சின்னதாக ஒரு இடைச் செருகல். சடப்பொருட்களின் நிலைகள் பற்றிப் பார்ப்போம். பொதுவாகவே இப்போதுள்ள பேரண்டத்தின் நிலைப்பாட்டில் சடங்கள் எல்லாம் அணுக்களாகக் காணப்படுகின்றன. இந்த அணுக்கள் நேர்மின்தன்மை கொண்ட அணுக்கருவையும் அதனைச் சுற்றிவரும் எதிர்மின் தன்மை கொண்ட பருமனிற் சிறிய இலத்திரன்களினாலும் ஆனவை. இந்த அணுக்கள் இணைந்தே பேரண்டத்தின் அத்தனை பொருட்களும் உண்டாகின. அணுக்கள் சடங்கள் என்பதனால் இப்பொருட்கள் எல்லாவற்றையும் சடப்பொருள்கள் என்கின்றோம். அணுக்களின் சிறப்பு என்னவென்றால் நேர் மின்தன்மையான அணுக்கருக்களும் எதிர் மின் தன்மையான இலத்திரன்களும் ஒன்றாக, ஒரு கட்டுக்குள் இருப்பதாகும். அதனால் அணுக்களுக்கு மொத்தத்தில் பார்த்தால் மின்தன்மையில்லை. இந்த மின்தன்மையற்ற அணுக்களினால் ஆன பொருட்களைத் திண்மமாகத் திரவமாக, வாயுவாக நாம் பார்க்கின்றோம். இந்த மூன்று வகையாக சடப்பொருட்களும் மட்டுமே எமக்குப் பழக்கம். இனி, வெப்பநிலையானது அதிகரித்துக் கொண்டு போகையில், இந்த இலத்திரன்கள் என்ன செய்கின்றனவெனில், ஒருநிலையில் அணுவை விட்டு தனியனாக வந்துவிடுகின்றன. கிட்டத்தட்ட 3000 'சதமஅளவைக்கு மேல் வெப்பநிலையானது அதிகரித்ததும் இலத்திரன்கள் தனியனாக வரத் தொடங்கிவிடும். அதாவது, இலத்திரன்கள் அங்கேயே இருந்தாலும் கூட, நேர் மின்தன்மை கொண்ட அணுக்களுடன் சேர்ந்து தொழிற்படுவதில்லை. அதனால் இயல்பான அணுவின் தொழிற்பாடு அங்கே காணப்படாது. அங்கு நேர் மின்தன்மை கொண்ட சடங்களும் எதிர் மின்தன்மை கொண்ட சடங்களும் ஒன்றாகத் திரண்டிருக்கும். இந்நிலையினைத் தான் விஞ்ஞானிகள் சடங்களின் பிளஸ்மா நிலை என்கின்றார்கள். இன்னமும் அவை சடங்கள் என்பதினால்தான் இந்தநிலையைக் கூட, சடத்தின் ஒரு நிலையாக விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.

பொதுவாகவே பேரண்டத்தில் உள்ள சடங்களில் 90 வீதமான சடங்கள் பிளஸ்மா நிலையில்தான் காணப்படுகின்றன. ஆனாலும் எமக்கு அதிகம் தெரிவதில்லை. விண்மீன்களில் உள்ள சடங்கள் பிளஸ்மா நிலையிலேயே காணப்படுகின்றன. விண்மீன்களின் உயர் வெப்பநிலையில் அங்கு காணப்படும் எல்லா அணுக்களுமே நேர் மின்தன்மை கொண்ட அணுக்கருக்களாகவும், எதிர்மின்தன்மை கொண்ட இலத்திரன்கள் ஆகவும் பிரிந்து விடுகின்றன. இதனால் விண்மீன்கள் எல்லாமுமே பிளஸ்மா நிலையிலேயே சடங்களைக் கொண்டிருக்கின்றன.

இந்த மட்டில் இடைச் செருகலை நிறுத்திக் கொண்டு, மீண்டும் கருந்துளை உருவாகுவதன் தொடர்ச்சியினை அடுத்த இதழிற் பார்ப்போம்.



**- கனி -**



# தென்னிந்தியாவில் டைனோசர்கள்

டைனோசர்கள்! சிறுவர்கள் சிலாகிக்கும் பெயர். பெரியவர்களைப் பிரமிக்க வைக்கும் பாரிய மிருகங்கள். முன்னொரு காலத்தில் பூமியெங்கும் இருந்தனவாம், விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். முன்னொரு காலமெனும்போது, 6 கோடியே 50 இலச்சம் ஆண்டுகளுக்கு முன்பு பூமியில் வல்லாதிக்கம் செய்து கொண்டிருந்த இந்த இனம் இன்று ஒன்றுமேயில்லை. இவற்றின் அடையாளங்களை, தடையங்களை விஞ்ஞானிகள் உலகப் பரப்பெங்கும் கண்டுபிடித்திருக்கின்றார்கள். ஆனால் ஆசியாவைப் பொறுத்தளவில் சீனாவில் மாத்திரமே டைனோசர்கள் பற்றிய தடயங்கள் குறிப்பிடத்தக்க அளவில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. எனது நண்பர் ஒருவர் சில நாட்களுக்கு முன்னர் என்னிடம் வினவினார் "ஏன் எங்கள் பகுதிகளில் ஒரு டைனோசரின் எலும்புக் கூட்டையோ அல்லது அதன் முட்டையையோ விஞ்ஞானிகள் கண்டுபிடிக்க வில்லை? எங்கள் பகுதிகளில் டைனோசர்கள் வாழவில்லையா?" இவை போன்ற சில கேள்விகளை என்னுடன் பேசிக் கொண்டு இருக்கையில் கேட்டார். எதற்காக இக் கேள்விகளை என்னிடம் கேட்டார் என்று தெரிய வில்லை.அக்கேள்விகளுக்கான சரியான, திருப்தியான பதில்களை என்னால் கூறமுடிய வில்லை. சீனாவைக் குறிப்பிட்டுக் கூறிவிட்டு, பின்னர் கூறினேன் "இனிமேல்தான் எங்கள் பகுதிகளில் கண்டெடுப்பார்களோ தெரிய வில்லை. கொஞ்சம் பொறுத்திருந்து பார்ப்போம்" என்றேன். எனது பதில்களால் அவர் திருப்தியடையவில்லை. ஆனாலும் அவரது கேள்விகளுக்கு பதில் சொல்வது போல, அவரது ஆதங்கத்தை தீர்ப்பது போன்ற செய்தி ஒன்று ஒக்டோபர் 01, 2009இல் தென்னிந்தியாவில் இருந்து வந்தது. விபரம் இதுதான்.



தென்னிந்தியாவில் அரியலூர். 14 கோடி ஆண்டு பழமை வாய்ந்த உயிர்ப் படிமங்களின் தடயங்கள் நிரம்ப உள்ள பிரதேசம். இப்பகுதியில் ஜெர்மனியின் ஆய்வாளர்களுடன் இணைந்து இந்திய ஆய்வாளர்களும் இந்தத் தடயங்கள் குறித்து ஆய்வுகள் செய்கின்றார்கள். இவ்வாய்வுகளின் போது தென்னிந்தியப் பகுதிகளில் டைனோசர்கள் இருந்ததற்கான தடயங்கள் வெளிப்பட்டன. ஒன்றிரண்டல்ல, நூற்றுக் கணக்கில் இருந்தன. செந்துறை எனும் இடத்தில், ஏராளமான டைனோசர் முட்டைகள் நிலத்திற்கடியில் புதைந்து கிடப்பதைக் கண்டு பிடித்த ஆய்வாளர்கள் அதிசயித்து விட்டனர். இவ்வளவு பெருந்தொகையாக உலகின் எப்பகுதியிலும் இதுவரையில் டைனோசர்களின் தடயங்கள் அகப்படவில்லை எனக் கூறும் அவர்கள், அம்முட்டைகளைப் பற்றியும் அவை புதைந்து கிடந்த விதத்தினைப் அறிந்து கொண்டதையிட்டும் ஒருவித பெருமிதமும் கொண்டுள்ளார்கள்.

முட்டைகள் ஒவ்வொன்றும் 5 அங்குலத்திற்கும் 8 அங்குலத்திற்கும் இடைப்பட்ட நீளத்தில் காணப்பட்டன. பல குவியல்களாக இம்முட்டைகள் காணப்பட்டன. ஒவ்வொரு குவியலும் கிட்டத்தட்ட 4 அடி நீளமான மணற் பரப்பில் எட்டு முட்டைகளைக் கொண்டவையாக இருந்தன. இம்முட்டைகள் பெரும் மணற்குவியலால் மூடப்பட்டு இருந்தன. இம்மணற் குவியலை, எரிமலைக் குழம்பு உறைந்து உண்டாகிய கற்பாறைகள் மூடியிருந்தன. இம்முட்டைகள் புதையுண்டு கிடந்த விதத்தினைக் கொண்டு ஆய்வாளர்கள் பல விடயங்களைக் கூறுகின்றார்கள். பெரியார் பல்கலைக்கழகத்தில் புவியியல் விரிவுரையாளராக இருக்கும் ஆர் ராம்குமார் என்பவர் கூறுகையில், "வேட்டையாடி உண்ணும், நீண்ட கழுத்தையுடைய பெரிய விலங்காகிய கானோசரஸ் (carnotaurus) என்ற வகையின டைனோசர்களின் முட்டைகள் அதிகம் இருந்தன என்கின்றார். வேறும் வகையின டைனோசர்களினதும் முட்டைகளும் அங்கிருந்தன" என உறுதிப்படுத்தும் அவர் இந்த முட்டைகள் ஆறரைக் கோடி (65 மில்லியன்) ஆண்டு பழமையானவை எனக் காலங் கணிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இந்த டைனோசர் முட்டைகளின் கண்டுபிடிப்பு என்ன வகையில் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றது என நீங்கள் கேட்கலாம். அதற்கும் அவரது பதிலில் விளக்கம் உள்ளது. ராம்குமாரின் தகவலின்படியேயே, இத்தொகுதியின் கண்டு பிடிப்பானது பல புதிய தகவல்களை எமக்குத் தந்திருக்கின்றது. முதலில் இந்தியப் பகுதிகளில், சிறப்பாக தென்னிந்தியப் பகுதிகளில் டைனோசர்கள் பெருமளவில் ஊசாடித்திரிந்துள்ளன என்பது இதில் இருந்து தெரிகின்றது. பெருமளவு முட்டைகள் ஒரே பகுதியில் இடப்பட்டிருப்பதால், மைனோசர்களின் இனப்பெருக்க முறையானது தென்னிந்தியப் பகுதிகளில் குறிப்பிட்ட காலப்பகுதிகளில் நடைபெற்றிருக்கலாம் என எண்ணக்கூடியதாக உள்ளது.

இன்னொரு பெரிய தகவலையும் இது தருகின்றது. ஆறரைக் கோடி ஆண்டு முன்பாக தென்னிந்தியப் பகுதிகளில் திடீரென பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். அதனால்தான் இந்த முட்டைகள் எல்லாம் தண்ணீரினால் அள்ளிவரப்பட்ட மணல்களால் மூடப்பட்டிருக்கும். பொதுவாகவே மிருகங்களுக்கு காலநிலை மாற்றங்கள், பருவ மாற்றங்கள் எல்லாம் உணரும் தன்மை உண்டு. அப்படியொரு நிலை வருமெனில் அவ்விடங்களில் அவை முட்டைகளை இட்டிருக்கமாட்டா. எனவே, திடீரென வந்த பெரு வெள்ளத்தாலேயே இந்த முட்டைகள் மூடுண்டு போயிருக்கவேண்டும்.

மேலும், டைனோசர்களினது முட்டைகளை மூடியிருந்த மணற்குவியல்களின் மேல் எரிமலைக் குழம்பின் உறைந்த பாறைகள் இருந்ததானது டைனோசர்களினது அழிவிற்கு இன்னொரு புதிய காரணத்தையும் கொடுக்கக் கூடியதாக உள்ளது என்கின்றார்கள், இதனைக் கண்டுபிடித்த ஆய்வாளர்கள். ஆறரைக் கோடி ஆண்டு முன்பு பூமி முழுவதிலும் வாழ்ந்த டைனோசர்கள் இன்று இல்லாதிருப்பதற்குக் காரணம், எமது பூமியின் மேல் ஒரு பெரிய எரிகல் வந்து விழுந்ததால் அல்லது பூமியுடன் ஒரு வால்வெள்ளி வந்து மோதியதால் என ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். ஆறரைக் கோடி ஆண்டு முன்பாக நடந்த இம் மோதுகையால் பெருமளவு சக்தி வெளிப்பட்டு (யப்பானில் விழுந்த அணுக்குண்டுகளினைப் போல் பல மில்லியன் மடங்கு வலிமையான) 6 மாதங்களுக்கு பூமியைச் சுற்றி பெரும் புழுதிப்படலம் மூடியிருந்தது அதனால், கதிரவனின் வெளிச்சம் பூமிக்குள் வரமுடியாது போனதால் பூமியில் அன்றிருந்த பல உயிரினங்களுடன் டைனோசர்களும் முற்றாகவே அழிந்து விட்டன என்ற கொள்கை இருக்கின்றது. இந்தத் தென்னிந்தியக் கண்டு பிடிப்பானது ஒருவேளை டைனோசர்களின் அழிவிற்கு எரிமலைச் சீற்றங்களும் ஒரு காரணமாக இருக்குமோ என்ற புதிய ஐயப்பாட்டினைத் தோற்றுவித்துள்ளது.

மேலதிக ஆய்வுகளுக்காக இம்முட்டைகளில் சில, ஜெர்மன் நாட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. டைனோசர் முட்டைகளின் பாதுகாப்பிற்காக பிரத்தியேக பாதுபாப்பு இப்பிரதேசத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்கின்றார்கள்.

அதெல்லாம் சரி, இக்கட்டுரையின் ஆரம்பத்தில் எனது நண்பர் கேட்ட கேள்விக்கு தகுந்த பதிலை இக் கண்டுபிடிப்பு கூறுகின்றது என் நீங்கள் நினைக்கின்றீர்களா? நீங்கள் அப்படித்தான் நினைப்பீர்கள்.

விளம்பரத்திற்காக,
ஆகவை.

# திரையில்...

24ஆம் பக்கத்தொடர்ச்சி

போராட்டங்கள் பற்றி பல படங்கள் வெளிவந்திருந்தாலும் கெய்ரோ ரைமும், திரு. திருமதி ஐயரும் மீண்டும் பார்க்கத் தூண்டுபவை.

## பெண்களின் எதிரொலிகள்

மேலே குறிப்பிட்ட படங்களில் ஒன்றைத்தவிர மிகுதி அனைத்தும் பெண்களால் எடுக்கப்பட்டவை. அனுவில் கணவனை தூக்கியெறியும் துணிச்சலான பெண் அனு. கணவனுக்காக பாதிக்கப்பட்டும், முற்போக்கு கணவனால் நிராகரிக்கப்படும் அனு தனது முடிவை தீர்க்கமாக எடுக்கின்றாள்.

மிராமுக்கு அமீனாவுடன் ஏற்படும் உறவு பின்னர் கணவனை எதிர்த்து அமீனாவின் உணவகத்தில் வேலைக்கு போக தீர்மானிப்பது போன்ற துணிச்சலான தீர்மானங்கள் The World Unseen ல் எடுக்கப்படுகின்றன. I can't think straight ல் பெண்கள் இருவரும் திருமணம் செய்து கொள்கின்றனர். இவ்விரு படங்களும் தீபா மேத்தா நகர முற்பட்ட பிரதேசங்களுள் நகர்கின்றனர். தீபா மேத்தாவும், பாலசந்தரைப் போன்று சமூக எல்லைக்குள் அடங்கி விடுகின்றார். அபர்ணா சென்னும், ரூபா நடாவும் தமது பெண் பாத்திரங்களை முற்போக்கானதாக படைக்கின்றனர். மேற்குறிப் பிட்ட அனைத்து படங்களிலும், ஆண்களினால் உலகில் ஏற்படும் அடிமைத்தனங்களை சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளனர் இந்த பெண் இயக்குனர்கள். இவர்கள் தங்களது வலியை வெளிப்படுத்துவதுடன், அதற்கான தீர்வையும், துணிச்சலையும் பெண்களுக்கு கூறுகின்றனர். ஆண்களின் வன்முறையை அவர்களின் உள்ளார்ந்த குற்ற உணர்வை, அவர்களே அலசும் வகையில் இவர்களது பாத்திரங்கள் படைக்கப்படுகின்றன. பெண்களின் இழிவு நிலையை ஏற்படுத்தும் சமூகத்திற்கு எதிராக தங்களது குரலை வெளிப்படுத்துவதுடன் சமூக நிலை மாற்றத்துக்குமாக போராடுகின்றார்கள். பெண் பாத்திரங்கள் இங்கு அனுதாபத்துடன் படைக்கப்படவில்லை. மாறாக சமூக அதிகார பகிர்வை வலியுறுத்துகின்றனர். ஆண் நிலை மாற்றத்தின் அவசியத்தை வெளிப்படுத்துகின்றன.

http://www.thandora.in/2009/10/blog-post_8615.html என்ற இணையத் தளத்தில் "எனது மகளின் Project விளம்பரப்படம்" என்ற தலைப்புடனான 24 செக்கன் நிமிட விளம்பரப் படத்தை பார்த்தேன். "ஆண்களின் பாடு இனி திண்டாட்டம் தான். அவர்களிடம் வந்தாய்ச்சு அல்லி இராச்சியம் "ஆரம்பமாயிற்று அவள் விகடன்". ஒரு பெண் ஊஞ்சலில் அமர்ந்து அவள் விகடன் வாசிக்கின்றாள். அவள் கணவன் சமைத்துக் கொண்டிருக்கின்றான். அவள் சைகையால் வேகமாக சமைக்குமாறு உத்தரவிடுகின்றாள். பின்னணியில் மேலே குறிப்பிட்ட வசனங்கள் ஒலிக்கின்றன. இந்த விளம்பரப் படம் கூட கல்லூரி மாணவி ஒருவரின் சிந்தனையை வெளிப்படுத்துகின்றது. இது அவரின் துணிச்சல் என்று கூறுவதுடன் உலகம் மாறிவருகின்றது. அதனை ஏற்க ஆண்கள் தயாராக வேண்டும் என்ற எதிரொலியும் தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றிற்கு மாறாக ஆணினால் இயக்கப்பட்ட Such is Life என்ற மெக்சிக்கோ பரீட்சார்த்த படத்தில் இறுதியில் அந்த பெண் தனது பிள்ளைகளையும் கொன்று விட்டு தானும் தற்கொலை செய்ய முயற்சிக்கின்றாள். ஒரு பெண் சந்திக்கும் மிக மோசமான நிலைகள், கொடுமைகள் பதிவாக்கப்பட்டுள்ளது என்பது உண்மையே. பெண்களின் நிச்சயமின்மையை இவர் கூறுகின்றார். ஆனால் அவள் எடுத்த முடிவு மோசமானது. எமது சமூகத்தில் இவ்வாறான சில நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. இப் படம் ஓர் ஆண் இயக்குனரால் எடுக்கப்பட்டமையாலேயே இந்த முடிவு. இல்லையேல் இந்த சமூகத்தை எதிர்த்து வாழ புறப்பட்டிருப்பாள். ஜமெய்க்கா போன்ற நாடுகளில் பெரும்பாலான பெண்கள் தனித்து பிள்ளைகளுடன் வாழ்கின்றனர். வட அமெரிக்காவில் இது சகஜமானது. இயக்குனரின் இந்த முடிவு பிற்போக்குத்தனமானது. இது பெண் மொழிக்கும், குரலுக்கும், ஆண் மொழிக்கும் குரலுக்குமான வேறுபாட்டை காட்டி நிற்கின்றது. மேற் கூறப்பட்ட படங்கள் மூலம் பெண் குரலின் முற்போக்குத் தனத்தையும் அவர்கள் முன்நோக்கி பாயும் திறனையும் காணக் கூடியதாகவுள்ளது.

# அறிஞர் அண்ணாவின் தியானம்!




என் இனிய நண்பர்களே!
வாழ்த்துக்கள்
நலம் பெறப்பிரார்த்திக்கின்றேன்.

உடல் வியாதிகளை விடப் பலருக்கு மனவியாதிகளே அதிகமாக இருக்கின்றது. வெறுப்பு, பயம், ஏக்கம், எதிலும் விருப்பம் இல்லாமை எனப்பலவற்றைக் கூறலாம். அடிப்படை வசதிகள் இல்லாதவருக்கு இவை வருவது இயற்கையே. இவர்கள் இறைவனை வேண்டி முயற்சிகள் செய்து அடிப்படை வசதிகளைத் தேடிக் கொள்ளலாம். அடிப்படை வசதிகளும், நல்ல வாய்ப்பும் உள்ளவர்கள் மனநோய்களால் பாதிக்கப்படுவது ஏன்? சஞ்சலப்படுவது ஏன்? தாயகத்தில் எத்தனையோ துன்பங்கள் எடுத்துச் சொல்ல முடியாத இடர்கள் இவற்றினை எண்ணிப் பாருங்கள் என்று சொன்னாலும் சிலர் எண்ணுவது இல்லை கேட்பதும் இல்லை. இன்று பொறுமையாக கேட்கும் அடக்கமே தடம் புரண்டு தத்தளிக்கின்றது. ஏதும் சொன்னால் சிலர் தலையை ஆட்டி விட்டு போகின்றார்கள். பலர் தலையை கூட ஆட்டுவ தில்லை. மனத்தின் இறுக்கம் தலைக்குத்தடை போட்டு ஆடாமல் அசையாமல் விறைப்பாக்கியிருக்கின்றது போலும்.

மனச்சஞ்சலம் கொந்தளிப்பு இறுக்கம் முதலியனவற்றைப் போக்க தியானம் ஒரு வழி என்று போதிக்கப்படுகின்றது. சிலருக்கு தியானமும் சரிப்பட்டு வருவதில்லை. ஏதாவது ஒன்றை அல்லது கடவுளை நினைத்துக் கொண்டு நீண்ட நேரம் அமைதியாய் இருந்து தியானம் கைகூடும் நிலைக்கு உயர்வது இலேசான காரியமன்று. ஒரு சிலரைத்தவிர பலருக்கு தியான இருப்பு கொள்வது முடிவதில்லை. ஒன்றை நினைத்து இருக்க எண்ணினால் மனம் பலதை நினைத்து அலைகின்றது. உடல் வீட்டுக்குள் இருக்கும், மனம் காட்டைத் தேடும் அல்லது தெருவில் நிற்கும். பொட்டுக்குள்ளால் எட்டிப்பார்க்கும் நாய்க்கு பொல்லால் அடிப்பது போல, மனம் தியானிக்க எண்ணும் போது எங்காவது எட்டிப்பார்த்தால் புத்திசித்தத்தால் அடித்து வழிக்கு கொண்டு வாருங்கள் என்றார் யாழ்ப்பாணத்து யோகசுவாமிகள். அப்படி அடித்தாலும் அது அடங்க மாட்டேன் என்கிறது எனப் பலர் அங்கலாய்க்கிறார்கள். பின் என்ன செய்யலாம் ஏதாவது செய்து நமது மனத்தை வழிக்கு கொண்டு வர வேண்டும். இல்லையேல் நம்மையும் நம்மைச் சார்ந்தவர்களையும் நமது மனம் குழப்பிவிடும். உடல் நோய்களைத் தீர்க்காது போனால் அது முற்றி ஆளையே முடித்து விடும். மனம் நோய்களை மாற்றாது போனால் மாறாட்டமும், போராட்டமுமாய் வாழ்க்கை கீழ்க்கை ஆகிவிடும். நண்பரே!

என்ன? கீழ்க்கை என்று ஒரு புதுச்சொல் உண்டாக்கி இருக்கிறதே என்று யோசிக்கின்றீரா? வாழ்க்கைக்கு எதிர் சொல் கீழ்க்கை என்று நான் ஒரு சொல்லை ஆக்கியிருக்கின்றேன். நன்மை - தீமை, அன்பு - வன்பு, இனிப்பு - கரிப்பு என்பது போல வாழ்க்கை- கீழ்க்கை உருவாக்கியிருக்கின்றது. நிற்க, மனநோயாளர் பற்றி ஒரு காலத்தில் எழுத்தாளர் ஜெயகாந்தன் எழுதியிருந்தார். மனநோயாளர்களில் பலர் மருத்துவ மனைகளிலும் வேறு சிலர் வெளி உலகில் உலாவிக்கொண்டும் திரிகின்றார்கள் என்று எழுதியிருந்தார். "அவர்கள் உள்ளே இருக்கின்றார்கள்" என்பது மருத்துவமனை நோயாளர்கள் பற்றியது. அவர்கள் வெளியே உலாவிக்கொண்டிருக்கும் மனநோயாளர்கள் பற்றியது. சிறைக்குள்ளே இருக்க வேண்டிய சிலர் வெளியே உலாவிக்கொண்டிருப்பதும் வெளியே இருக்க வேண்டியவர்கள் சிறைக்குள்ளே வாடிக்கொண்டிருப்பது எவ்வளவு கொடுமையோ, அவ்வளவு கொடுமை மருத்துவ மனையில் இருக்க வேண்டியவர்கள் வீதிகளிலே வீடுகளிலே வாழ்ந்து கொண்டு இல்லை, வசித்துக் கொண்டிருப்பது. வசித்தல் பற்றியும் ஒரு வியாக்கியானம் தரவிரும்புகின்றேன். சின்ன வகுப்பில் தமிழ் வாத்தியாரிடம் படித்திருப்பீர்களே! மனிதர்கள் வீட்டில் வாழ்வார்கள். மிருகங்கள் காட்டில் வசிக்கும் என்று. இன்று பலர் வீட்டில் வசிக்கின்றார்கள் என்று எழுதுவதைக் கவனித்தீர்களா? 'யாழ்ப்பாணத்தில் பிறந்து, கொழுப்பில் வசித்து , பின்பு கனடாவுக்கு வந்து மிசிசாகாவிலும் வசித்தவர் காலமானர் என்று எழுதப்படு கின்றதே. கொலை! கொலை! தமிழ் கொலை!

உடல் நோய்கள் போல் மனநோய்களும் ஒருவருக்கு வருவது இயற்கை. உடல் நோய்களை ஆரம்பத்திலேயே மாற்றுவதால் நன்மை உண்டு. மனநோய்களையும் வராமல் தடுக்கலாம். வந்தாலும் போக்கலாம். உடல் பயிற்சி செய்வது போன்று மனப் பயிற்சி செய்து வந்தால் மனநோய்கள் வராமல் தடுக்கலாம் என்பது மனநோய் மருத்துவர்களின் அறிவுரை. மனநோய் மருத்துவர்கள் அனைவரும் கூறும் அறிவுரை தியானம் இருத்தல் பற்றியதாகவே இருக்கின்றது. தியானம் மனக்கோளாறு களைக் களையும் மருந்தாகும். எண்ண அலைகளை அடக்கும் கடிவாளம். மன உறுதியை தரும் உரம். பரபரக்கும் உணர்வுகளைப் பக்குவமாக்கும் பயிற்சி. எண்ணங்களை அலைமோதவிடாது ஒன்றிலேயே குவிக்க வேண்டும். மகேஷ் யோகியின் ஆழ் நிலை தியானப் பயிற்சி பெரும் பயனை உண்டாக்கியிருக்கின்றது. அண்ணாமலை பல்கலைக்கழகத்திலே மொழியியல் துறை தவைராய் இருந்த பேராசிரியர் தெ. பொ மீனாட்சி சுந்தரனார், மகேஷ்யோகியின் ஆழ்நிலைத் தியானத்தை வியந்தும் விளக்கியும் 'தேனிப்பு' என் ஒரு நூல் எழுதியிருந்தார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு. திருவாசகத்தில் வரும் "சிரிப்பார், களிப்பார், தேனிப்பார்" என்ற பாடலின் தேனிப்பு என்ற சொல் தியானத்தை குறிக்கும் என்றும், தேனிப்பு என்பது தேனை நாக்கில் விட்டு சுவைத்து சப்புக் கொட்டுவது போல் தேவனை - சிவனை சிந்தையில் வைத்து சப்புக் கொட்டலே தியானத்தின் உச்ச நிலை என்று பேராசிரியர் எழுதியிருந்தமை நினைவில் வந்து தேனிக்கின்றது.

தியானம் இருத்தல் என்பது பலருக்கு இயலாமையால் இருப்பது உண்மையே. இதற்கு மாற்றாக ஈடாக என்ன செய்யலாம். சுலபமான வழி ஒன்று உண்டு. அது வாசித்தல் என்பதாகும். உங்களுக்குப் பிடிப்பான புத்தகங்களை அல்லது சஞ்சிகைகளை, கதை, கட்டுரைகளை இரசனையோடும் ஈடுபாட்டுடனும் வாசிக்கும் பழக்கத்தை உருவாக்கினீர்களானால் அதுவே தியான நிலைக்கு சமனான பயிற்சியாய் அமையும். வாசி வாசி என்று வாசித்த தமிழ் சிவா! சிவா! என்று சிந்தையில் வந்ததாக கவிஞர் கண்ணதாசன் ஒரு முறை எழுதியிருந்தார். வாசிப்பை தியானமாக்கியவர்கள் பலராவர். இவர்களில் தமிழ் நாடு முதல் அமைச்சராய் விளங்கிய அறிஞர் அண்ணா குறிப்பிடத்தக்கவர்.

அறிஞர் அண்ணா தி.மு.க என்னும் அமைப்பைத் தொடங்கி நடத்தியவர். ஒரு கட்சியை - அமைப்பை நடத்துவது என்பது மிகக் கடினமான காரியமாகும். எதிர்க் கட்சிகளின் பூசல்களை விட உட்கட்சி பூசல்கள் போட்டிகள் ஒரு தலைவனின் தலையை மலைகளின் பாரமாய் அழுத்தும். இதற்காக அண்ணா கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு என்ற மூன்று சுலோகங்களை மந்திரச் சொற்களாய் உருவாக்கி கட்சியை ஒரு குடும்ப வட்டமாய் பாச நேசப் பிணைப்புடன் நடாத்தினார். தோழர்களே! தோழியர்களே! என்ற விழிப்பு ஓசை எங்கும் பரவி வியாபித்திருந்த தமிழ் நாட்டில் தம்பியரே! தங்கைகளே! என்று குடும்ப உறவை அழைப்பது போல் மேடையில் நின்று அழைப்பார். உரையாற்றுவார். மந்திர தந்திரங்கள் கூட சில வேளைகளில் வேலை செய்வதில்லை. ஏன் என்று தெரிவதும் இல்லை. இது ஒரு இயற்கை ரகசியம். சிதம்பர ரகசியம் போன்றது.

1963ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். தி.மு.கவுக்குள் உட்கட்சிப்பூசல் முற்றி முறுகி வேலூரில் நடந்த பொதுச்சபைக்கூட்டத்தில் வெடித்தது. அன்று சொல்லின் செல்வராய் கணிக்கப்பட்ட ஈ.வெ.கி சம்பத்தால் உருவான கருத்து முரண்பாடு கசப்பு வெறுப்பாகி கட்சி இரண்டாக உடையும் சூழலை உருவாக்கியது. அன்று காலை தொடங்கி மாலைவரை நடந்த கூட்டத்தில் அங்கத்தவர் களின் மனங்களில் கொந்தளிப்பான உணர்ச்சி கொதித்துக் கொண்டிருந்தது. இரவு பத்து மணிக்கு மேல் சென்றும் கொதி நிலை குறையவில்லை. அறிஞர் அண்ணா கூட்டத்தை முடித்து விட்டு தான் தங்கியிருந்த விடுதிக்குச் சென்றுவிட்டார். கட்சிக்காரர்களும் கலைந்து போய்விட்டார்கள். ஈ.வெ.கி. சம்பத்துக்கு மனம் அடங்கவில்லை. அரசியல் நிலைப்பாடு பற்றிப் பேசுவதற்காக அண்ணா தங்கியிருந்த இடத்துக்கு நள்ளிரவு பன்னிரண்டு மணியளவில் சென்றார். அங்கே அண்ணா இருந்த அறையில் வெளிச்சம் இருந்தது. அண்ணா இன்னும் நித்திரைக்குப் போகவில்லை. நல்லதாகிவிட்டது என்று நினைத்துக் கொண்டு அறைக்குள் நுழைந்த சம்பத் திகைத்துப் போனார். சிறிது நேரம் நின்று நிதானித்தார். அப்பொழுது அண்ணா சம்பத் வந்தது கூடத் தெரியாமல் ஒரு புத்தகத்தை படித்துக் கொண்டிருந்தார். ஆழ்நிலைப் படிப்பு அது. நிதானிப்பும் தியானிப்பும் கலந்த கால அமைதி. அண்ணா படித்து கொண்டிருந்த புத்தகம் அப்பொழுது வெளியாகியிருந்த D.H லோறன்ஸ் எழுதிய 'லேடி சட்டர்லிஸ் லவ்வர்' என்ற பிரச்சினைகளைக் கிளப்பிய ஒரு காதல் நவீனம். செக்ஸ் என்ற லற்றின் மொழிவழி ஆங்கிலத்துக்கு வந்த பாலினம் என்ற கருத்தைக்குறிக்கும் சொல்லை பாலியல் தொடர்பு, உறவு என்ற என்ற அர்த்தத்தில் பயன்படுத்திப் பிரபலமடைந்த நாவலை அண்ணா கொதிக்கும் சூழ்நிலையில் அதுவும் இரவு பன்னிரண்டு மணிக்கு படிக்கிறார் என்றால் அவருடைய அரசியல் பொறுப்பை கடமையை கண்ணியத்தை சந்தேகிக்க வேண்டியுள்ளது என்று தீர்மானித்தார் சம்பத்.

உடனே சம்பத் தனது இருப்பிடத்துக்குத் திரும்பினார். அண்ணா பற்றியும் அவர் படித்துக் கொண்டிருந்த நாவல் பற்றியும் பின் நாட்களில் பத்திரிகைகளில் எழுதினார். கூட்டங்களில் பேசினார். கட்சி கடகடத்துப் போயிருக்க திருவாளர் அண்ணாத்துரை காதல் கதை படிக்கிறார் என்று கிண்டல் தொனியில் பேசினார். அறிஞர் என்ற பதத்தை நீக்கி 'திருவாளர்' என்ற பதத்தை பிரயோகித்து அப்பொழுது 1964இல் பேசியதை நான் நேரில் கேட்டிருக்கிறேன்.

இதுபற்றி அண்ணா எந்த அபிப்பிராயத்தையும் சொல்லாமல் தனது கட்சி வாழ்க்கையை நடாத்தினார். மனம் கொந்தளித்த நேரத்தில் கவலைகள் கசக்கிப் பிழிந்த காலத்தில், சஞ்சலம் மனதை சல்லடை போட்ட வேளையில் அண்ணா அவற்றையெல்லாம் அடக்கி அமைதிப்படுத்த ஒரு தியான நிலைக்கு மனதைக் கொண்டுவர அந்த நாவலை வாசித்தார் என்பதனை சம்பத் போன்றவர்கள் உணரவில்லை. அரசியல் கோணத்தில் பார்வையைச் செலுத்தியவர்கள் ஆன்மீகப்பக்கமாகவும் திரும்பி யோசித்திருந் தால் அண்ணாவின் தியானப் போக்குப் புரிந்திருக்கும். அண்ணாவின் வாசிப்பு தியானம் அவர் புற்றுநோய் அறுவைச் சிகிச்சைக்கு தியேட்டருக்கு அழைக்கப்பட்ட போது கூட பாதி படிக்கப்பட்ட புத்தகத்தை கையில் வைத்துக்கொண்டு மீதியை படித்து முடித்து விட்டு வரலாமா என்று டாக்டரிடம் அனுமதி கேட்டாராம்.

வாசிப்பு மனதை தியான நிலைக்கு கொண்டு போகும் ஒரு செயல்முறையாகும். செய்தியை கருத்தை தெரிந்து கொள்வதோடு மனத்தையும் அமைதிப்படுத்தும் சாதனையாக வாசிப்பு திகழ்கிறது. ஒரு நாளைக்கு பத்து இருபது பக்கங்களையாவது படித்துவிட்டுத் தான் படுப்பது என்று ஒரு ஒழுங்குமுறையை ஏற்படுத்தினீர்களானால் நீங்கள் தினமும் தியானம் செய்தவர்கள் ஆவீர்கள்.

இருபது பக்க வாசிப்பு இருநூறு பக்கங்களாயும் நீளலாம். பயன் - மனம் அமைதிப்படும், ஆழ்நிலைப்படும். உடல் ஆறுதல் அடையும். ஆரோக்கியம் கொள்ளும். வேறு என்ன?

பிறபின்பு.



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)


## திவ்ய ஆட்டுக்கால் தேவி ஜோதிடம்

ஜாதகம் கணித்தல், திருமணப்பொருத்தம், கல்வி, குழந்தைப்பேறு, திருமணத் தடை நிவர்த்தி.

அழையுங்கள்: மீனாட்சி சுந்தரம் R.

Phone - **416.439.2002**

***67 Milford Haven Drive,***
***Scarborough, ON. M1G 3C9 Canada.***
***Attukaljothidam@gmail.com***



# "Cairo Time"

Cario Time ஒரு மெல்லிய கவிதை, எப்போதாவது ஜன்னலுக்கு வெளியே தூரப் பார்வை பார்த்து "Life is Good" என்று சொல்லி இருப்பீர்கள், அந்தக் கணம் தான் "Cairo Time".



## - கிறிஸ்ரி-

படு slow movie! - ஆனால் படம் முடியும் போது ஏன் எப்போதுமே Life இல் நாம் ஓடிக் கொண்டே இருக்குறோம் என்ற கேள்வி வருகிறது.

Vacation க்கு Cairo போகும் Middle aged wife, அவருடன் இணைந்து கொள்ள முடியாமல் Gaza வில் stuck ஆகி விடும் hus-band. Cairo வில் தனிமையில் வாடுகிறார் நாயகி.
Cairo வாசியான தன் husband இன் friend உடன் Cairo வை சுற்றி வருகிறார். கவிதை அங்கே ஆரம்பிக்கிறது (Sorry படம் அங்கே ஆரம்பிக்குது!)

சின்ன சின்ன விடயங்களை வாழ்க்கையின் நெடுகிலும் நாம் தொலைத்து விடுகிறோம், நின்று நிதானித்து தேட நேரம் கிடைப்பதில்லை or இருப்பதில்லை. அந்த நேரம் நாயகிக்கு "Cairo Time" இல் கிடைக்கிறது.

அண்மையில் நடைபெற்ற Toronto International Fim Festival (2009) இல் Best Canadian Feature Film இக்கான விருது "Cairo Time" திரைப்படத்துக்குக் கிடைத்திருக்கிறது.
"Sometimes you need to forget the rules and remember your Heart!" - இதுதான் Cairo Time" இன் தித்திப்புச் சமாசாரம்!

கணவரின் நண்பருக்கும் பட நாயகிக்கும் மெல்ல மெல்ல நெருக்கம் ஏற்படுகிறது. அதில் தான் "கண்ணியம்" காத்திருக்கிறார் பெண் இயக்குனர் Ruba Nadda. படத்தின் நாயகி Patricia Clarkson ஒரு பேட்டியில், தான் படத்தில் செய்யும் மிகக் கவர்ச்சிகரமான காரி யம்(!?) Coffee குடிப்பதுதான் என்று Joke அடித்திருந்தார்.

life ஐ எப்படி எப்படியோ வாழ வேண்டுமென்ற கனவு ஒவ்வொருவருக்கும் இருந்திருக்கும், நாம் அதை பல காரணங்களுக்காக விட்டுக் கொடுத்து விடுகிறோம். ஆனால் அதே கனவு நம் கண் முன்னே கண் சிமிட்டும் போது, மீண்டும் அதை வாழ்ந்து விட நம்மில் எத்தனை பேருக்கு தைரியம் இருக்கிறது?

Cairo Time ஒரு Relaxed Experience! படம் பார்ப்பதற்கு கொஞ்சம், நிறையவே பொறுமை தேவை!

வாழ்கையில் வாய்ப்பு இருந்தும் நீங்கள் நடந்து செல்லாத பாதைகளுக்காக எப்போதாவது முகம் மூடி அழுதிருக்கிறீர்களா? - அப்படியானால் "Cairo Time" நிச்சயம் உங்களுக்குப் பிடிக்கும்!

படம் முடிவில் நமக்கும் இப்படி ஒரு "Cairo Time" கிடைக்காத என்று மனசு ஏங்குகிறது. அங்கு ஜெயிக்கிறார் இயக்குனர்.







## விற்பனையாகின்றன!
### கனி விமலநாதனின்
### மூன்று நாவல்கள்



**❶ வேற்றுக்கிரக மனிதர்கள்**

யார் இந்த வேற்றுக்கிரக மனிதர்கள்?
அவர்களின் பின்னணி என்ன?
வேற்றுக்கிரக மனிதர்களை சந்தித்தவர்கள் உண்டா?
வேற்றுக்கிரக மனிதர்களுக்கும் எங்களுக்கும் என்ன தொடர்பு?

**❷ பிரபஞ்சம் பற்றிய வியப்பான செய்திகள்**

எமது பிரபஞ்சம் எப்போது தோன்றியது? தோன்றியபோது எப்படி இருந்தது?
எவ்விதம் இவ்வளவு பெரிதாக ஆகியது?
பிரபஞ்சத்தின் முதல் நட்சத்திரம் எவ்வாறு தோன்றியது?

**❸ இனம்தெரியாத பறக்கும் தட்டுகள்**

பறக்கும் தட்டுகள் என்பது உண்மைதானா?
அவை எங்கிருந்து வருகின்றன?
பறக்கும் தட்டுகளை கண்டவர்கள் உண்டா?

**பிரபஞ்ச இரகசியங்களை தெளிவு படுத்தும் நூல்கள்**

**கிடைக்குமிடம்: முருகன் புத்தகசாலை**

***1241 Ellesmerer Road - Midland & Ellesmere***
***GTA Square - 5215 Finch Ave. E., Middlefield & Finch***


## எட்டாவது சர்வதேச தமிழ் குறுந்திரைப்பட விழா படைப்புகளுக்கான கோரல்

சுயாதீன கலை திரைப்பட மையத்தால், கனடாவின் ரொரன்ரோ நகரில் நடத்தப்படும் வருடாந்த சர்வதேச குறுந்திரைப்பட விழாவில் பங்குபற்றுவதற்கான குறுந்திரைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன.

படைப்புக்கள் ஆங்கில துணைத் தலைப்புக்களை கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.

தாயக நிலைமையை வெளிப்படுத்தும் படங்கள் வரவேற்கப்படுகின்றன.

விழாவில் சிறந்த திரைப்படைப்புக்களுக்கான 3 பரிசுகள் வழங்கப்படும். அவையாவன:

- முதற் பரிசு -- 500 கனடிய டொலர்
- இரண்டாம் பரிசு -- 300 கனடிய டொலர்
- மூன்றாம் பரிசு -- 200 கனடிய டொலர்

### படைப்புக்கள் பின்வரும் விதிகளுக்கமைய சமர்ப்பிக்கப்பட வேண்டும்:

- படைப்புக்கள் தை 15, 2010க்கு (Jan. 10, 2010) முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
- படைப்புக்கள் 30 நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்களின் மொழி தமிழாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்களுடன் அதில் பங்குபற்றிய தொழில் நுட்பக்கலைஞர்கள், நடிகர்கள் பட்டியல் இணைக்கப்படல் வேண்டும்.
- படைப்புக்களின் தயாரிப்பாளரின் கையொப்பத்துடன் கூடிய கடிதம் இணைக்கப்படல் வேண்டும்.
- தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது.
- படைப்புக்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:

Tam Sivathasan
Exceutive Director - IAFS
1345 Morningside Ave., Unit # 8, Toronto, ON. Canada, M1B 5K3

மேலதிக தொடர்புகளுக்கு:

1-416-450-6833, 1-416-804-3443, rathan@rogers.com,
iafs@rogers.com, www.iafstamil.com
*Independent Art Film Society of Toronto*

# HIGHRISE CONDOS / TOWNHOMES
AT METROGATE

TRIDEL®
BUILT FOR LIFE

## HWY 401 / KENNEDY - TORONTO, CANADA

PRICE STARTING FROM
$199,000
Completion - Spring 2012



## OPEN HOUSE
on Saturday **November 14**, 2009
from 11am to 5pm

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife GTA Realty Inc., Brokerage***
1711 McCowan Road, Unit 206, Toronto, ON, M1S 2Y3

**For Your Early Booking or Information Please Call**
**416.321.6969**
*Independently owned and operated.

# நேர்மை தரும் சிறப்பு

இறைவனைப் போற்றி துதித்துக் கௌரவிப்பதும் வாழ்வை தார்மீகத்துடன் வாழ்ந்து கௌரவிப்பதும் அத்துடன் என்னையும் நேசித்துக் கௌரவிப்பதுமே வாழ்வின் முக்கிய நோக்கம் என்பதை உணர்ந்து அதை இப்போ நான் ஏற்றுக்கொள்கிறேன்.



நேர்மை தான் வாழ்வு. முழுமையான இறைசக்தியின் சிறு துகளாகிய உனது ஆன்மாவிற்கு நன்மை செய்வதற்காக ஆண்டவன் அளிக்கும் அழைப்பும் சந்தர்ப்பமும் தான் உனது வாழ்வு. இறைவன் நல்லவர் என்பது உனக்குத் தெரியும் அல்லவா? நீ நல்லவராகச் செயற்படுவதை எதிர்பார்த்திடும் வாழ்வு அதே நன்மையை உனது நேர்மைக்குப் பரிசாகத் தரும். ஆமாம், நேர்மை! உனக்குள்ளிருந்து வெளிவரும், உனக்கு நன்கு பரிச்சயமான நற்குணம் தான் அந்த நேர்மை. எந்த நிலையிலும் தார்மீகத்துடன் இதயபூர்வமாக செயற்படுபவர் நான் என்பதை மனப்பூர்வமாக உணர்ந்து, அதை ஆமோதிப்பவர், நீ நேர்மை. முதலில் உனக்கும், பின் பிறருக்கும் உன்னால் இயன்றளவு சிறப்பாகச் உதவிட எப்போதும் ஊக்கத்துடன் செயற்படுபவர் அல்லவா?

நேர்மை, உண்மையை அறிந்திடுவதில் ஆர்வம். உண்மையைத் தேடுதல், உண்மையைக் கற்றறிந்து கொள்ளுதல், உண்மையைப் பரப்புதல், உனக்காகவும் பிறருக்காகவும், உண்மைக்காகவும் முனைந்து செயற்படுதல். வாழ்வில் உனக்கு அமைந்த சகலவற்றையும் அங்கீகரித்து கடவுளையும் உன்னையும் கௌரவித்திட வேண்டியவற்றைத் தேர்ந்தெடுத்து மற்றவற்றைக் குறைகூறாது வாழ்தல். சரி - பிழை எனும் பாகுபாடற்றது நேர்மை. வாழ்வெனும் பிரபஞ்சத்தில் உனது தகைமைப் பெறுபேறுகளைக் குறித்து வைத்து, சன்மானம் தந்து, உன்னைச் சதா புதுப்பித்துக் குணமாக்கி ஆசீர்வதிப்பது இந்த நேர்மை. உனது ஒவ்வொரு சிந்தனையும் அதற்குத் தெரியும். உனது ஒவ்வொரு சொல், ஒவ்வொரு செயலும் அதற்கு அத்துபடி. இவற்றினுள் மறைந்திருக்கும் உனது சுயநல உத்தேசமும் அதற்கு நன்கு தெரியும். உனது சிந்தனை, சொல், செயல் மூன்றும் உண்மையின்றி போலியாக இருந்தால் அதற்குத் தகுந்தவாறே பிரபஞ்சம் உனக்குப் பதில் அளிக்கின்றது.

வாழ்வுப் பிரச்சனைகளில் தத்தளித்து நேர்மையிலிருந்து விலகி நீ இன்றுவரை வாழ்ந்திருக்கலாம். அது பரவாயில்லை. இன்று சற்று நிதானித்து உன் நேர்மையைக் கண்காணித்து அலசி வரையறுத்துக் கொள். வாழ்வில் நீ இப்போ என்ன செய்கிறாய்? ஏன் அதைச் செய்கிறாய்? எப்படி அதைச் செய்கிறாய்? நீ செய்பவற்றிற்கு என்ன வெகுமதி உனக்குக் கிடைக்கிறது? என்ன வெகுமதி கிடைக்க வேண்டும் என நீ எதிர்பார்க்கிறாய்? உனது செய்கைகளினால் உன்னையும் பிரபஞ்சத்தையும் இறைவனையும் நீ கௌரவிக்கின்றாயா? சிந்தித்துப் பார்!

**எனது மனதைக் கண்காணித்து வரையறுத்து நேர்மையாக வாழ்வதே இறைவனையும் என்னையும் கௌரவிக்கும் நல்வழி என்பதை உணர்ந்து இன்றுமுதல் நானாகவே என் தவறுகளைத் திருத்திக்கொள்ள ஆரம்பிக்கிறேன்.**

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 157

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புரூடி

NuTek COMPUTERS
www.nuTechComputer.com
☑ Virus Removal
☑ Internet Sharing
☑ Computer Tune Up
☑ Computer Repair
அனைத்து கணணி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES



வீடு, வியாபார நிலையங்கள் வாங்க - விற்க
எந்தவித அடமானக் கடன்களும் பெற
Direct - 416.575.5055
Anton Jeeva
Real Estate / Principal Mortgage Broker
RE/MAX

FOR SALE $358,000

• 27 Brimstone Cres
• Middlefiels & Finch
• 3+1 bedroom
• 3 washrooms
• 1 kitchen
• Detached house 2-Storey

For Sale $419,000

• 42 Cragg Cres.
• Detached, 2-Storey
• 4 bedrooms
• 4 washrooms
• Central Air Condition
• Well Maintained

FOR SALE $569,900

• 2411 Canal Rd E
• Simcoe Rd To Canal E
• 2 + 2 Bedrooms
• 2 Washrooms
• 2 Fridges, 2 Stoves, Washer, Dryer, All Elf, All Window Coverings. Farm Equipments Are Available At Reduced Cost.

Condo. for Sale $189,000

• Mccowan / Hwy 401
• Bedroom : 2
• Washroom : 2
• One Parking & One Locker Included.
• Ttc At Door Step. Close To All Amenities. Scarboro. Town Centre Next Door.

FOR SALE $6,500,000

• HWY 401& Markham
• Height #189-16' To Joists , #195-14' To Joists , Truck Loading Docks And Grade Level Docks Available. Tons Of Parkings Available.

For Sale $369,000

• Markham/Steeles
• Detached, 2-Storey
• Bedroom : 4
• Washroom : 3
• Approx.2000 Sq.Ft.
• All Appliances Incl.

NEW TORONTO ICE CONDO. PHASE II

VIP access before Public

For Sale $299,900

• 35,000 sq.ft
• Hwy 7 & Marmora
• Very Large Frontage On Hwy 7 , Price Includes All Fixtures & Furnishings. Rooms Are Rented On Weekly / Biweekly Basis.

Mortgages & Mortgages Inc.
Authorize Brokerage by FSCO
REMAX VISION REALTY INC.
Speciallized in Power of Sale Homes

MAX 2000
குளிர் கால சுற்றுலா Disny World வரை
மார்கழி 27இல் இருந்து 2010 தை 3 வரை 8 நாட்கள் 7 இரவுகள்
பசுமையான பழைய நினைவுகளை நினைவூட்டும் பழைய புதிய Karaoke பாடல்களுடன் சுவாரசியமான சொகுசு பயணம்.
பாடும் வல்லமை படைத்தவர்களை நிச்சயமாக அன்போடு வரவேற்கின்றோம்.
பயணத்தில் பயணிகளை மகிழ்ச்சிப்படுத்தி மகிழ்விப்பவருக்கு தகுந்த பரிசும் வழங்கப்படும்.
மலரும் புதிய ஆண்டினை அழகிய அலங்கார ஒளிக்கதிர்களையும் வான வேடிக்கைகளையும் கண் குளிர கண்டு மகிழ ஒரு முறை வந்து பாருங்கள். எவ்வளவு மகிழ்ச்சியான பயணம் என்று.

1. வேர்ஜினியாவில் Luray Caverns (குகை), இயற்கைக் காட்சிகள்.
2. யோஜியாவில் உலகிலேயே மிகப் பெரிய மீன் தடாகம்
3. Orlando Disney World (மூன்று நாட்கள்)
4. Daytona Beach
5. South Carolina Sight Seeing
6. Pennsylvania - Grove city outlet mall. Shopping Center
பத்து வயதுக்கு குறைந்த குழந்தைகளுக்கு $250 மட்டுமே. சிறுவர்கள் கட்டாயமாக அவர்கள் பெற்றோருடன் தங்கவேண்டும்.
தை 03ஆம் திகதி இரவு பத்து மணிக்கு முன்பதாக Toronto வை வந்தடைவோம்
விலை விபரம் : தங்குமிடம், பேருந்து, காலை உணவு உட்பட நான்கு பேர் தங்குவதாயின் நபருக்கு : $490/ மூன்று பேர் தங்குவதாயின் நபருக்கு : $580 / இரண்டு பேர் தங்குவதாயின் நபருக்கு:$640 / ஒரு King கட்டில்.

இந்தியச் சுற்றுலா - 15 நாட்கள்
கனடிய குளிர்காலத்தை முன்னிட்டு AVM MAX 2000 நிறுவனத்தின் இந்திய சுற்றுலா ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. சுற்றுலா ஸ்தலங்கள் சென்னை, காஞ்சிபுரம், மகாபலிபுரம், பாண்டிச்சேரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, செட்டிநாடு, பெரியார், கொச்சின் மற்றும் படகுச் சவாரி, விமான கட்டணம் (போய்வர), தங்குமிடம், 3 வேளை உணவு, Shopping, உள்ளூர் Transit மற்றும் 24 மணிநேரமும் தமிழில் உரையாடக்கூடிய தமிழ் கனடியன் சுற்றுலா வழிகாட்டியுடன் (Tourist Guide) ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
Price $2999. Date - December 5 to December 20. 2009.
மேலதிக தொடர்புகளுக்கு AVM MAX 2000
விபரங்களுக்கு: 416-609-2542